27
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059







நதி 27 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2017

# பழமைவாதக்கட்சித் தலைவராக அன்றூ ஷியர் தெரிவு!

கனேடிய மத்திய அரசின் தேர்தலில் பங்குபற்றும் பிரதான கட்சிகளில் ஒன்றான பழமைவாதக்கட்சியின் தலைவராக சஸ்கச்சுவான் மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான அன்றூ ஷியர் 2017 மே 27 இல் நடைபெற்ற கட்சித் தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்றார்.



2015 ஒக்ரோபர் 19 இல் நடைபெற்ற கனேடிய நாடாளு மன்றத்திற்கான தேர்தலில் அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீபன் காப்பரின் தலைமையிலான பழமைவாதக்கட்சி தோல்வியைத் தழுவியதால் ஸ்ரீபன் காப்பர் கட்சித்தலைமைப் பொறுப்பில் இருந்து விலகினார்.

2015 நொவம்பர் 5இல் பழமைவாதக்கட்சி தமது இடைக்காலத் தலைவராக றோனா அம்புறோஸ் ஐ தெரிவு செய்தது. அவர் பழமைவாதக்கட்சியின் நிரந்தரத் தலைவர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும் தேர்தலை 2017 ஆம் ஆண்டிற்குப் பிற்போட்டார். கட்சித்தலைமையைத் தெரிவு செய்யும் குழு, தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெறும் திகதியை 2017 மே 27 என நிர்ணயம் செய்தது.


பழமைவாதக்கட்சியின் தலைவர் தெரிவில் பழமைவாதக்கட்சியின் உறுப்பினராக 2017 மார்ச் 28 இற்கு முன்னர் இருந்தவர்கள் மட்டுமே வாக்களிக்க உரிமை உடையவர்கள். நாடு முழுவதும் 259,010 பேர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்கள்.

இத்தேர்தலில் கனேடிய நாடாளுமன்றத்திற்கான 338 தொகுதிகளிலும் உள்ள பழமைவாதக்கட்சியினர் தொகுதிவாரியாகக் கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்கு வாக்களிப்பர். ஒவ்வொரு தொகுதியிலும் பெற்ற வாக்குகளின் வீதப்படி வேட்பாளர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். இதனால் ஒரு தொகுதியில் ஆகக்கூடிய புள்ளியாக ஒரு வேட்பாளர் 100 மட்டுமே எடுக்க முடியும். ஒரு தொகுதியில் 10பேர் வாக்களித்தால் என்ன, 1000 பேர் வாக்களித்தால் என்ன அங்கு ஒரு வேட்பாளரால் ஆகக்கூடிய புள்ளியாக (அதாவது எல்லோரும் ஒரு வேட்பாளருக்கே வாக்களித்தால்) 100 மட்டுமே பெறமுடியும்.

இவ்வாறு கனடா முழுவதிலும் உள்ள 338 தொகுதியிலும் இருந்து ஒரு வேட்பாளரால் பெறக்கூடிய அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை 33,800 ஆகும். இதனால் 16,901 புள்ளிகளைப் பெறும் வேட்பாளரே கட்சித்தலைமைப் பகுதிக்கு வென்றவராகத் தெரிவு செய்யப்படுவர்.

பழமைவாதக் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில் 16 வேட்பாளர்கள் போட்டியிட முன்வந்தனர். அவர்களில் மூவர் பின்னர்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)




























$629,900
Semi-Detached - New Market
3 BR, 3 WR $629, 900
SOLD OVER ASKING
Listed and sold by Thas within 5 days
Free Hold Townhouse - Lindsay
7 Years New BR: 3+1 WR: 3
$649,900
Detached - Brampton
4 BR, 3WR, Fin. Basement
Open House
$769,000
Premium Size Pool Lot!
2 Years New-Detached, Courtice
BR 4, WR 3
POWER OF SALE
$379,900
Detached - 1 hour from Toronto
BR 3 WR 1
$279,900
2 Storey Condo Town House -Oshawa
BR 3 , WR 3- Low Maint. Fee
$549,900
NOT ON MLS
CONDO - Markham
BR 2 + 1 2 Full WR, Maint. Fee: $140
Thas....
Solid negotiator...
15 Years of business experience...
Real Estate Investor & advisor...
Sellers: Call me only; if you want top dollar for your home.
Buyers: Not enough down payments? You are Approved; Call me first.
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com
Not intented to solicit buyers/sellers under contract. All properties advertised herein may not be listed by Thas.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com


Cottages, Homes,Farms, Lands...
RICE LAKE #275 - COTTAGE
$525,000
Havelock ,Trent River - Cottage Water front
$649,000
Scarb & Ellesmere 3BD 2 WR Sep Ent + apt
WATER FRONT COTTAGE
WEEKDAYS & WEEKEND
RENTALS
From $150 per day
2350 sq. ft. Living Space
6Bed Rooms Free BBQ, Canoe,
padel boat, life jackets and more..
$534,000
Tapscott & Finch- 3BR / 2WR
$369,000
SIMCO LAKE - Cottage Water front
RENTED
BEST INVESTMENT
Markham/ Denison - UNIT FOR SALE
$10,000 Profit per Month
VARIETY STORE FOR SALE - VICTORIA PARK & DANFORTH
$599,000
TAUNTON/ RITSON - Premium Lot
BUILDING PERMITS !!!
For addition and new homes
get an advice and cosultancy
services and Building Permit
Applications
Century 21
BROKERAGE
AFFILIATE REALTY INC.
OFFICE : 416-290-1200
17 YEARS REAL ESTATE
EXPERIENCE
PAT PUSHPAKANTHAN
Call :416-894-1187
REAL ESTATE BROKER - HALL OF FAMER
PAT WILL BEAT ANY DEAL*!!
1% Listing Commission *
Also Available

# பழமைவாத...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விலகிவிட்டனர். ஏனைய 13 வேட்பாளர்களும் இறுதிவரை தேர்தலில் நின்றனர். 13 வேட்பாளர்கள் தேர்தலில் நிற்பதால் ஒருவரும் இலகுவில் முதல் முறை வாக்குகள் எண்ணியவுடன் அரைவாசிக்கு மேற்பட்ட அதாவது 16,901 புள்ளிகளைப் பெறமுடியாத நிலை இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனால் வாக்காளர்களுக்குத் தமது தெரிவுகளை ஒன்றில் இருந்து பத்துப்பேர்வரை அவர்கள் விரும்பும் வரிசையில் வாக்காளர் அட்டையில் தெரிவு செய்யும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி முதல் வாக்கெடுப்பு முடிவில் போதிய அளவு புள்ளிகளை ஒருவர் பெறாவிட்டால் குறைந்தளவு புள்ளிகள் பெற்று இறுதியாக வந்தவர் நீக்கப்பட்டு அவருக்கு வாக்களித்தவர்களது வாக்குகள் அவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டாவது வேட்பாளருக்கு அளிக்கப்பட்டு மீண்டும் எண்ணப்படும்.

இவ்வாறே ஒரு வேட்பாளர் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யத் தேவையான 16,901 புள்ளிகள் பெறும்வரை திரும்பத் திரும்ப இறுதியாக வந்தவர் நீக்கப்பட்டு எண்ணப்படும்.

இவ்வாறு நடைபெற்ற தேர்தலில் 13 வேட்பாளர்களில் ஒவ்வொருவராக நீக்கப் பட்டு இறுதியாக இருந்த இரண்டு வேட்பாளர்களான அன்றூ ஷியர் (Andrew Scheer) மற்றும் மக்ஸிம் பேணியர் (Maxime Bernier) பெற்ற வாக்குகள் எண்ணப்பட்டன.



இதில் அன்றூ ஷியர் 17,221 புள்ளிகளும் (50.95%), மக்ஸிம் பேணியர் 16,579 புள்ளிகளும் (49.05%) பெற்றனர். இதனால் பழமைவாதக்கட்சியின் தலைவராக அன்றூ ஷியர் தெரிவானார்.

இவ்வாக்கு எண்ணிக்கையில் ஆரம்பத்தில் இருந்து மக்ஸிம் பேணியர் முன்னிலையில் இருந்தார். ஆனால் மூன்றாவது வேட்பாளர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளின் அடுத்ததெரிவை ஏனைய இருவருக்கும் வழங்கப்படும்போது அன்றூ ஷியர் அதிக அளவு புள்ளிகளைப் பெற்று மக்ஸிம் பேணியரை முந்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முக்கிய காரணமாக ஊடகவியலாளர்களால் சுட்டிக்காட்டப்படுவது பழமைவாதக்கட்சியின் தலைவர் தேர்தலில் முன்னிலையில் நின்ற மக்ஸிம் பேணியர் சமூகப் தாராளவாதக் கொள்கையை (Social Liberalism) உடையவராகவும் இரண்டாவதாக நின்ற அன்றூ ஷியரும் மூன்றாவதாக நின்ற Erin Otoole உம் சமூகப் பழமைவாதக் கொள்கையை (Social Conservatism) உடையவர்களாக இருந்ததுமே காரணமாகும். இதனால் Erin Otoole இற்கு தமது முதல் தெரிவாக வாக்களித்தவர்கள் பலர் தமது இரண்டாவது தெரிவாக அன்றூ ஷியரை தெரிவு செய்திருந்தனர். இதனாலேயே 40.38% புள்ளிகளைப் பெற்று மக்ஸிம் பேணியர், 38.36% புள்ளிகளைப் பெற்று அன்றூ ஷியர் மற்றும் 21.26% புள்ளியைப் பெற்று Erin Otoole உம் இருந்த நிலையில், மூன்றாவதாக நின்ற Erin Otoole நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகள் அவர்களின் அடுத்த தெரிவுக்கு வழங்கப் படும்போது அன்றூ ஷியர் (50.95%) அதிகப் படியான புள்ளிகளைப் பெற்று மக்ஸிம் பேணியரை (49.05%) தோற்கடித்தார்.

இந்தக் கட்சித்தலைவருக்கான தேர்தலில் 141,000 இற்கு மேற்பட்ட பழமைவாதக்கட்சி உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். இவர்களில் 132,000 பேர் 2017 மே 26ஆம் திகதிக்கு முன்னரே தபால் மூலம் வாக்களித்து விட்டனர்.

13 வேட்பாளர்களில் ஒவ்வொருவராக நீக்கப்பட்டு இறுதியாக இருந்த இரண்டு வேட்பாளர்களுக்கும் கிடைத்த புள்ளிகள் அடிப்படையில் அன்றூ ஷியர் ஒன்ராரியோ, பிரிட்டிஸ் கொலம்பியா, நியூ பிரவுண்ஸ்விக், நோவாஸ்கோசியா, பிரின்ஸ் எட்வேட் தீவுகள், சஸ்கச்சுவான் ஆகிய மாகாணங்களிலும் யூகோன் பிரதேசத்திலும் அதிக அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தார். மக்ஸிம் பேணியர் அல்பேட்டா, குவிபெக், மனிற்ரோபா, நியூபவுண்ட் லாண்ட் ஆகிய மாகாணங்களிலும் நுணாவிற் மற்றும் வட மேற்கு பிரதேசங்களிலும் அதிக அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

அன்றூ ஜேம்ஸ் ஷியர் 1979 மே 20 இல் ஒட்டாவாவில் பிறந்தார். 38 வயதான இவருக்கு ஜில் ஷியர் மனைவியும் ஐந்து இளம் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அன்றூ முதன்முதலில் 2004இல் நடைபெற்ற மத்திய

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)




COTTAGE
FOR RENT
Beautiful waterfront cottage with a capacity of 12 people.
80km away from Scarborough.
Fishing boat and pedal boat is available.
Murali - 416-569-4065
Ganesh - 416-768-8169


அம்மா
நகை அடைவு மாடம்
AMMA PAWN BROKER
வர்த்தகத்துறையில் நீண்டகால முன்னோடிகளான அம்மா நகைமாடத்தின் சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்
2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown: 416-921-0034
ammapawnbroker@gmail.com
1.5%
முதல்
2%
$1000ற்கு
மாதம்
$20 மட்டுமே
(Month)
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
அம்மாவுக்கு நிகரான சேவை
அம்மா நகை அடைவுமாடமே
உங்கள் பழைய நகைகளை
நியாயமான விலையில்
வாங்கலாம்/விற்கலாம்
அரச அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# சுற்றுச்சூழலும் நாமும்

## கனடா - 150 வருடங்கள்



சுந்தரம் இந்திரராஜா

# We and the Environment

எங்கள் வீடு பூர்வீக நிலத்தில் உள்ளதா? Is our home built on Native land? 1535 _ 1536 காலப் பகுதியில் பிரெஞ்சுக்காரரான ஜக்குயிஸ் கார்டியர் (Jacques Cartier) என்பவர் சென்ற் லோறன்ஸ் நதிக்கு வடக்கே இருந்த பிரதேசத்திற்குச் சூட்டிய பெயரே கனடா. முதற்குடி மக்களது மொழியில் கிராமம் என்பதை "Kanata" என்று அழைப்பது வழக்கம். தொலைவில் இருந்த தங்கள் கிராமத்தை அவர்கள் சுட்டிக்காட்டி அது தான் தங்கள் கனடா என்று கூறியதை தவறாகப் புரிந்து கொண்ட கார்டியர் என்பவர் அந்தப் பிரதேசம் முழுவதற்கும் கனடா என்று பெயரிட்டுவிட்டார்.

கனடா திருடப்பட்ட நிலத்தில் உள்ளது எனப் பல பழங்குடி பிரிவு மக்களும் மற்றும் பழங்குடி பிரிவு அல்லாத சில மக்களும் கூடச் சொல்லுகிறார்கள். பல பழங்குடி பிரிவு மக்களுடன் கனடா ஒப்பந்தங்கள் செய்திருந்தபோதும், சில பழங்குடி பிரிவு மக்களுடன் ஒப்பந்தங்கள் இல்லை. சில பிரதேசங்களுக்கான ஒப்பந்தங்கள் உடைந்த நிலையில் கூட உள்ளன. 1763ம் ஆண்டு ரோயல் பிரகடனத்திலும் நமது தற்போதைய அரசியலமைப்பு சட்டத்திலும் பொதிந்துள்ள சில கூற்றுக்களின் படி, பழங்குடி மக்களுக்கு சில பிரதேசங்கள் சொந்தமானது. எந்த நில ஒப்பந்தத்தின் மூலமும் கைவிட்டு விடப்படவில்லை. கனடா சில பிரதேசங்களை ஆக்கிரமித்திருப்பது கனடாவினது சொந்தச் சட்டங்களுக்கே சட்ட விரோதமான செயலாகும் என்று சிலர் வாதிடுகின்றனர். இப்போ பழங்குடி மக்களை முதற்குடி மக்கள் என அழைக்கிறோம். இவர்கள் இயற்கையுடன் (ஐம்பூதங்கள்) ஆன்மீக உறவு கொண்டவர்கள்.

கனடா சிறந்ததா? இதற்குரிய பதிலை நாம் ஆராய்வோம்.

சனத்தொகை கூடியுள்ளது: அன்று 3.5 மில்லியன் இன்று 36.5 மில்லியன் மக்கள். அன்று பிரெஞ்சு, ஆங்கிலேயக் குடிவரவாளர்களாலும் முதற் குடிமக்களாலும் கனடா உருவாக்கப்பட்டது. உலகில் கனடா முதன்முதலாக பல்லினப்பண்பாடு கொள்கையை அதிகாரபூர்வக் கொள்கையாக 1971ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பன்னாட்டு மக்களும் கனடாவுக்குக் குடியேறுவது அதிகரித்தது. 1980களிலும் 1990களிலும் தமிழர்கள், பிற தெற்காசிய மக்கள், ஆபி ரிக்கர்கள் புதிய குடிவரவாளர்களில் கணிசமான தொகையினராக இருக்கிறார்கள். கூடுதலான மக்கள் (38.5%) ஒன்ராரியோ மாகாணத்திலும் (0.4%) குறைவான மக்கள் பிறின்ஸ் எட்வேட் ஐலண்ட் மாகாணத்திலும் மற்றும் மூன்று பிரதேசங்களிலும் மொத்தம் 0.3% மக்கள் வாழ்கிறார்கள்.



மக்கள் தொகை பெருக்கத்தால் காடுகளை, விவசாய நிலங்களை அழித்து உயர்மாடிகள், வீடுகள், தெருக்கள், பள்ளிக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவை கட்டப்படுவதால் நன்மைகளை விட சுற்றுச்சூழலுக்கு தீமைகளைக் செய்கிறோம். அதில் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துப் பார்த்து அதை இங்கு எப்படி ஈடு செய்யத் தொடங்கியிருக்கிறோம் எனப் பார்போம்.

எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பு தலைமைத்துவம் Leadership in Energy and Environmental Design (LEED) என்ற ஒரு கட்டமைப்பு முறையினை வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொடங்கியுள்ளார்கள். கனடா பின்பற்றத் தொடங்கி இதன்மூலம் சக்தி விரங்களை கட்டுப்படுத்துகிறார்கள். அதிகரித்த பசுமையில் வாயுக்களை (greenhouse gas emissions) இதன்மூலம் குறைத்து முக்கிய விளைவான புவி வெப்பமயமாதலைக் (global warming) கட்டுப்படுத்துகிறார்கள். வருங்கால சந்ததியினருக்கு குடிப்பதற்கு நீரை விட்டுச் செல்லவேண்டும் என்று தீர்மானித்து நீரை நிலத்தினுள் சேமிக்க ஆரம்பித்துள்ளார்கள். காற்று, ஒலி, ஒளி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துகிறார்கள். அவற்றை நாமும் அறிந்து உதவுவோமானால் பலனை விரைவில் அடையலாம்

சூரியஒளி கலங்கள் கொண்டு, காற்றாடி கொண்டு அல்லது நீர்வீழ்ச்சியைக் கொண்டு கிடைக்கும் மின்சாரத்தை வாங்கிப் பாவித்தலை ஊக்குவித்தல், சக்தியை குறைவாக எடுத்துக்கூடிய வெளிச்சம் மின் தரும் மின் விளக்குகளை பாவித்தலை ஊக்குவித்தல், ஆள் இல்லா இடங்களில் தானாக நிற்கக்கூடியதாக சுவிச் பொருத்துதல், வீட்டிற்கு சூரியவெளிச்சம் கிடைக்கும் திசைகளில் யன்னல்களை வைப்பது எந்த உயரத்தில் வைப்பது, தேவையான பக்கத்திற்கு மட்டும் படும்படி ஒளியை தெறிக்கப் பண்ணல், ஒளி மாசுபாட்டைக்குறைத்தல் (Light pollution) போன்றவை அடங்கும்.

குளிர்ந்த நீரைக் குழாய்மூலம் கொண்டு கட்டிடத்தை குளிரூட்டல், மின் விசிறி, பாவனையைக் கூட்டி குளிரூட்டிகளின் பாவனையைக் குறைத்தல் மற்றும் வெப்பமாக்கத் தேவையில்லாத நேரத்தில் சக்தியின் அளவைக் குறைப்பதன் மூலம் சக்தியைச் சேமித்தல் போன்றவை அடங்கும்.

கட்டிட நிர்மாண ஒப்பந்தகாரர்கள் தேவையான கட்டிட மூலப் பொருட்களை அருகில் உள்ள இடத்தில் தேடி வாங்கச் செய்கிறார்கள் அல்லது நல்லநிலையில் கிடைக்கும் பாவித்த பொருட்களை மீண்டும் பாவிக்கச் செய்கிறார்கள். பொது மக்கள் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி தனி வாகனப் பாவனையை குறைத்தல், வயதான மரங்களை மட்டும் கட்டிடப்பொருட்களாகப் பாவிக்க ஊக்குவித்தல், இரசாயன பூச்சிக் கொல்லிகளின் பாவனையை தடை செய்தல், வீட்டை சுத்தப்படுத்தப் பாவிக்கப் படுத்தும் இரசாயனப் பொருட்களை தவிர்த்து அதற்குப் பதிலாக இயற்கையாகக் கிடைக்கும் மற்றும் சுற்றாடலை அதிகம் மாசுபடுத்தாத சோடாத் தூள் (Caustic Soda), வினிகர் (vinegar), லெமன் (Lemon) போன்ற பொருட்களை பாவனைக்கு சேர்த்தல், துவிசக்கரவண்டிகளை பாவிக்க ஊக்குவித்தலும் அவற்றை வேலைத்தலங்களில் நிறுத்தி பாதுகாப்பாக வைத்துவிட்டு வேலை பார்க்க வசதி செய்து கொடுத்தல் போன்றவை அடங்கும்.

பூமியின் சுற்றுச்சூழலுக்கு (நிலம், நீர்) ஏற்பட்டு வரும் வெப்பநிலை உயர்ச்சிக்கு எரிமலை வெடிப்புக்களும் சூரியக்கதிர் வீச்சுக்களும் பிரதான காரணிகளாய் அமைந்த போதிலும் சனத்தொகைப் பெருக்கம் கைத்தொழில் பெருக்கம் மற்றும் மானுடச் செயற்பாடுகளே புவி சூடாவதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களான கண்ணாடிகள், காகிதம் மற்றும் அட்டைகள், உலோகங்கள், பிளாஸ்டிக்கள், டயர்கள், இரசாயனப் பொருட்கள், பொலித்தீன் பொருட்கள், துணிமணிகள் மற்றும் எலெக்ட்ரோனிக்ஸ் பொருட்கள், பட்டரிகள் போன்ற பல வகையான பொருட்களை தனித்தனியே சேர்க்கச்செய்து மறுசுழற்சி செய்ய ஊக்குவித்தல் அல்லது நகரசபையின் வழிகாட்டுக்கமைய அகற்ற உதவி செய்தல் போன்றவை அடங்கும். குறிப்பாக எமது வீடுகளில் அகற்றப்படும் திண்மக் கழிவுகள், புவி வெப்பமுறுவதற்குப் பிரதான காரணிகளான மீத்தேன் (Methene), காபனீர் ஒட்சைடு (carbon dioxide) போன்ற பசுமை இல்ல வாயுக்களை (Greenhouse Gases) உருவாக்குகின்றன. பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் நிலத்துக்குள் உக்க மாட்டாத பொருட்கள் குப்பைகளுடன் சேர விடாமல் தவிர்க்க உதவி செய்வது போன்றவை அடங்கும்.

மாசுபட்ட காற்றை தூய்மைப்படுத்தவும் சூழலை குளிர்ச்சியாக வைத்திருக்கவும் மரம், செடி, புல்லு போன்றவற்றை

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am - 11 pm
Sat. & Sun 7 Am - 11 pm
(Near Bellamy & Lawrence - find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 2

## கனடா - 150 வருடங்கள்

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

கனடாவிற்குப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் யார் என்பதைப் பற்றிய எனது பொதுவான கருத்தையும் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். நவீன தொடர்பு வசதிகள் தற்போது இருப்பதால் எமது இளைய தலைமுறையினர் இதுபற்றி மேலும் ஆராய்ச்சி செய்து ஈழத்தமிழர் பற்றி விரிவாக ஆவணப்படுத்த முடியும், காரணம் வேறு இனத்தவர் யாரும் நல்ல நோக்கத்தோடு எமக்காக இதில் அக்கறை எடுக்கப் போவதில்லை. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப்பேரலையால் தென்னிந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்ட ஒரு பகுதி தெற்கே ஒரு தீவாக உருவெடுத்து இருந்ததைப் பல ஆண்டுகாலமாக கடலோடிகள் அறிந்து கொள்ளவில்லை. அதனால்தான் சேர நாட்டுப் பகுதியில் வாழ்ந்த பல தமிழர்கள் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் தெற்கே தள்ளப்பட்ட தீவில் உயிருடன் இருந்ததைக்கூட அவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. காலப்போக்கில் கட்டுமரங்களைக் கட்டிக் கடலோடத் தொடங்கிய பின்தான் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் மொழி பண்பாடு கலாச்சாரத்தை அப்படியே தக்க வைத்துக் கொண்டு இருப்பதைக் கடலோடிகளால் அறிந்துகொள்ள முடிந்தது. அக்காலத்தில் கடற்பயண வசதிகள் அதிகம் இருக்கவில்லை. 'கட்டுமரம்' (Catamar an) என்ற சொல்கூட தமிழில் இருந்துதான் ஆங்கிலத்திற்குச் சென்றது. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழர்கள் கட்டுமரத்தைப் பாவித்ததற்கான ஆதாரங்களும், சரித்திரச் சான்றுகளும் உண்டு.

இந்தியாவின் தென் மேற்குப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் நாட்டுப்புறப் பேச்சு மொழியின் பல சொற்கள் இன்றும் யாழ்ப்பாணத்தில் பேச்சு வழக்கில் இருக்கின்றன. தென்னிந்தியாவின் தென்மேற்குப்பகுதி தற்போது அரசியல் யாப்பில் கேரளா என்ற பெயரைப் பெற்றாலும் முத்தமிழ் வேந்தர்களில் ஒருவரான சேரமன்னனால் ஆட்சி செய்யப்பட்ட தமிழர் நிலம் அது என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் பல இருக்கின்றன.



தற்போதைய தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, கன்னடப் பகுதிகள் எல்லாம் சேர, சோழ, பண்டியரான முத்தமிழ் வேந்தர்களின் ஆட்சியின் கீழ் பல்லாண்டு காலம் இருந்ததை மறுக்க முடியாது. இவை எல்லாம் தமிழர்கள் ஆண்ட நிலம் என்பதற்கான இலக்கியச் சான்றுகள் போன்ற பல ஆதாரங்களும் இருக்கின்றன. சமீபத்தில் வான்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் கடலுக்கடியில் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமான நிலத்தொடர்பு இருப்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. எனவே ஆழிப்பேரலையால் நிலம் பிரிக்கப்பட்டபோது ஸ்ரீலங்கா என்று தற்போது அழைக்கப்பட்ட தீவில் வாழ்ந்தவர்களே ஈழத்தமிழர் ஆவார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியத்தில் சொல்லப்பட்ட நாகர் என்ற இனம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்த நாகவழிபாட்டை உறுதி செய்கின்றது. இன்றும் அங்குள்ள கோயில்களில் நாகதம்பிரான் வழிபாடு நடைபெறுகின்றது. சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்ட 'தென்குமரி' என்ற மலைத் தொடர் இலங்கைத் தீவு ஆழிப்பேரலையால் பிரிந்தபோது தற்போது இலங்கையின் மத்திய பகுதியில் இருக்கும் மலைத்தொடரே என்பதையும் ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளனர். காரணம் தற்போது இருக்கும் தமிழ்நாட்டின் தென் பகுதியில் புவியியல் ரீதியாக அப்படி ஒரு பெரிய மலைத்தொடர் இல்லை என்பதேயாகும்.

ஈழத்தமிழர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திய பழங்குடி மக்களான தமிழர்களில் ஒரு பகுதியினர் சொந்த மண்ணிலே புறக்கணிக்கப் பட்டதால்தான் புகலிடம் தேடிக் கனடாவிற்கு வந்து குடியேறினர். மலையகத் தமிழர் என்பவர்களும் தமிழர்களே. இவர்கள் ஆங்கிலேயர் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து தேயிலைத் தோட்டங்களில் தொழில் செய்வதற்காக அழைத்து வரப்பட்டவர்கள். இலங்கையுடனான அவர்களுடைய சரித்தரமே சுமார் 200 வருடங்களைக் கடந்து விட்டது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மலையகத் தமிழரின் காலம் பற்றிய விளக்கம் சில இளைய தலைமுறையினருக்கும், சில அரசியல் வாதிகளுக்கும் தெரியாததால், அல்லது தெரிந்து கொள்ள விரும்பாததால் அவர்களைப் பற்றிய தகவலையும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

கனடா ஒரு பல்கலாச்சார நாடென்பதால் தமிழர்களால் அதை இலகுவில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், தங்களை அதற்கேற்பப் பழக்கப்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. கனடா 150 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்த நேரத்தில் கனடாவிற்கான ஈழத்தமிழரின் பங்களிப்பு கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளாகவே இருக்கின்றது. காரணம் 1960 களில் இருந்து சில தமிழர்கள் கனடாவில் வாழ்ந்துவந்தாலும், 1980 களின் தொடக்கத்தில்தான், ஸ்ரீ லங்காவில் நடந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக ஈழத்தமிழர்கள் பெருமளவில் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தனர். இன்று கனடாவில் கிட்டத்தட்ட மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றார்கள். தமிழர் வாழும் மூன்றாவது பெரிய நாடாகவும் கனடா இருக்கின்றது. புகலிடம் தந்த புதியதொரு நாட்டில் நாங்கள் வாழ்ந்தாலும், எங்கள் மொழி பண்பாடு கலாச்சாரத்தையும் சுமந்து கொண்டுதான் இங்கு வந்திருக்கின்றோம். மிகப் பழமைவாய்ந்த செம்மொழி எங்கள் தாய் மொழி என்பது மட்டுமல்ல, அதுவே எங்கள் இனத்தை என்றென்றும் கனடிய மண்ணில் அடையாளப் படுத்தி நிற்கும் என்பதிலும் எங்களுக்குப் பெருமை உண்டு.



ஜனநாயக நாடான கனடாவை எடுத்துக் கொண்டால், பழங்குடி மக்களைக் (Aboriginal) கனடிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மூன்று பெரும் பிரிவுக்குள் அடக்குவர். கனடாவின் பழங்குடி மக்கள் யார் என்பது பற்றிய விரிவான சட்ட மூலம் 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அவர்களை இந்தியர்கள், இனுவிட் (Inuit), மெயிற்ரீஸ் (Métis) என்று வகைப்படுத்தினாலும் அவர்களுக்குள் பல உபபிரிவுகளும் உண்டு. கொலம்பஸ் வழிதவறி வடஅமெரிக்கா வந்தபோது இவர்களை இந்தியர்கள் என்று நினைத்ததால் இவர்களுக்கு இந்தியர் என்ற பெயர் வந்தது. பழங்குடி மக்களை இந்தியர்கள் என்றோ செவ்விந்தியர்கள் என்றோ அல்லது எஸ்கிமோக்கள் என்றோ அழைப்பதை அவர்கள் விரும்புவதில்லை. வெளிநாட்டவர்கள் சிலர் அவர்களைப் பொதுவாக அப்படி அழைத்தாலும், 'முதற்குடிகள்' என்று அழைப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். அதுவே சரியானதாகவும் இருக்கின்றது. எனவேதான் அவர்களை 'முதற்குடிகள்' என்று அழைக்கின்றனர்.


Real Estate Class

FREE Real Estate Classes

start every week

Call for info. :416.321.6969

LOANS & MORTGAGES.... that meets your needs

$5,000...$35,000...$50,000...$100,000...1Million...

MORTGAGE ALLIANCE

Corporate Office:
2005 Sheppard Ave E.
Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487

- Commercial Mortgages.
- 2nd Mortgages.
- Construction Mortgages.
- Secured Credit line.
- Unsecured Loans.

SAM SURENDRAN

Mortgage Agent Lic# 16002312

647-922-5704

Twitter @OK_Mortgages







- ஆதித்தன் -

# மிதுலாக்கள் காப்பாற்றப்பட வேண்டும்!

மன்னாரைச் சேர்ந்த மாணவி ஒருவர் ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டமை மிகுந்த கவலைக்குரியதான சம்பவமாக இருப்பதுடன் சிந்தனைக்குரிய-தாகவும் அமைந்துவிட்டது. குடும்பத்தில் மகிழ்ச்சி இல்லாத காரணத்தால் தான் தற்கொலை செய்து கொள்வதாக அவர் தற்கொலைக்கு முன்பு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மன்னாரில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர் தரத்தில் கல்வி பயின்று வந்த இந்த மாணவி முழங்காவிலைச் சேரந்தவர். முழங்காவில் பகுதியிலேயே அவரது வீடு அமைந்துள்ளது. கடந்த காலப் போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று முழங்காவில். இப்பகுதி மக்களும் பல்வேறு கட்டங்களாக இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் வரையும் சென்றவர்களே.

போர் முடிவிற்கு வந்ததன் பின்னர்- மக்கள் தங்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டதன் பின்னர் பல குடும்பங்களில் குழப்ப நிலை காணப்படுகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. இதனால் பிள்ளைகள் உளரீதியாக அதிகம் பாதிக்கப்ப டுகின்றனர். இதனால் அவர்கள் இவ்வாறான கொடுமையான முடிவுகளுக்குச் செல்கின்றன

இந்த மாணவி தனது தற்கொலை முடிவிற்கு அவரது தாயையே குற்றம் சாட்டுகின்றார். தாயால் அன்பு செலுத்தப்படாமல் அல்லது வெறுக்கப்பட்ட நிலையலேயே அவர் இந்த முடிவினை எடுத்திருப்பது மாணவியின் கடிதத்திலிருந்து புலப்படுகின்றது. இவ்வாறு, பரிதாபமாக உயிரிழந்த மாணவி க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயின்று வந்த 18 வயதான தயாளினி என அழைக்கப்படும் சண்முகலிங்கம் மிதுலா என்பவராவார். அவரால் எழுதப்பட்ட கடிதத்தின் சில வரிகளை இங்கு அவதானிக்கலாம்.



'என்னுடைய வாழ்க்கையில் சந்தோசம், அன்பு, பாசம் என்பவற்றை நான் இழந்து நிற்கின்றேன். உங்களால் தான் அதை நான் இழந்து நிற்கின்றேன். அம்மா உங்களுக்கு தெரியுமா நான் அம்மா அம்மா என்று பாசமுடன் ஏங்கிக் கொண்டிருக்கின்றேன். ஏன் அம்மா என்னைப் புரிந்துகொ ள்கிறீர்கள் இல்லை? நீங்கள் என்னைத் தனியாக தவிக்க விட்டுட்டீங்கள். என்னைப் பாசமாகவும், அக்கறையாகவும், சந்தோச மாகவும் வைத்திருக்கின்றவர்களையும் பிரிக்க நினைக்கின்றீர்கள். உங்கட மனசை கல்லு மாதிரியே வைச்சிருக்கிறீங்க. எப்படி அம்மா மனசு வந்தது? நான் வீட்டிலிருந்தா செலவு என்று நினைக்கிறீர்கள். அப்படியென்றால் நான் வீட்ட விட்டுபோன பிறகு உங்களுக்கு செலவுகள் குறையும் தானே? ஏன் அம்மா உயிரோடு வைத்து துன்புறுத்துகிறீர்கள்? என்னைப் பிடிக்கல என்றால் விசம் தந்து கொல்ல வேண்டியது தானே? ஏன் இப்படி செய்கிறீர்கள்? ஏன் அம்மா இப்படியொரு துரோகம் செய்கிறீர் கள்? அடுத்த பிறவியில் சந்தோசமான வாழ்க்கை அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன். நீங்களும் வீட்டிலுள்ளவர்களும் சந்தோசமாகவும் இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன். அத்தோடு எனது மரணத்திற்கு ஒருவரும் காரணம் இல்லை. அதற்கான காரணம் எனது வாழ்க்கையில் சந்தோசம் இல்லை. அதேமாதிரி பெற்றோருடைய அன்பும் அரவணைப்பும் கிடைக்கவில்லை. அதனால் நான் இந்த முடிவை எடுத்தேன்..'

இவ்வாறு எழுதி வைத்துவிட்டே அம்மாணவி ரயிலின் முன் பாய்ந்து தன்னை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தப் பிள்ளையின் தற்கொலையினையும், அவர் எழுதிய கடிதத்தையும் பார்க்கின்றபோது, நான் பல வருடங்களுக்கு முன்னர் வாசித்த 'பைத்தியக் காரப் பிள்ளை' என்ற சிறுகதை நினைவிற்கு வருகின்றது. தமிழகத்தின் சிறந்த எழு த்தாளர்களில் ஒருவரான எம்.வி.வெங்கட்ரா மன் எழுதிய சிறுகதை அது. அக்கதையில் பெற்ற தாயின் தொல்லை தாங்க முடியாமல் ரயிலின் முன்னால் பாய்ந்து மகன் தற்கொலை செய்துகொள்கின்றான். தாயை தெய்வமாகப் போற்றும் தமிழ் சமூகத்தில் துணிச்சலுடனும், யதார்த்தமாகவும் அக்கதையினை அவர் எழுதியுள்ளார். பலராலும் விமர்சிக்கப்பட்டும் பாராட்டப்பட்டது மான கதை அது. சமூகத்திலிருக்கும் மரபான விடயங்களை மீறி துணிச்சலுடன் யதார்த்தங்களை வெளிப்படுத்தும் துணிச்சல் எம்.வி.வெங்கட்ராமன் போன்ற சிலருக்கே உள்ளது. இவற்றை நான் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் போரின் பின்னர் சமூகத்தில் நிலவும் சில கசப்பான உண்மைகளை குறிப்பிடுவதற்கே ஆகும்.

போரின் பின்னர் பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவனை இழந்த பெண்கள், காயமடைந்து அங்கவீனர்களாகியுள்ள குடும்பத் தலைவர்கள், இழப்புக்களால் உளரீதியாக பாதிப்புற்றுள்ளவர்கள், காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியலையும் உறவினர்... என பல தரப்பினர் உள்ளனர். போர் முடிவுற்ற பின்னர் சுகபோக வாழ்க்கையைத் தேடியலையும் நபர்களும் இந்த சமூகத்தில் இன்றுள்ளனர். இவர்களால் பல குடும்பங்கள் சீரழிந்துள்ளன. இந்த ஆசைத் தேடலில் சிலர் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பல குடும்பங்களில் பெண்களின் அதீத ஆசையே பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இருக்க வீடும், உண்ண உணவும், பாதுகாப்பிற்கு பதுங்கு குழியும் மட்டுமே போதுமானது என வாழ்ந்தவர்களில் சிலர் இன்று அதீத பொருளாசையினால் கடனாளிகளாக மாறியுள்ளதோடு தற்கொலையும் செய்துள்ளனர்.

மீள் குடியேற்றத்தின் பின்னர் தெற்கிலிருந்து வந்து சேர்ந்த நிதி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற கடன் திட்டங்களை ஏதோ இலவசமாகக் கிடைப்பது போன்று பெற்று ஆடம்பர செலவுகளை செய்துவிட்டுப் பின்னர் அவற்றை மீளளிக்க முடியாத நிலையில் பல குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான பொருளாதார சிக்கல்கள் குடும்பத்தில் சச்சரவுகளை ஏற்படுத்துகின்றது. தாய், தந்தைக்கிடையே ஏற்படும் சண்டைகளால் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். அண்மையில் ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட சண்டை காரணமாக அந்தக் குடும்பத் தலைவன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். பொருளாதாரப் பிரச்சினைகளால் அதிகம் ஆண்களே தற்கொலை செய்து கொள்கின்றனர்.

வீட்டிலுள்ள பெண்களின் ஆடம்பர ஆசைகளை நிறைவேற்றுவதற்காக மேதிகமாக உழைக்கும் எண்ணத்துடன் சட்டவிரோதமான தொழில்களில் இறங்கி சிறைக்குச் செல்லும் குடும்பத் தலைவர்களும் உள்ளனர்.

கைத்தொலைபேசி தொடர்புகளால் ஏற்படுகின்ற முறையற்ற நட்புகளாலும் இன்று குடும்பங்களில் சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தத் தொடர்புகளுக்கு இடையூறு செய்வதாக எண்ணிப் பெற்ற பிள்ளைகளையும் வெறுக்கும் நபர்களும் உள்ளனர். ஒரு புறத்தில், விதவைகளாகி குடும்பப் பொறுப்பை சுமக்கும் பெண்கள் தங்கள் வாழ்வாரத்திற்காக சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்க, ஒரு சிலர் இவ்வாறு பொறுப்பற்றிருப்பதும் அதனால் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுவதும் தவிர்க்கப்பட வேண்டியது.

போரின் பின்னர் மக்களின் வாழ்வை நெறிப்படுத்துவதற்கான சில பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உளவளத் துணை நடவடிக்கைகள் இதில் முக்கியமானது. அத்துடன், மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் விதமான தெளிவூட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இதனை யாரும் மேற்கொள்ள வில்லை. இந்த நிலைமை காரணமாகவே இன்று பல குடும்பங்களில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. மிதுலா போன்ற பிள்ளைகளின் உயிர்களும் இதனால் இழக்கப்படுகின்றன. இனியாவது சமூகத்தில் மக்களுக்கான சில கட்டமைப்புக்களை உருவாக்குவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.


விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




$549,900
3 Bedrooms, 3 W Room
Open Concept Main Floor Featuring 9' Ceilings, Large Living Area.
$650,888
3 Bedrooms, 3 W Room
Modern Kitchen Is A Home Owners Dream, B/I Oversized
$599,900
3 Bedrooms, 3 W Room
High Ceil Bsmnt, A/G Windows, Dr To Wide Garage
$499,900
3 Bedrooms, 3 W Room
Hrdwd & Ceramic Thru/Out Includ Staircase, Designer Lights In All Rooms
$475,000
3 Bedrooms, 3 W Room
Just Over 1Yr Old & 9Ft Ceilings On Main & Walk-Out To Yard
$725,000
3 Bedrooms, 3 W Room
Built In 2016 With Loads Of Upgradest
$689,000
4 Bedrooms, 3 W Room
Kitchen Features Granite Counters, Upgraded Hardwood In Comb Dining
$798,000
4 Bedrooms 3 W Room
Gas Fireplace In Large Family Room, Double Entry Door.
$769,900
3+2 Bedrooms, 4 W Room
Over 2500 Sq Ft Of Living Space Including Fin Bsmt
$799,999
3+1 Bedrooms, 4 W Room
Beautiful Designer Choice Kitchen W Granite C'tops, Central Island
$799,000
4 Bedrooms, 3 W Room
Garage Access From Inside The House, Close To Park & Transit
$769,900
4 Bedrooms, 3 W Room
Open Concept Design Features A Large Eat-In Kitchen
$849,900
4 Bedrooms, 4 W Room
3 Full Washrms, Mainfloor W/Hardwood Flrs, Oakstairs
$739,900
4 Bedrooms, 3 W Room
Open Concept Main Level With Rich Hardwood Flooring
$749,900
4 Bedrooms, 3 W Room
Hand-Scraped Hardwood Flooring, Pot Lights, California Shutters
Sell your home
faster
money
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Platinum Club Award
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Your Home Sold In 30 Days or We buy it
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold. Our team of specialists for the same price as hiring a single agent

# நல்லாட்சியில் நம்பிக்கை இழக்கும் சம்பவங்கள்!

-விகிர்தன்

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் விரும்பத்தகாத நிகழ்வுகள் பழைய ஆட்சிக் காலத்தை நினைவூட்டுவனவாகவே உள்ளன. நல்லாட்சி அரசின் நல்லிணக்க முன்னெடுப்பு இதனால் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இன, மதவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சில குழுவினர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் சற்று அமைதியாக இருப்பதுபோல் தங்களைக் காட்டிக் கொண்டனரே தவிர அவர்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்பது இப்போது அவர் மீண்டும் எழுச்சி கொண்டிப்பதிலிருந்து தெரிகின்றது. குறிப்பாக பொதுபல சேனாவின் தலைவர் ஞானசார தேரரின் குழப்பங்கள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அவர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மீண்டும் வேகப்படுத்தி வருகின்றார்.

கடந்த அரசாங்கத்தின் காலங்களில் இனவாத குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது நல்லாட்சி அரசாங்கம் சட்ட நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆட்சிக்கு வந்தவுடனேயே இதனை ஆரம்பித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் இன்று அவர்களது நடவடிக்கைகள் மீண்டும் தோன்ற வாய்ப்பிருந்திருக்காது.

அண்மைய நாட்களாக முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் நடைபெற ஆரம்பித்துள்ளன. குருநாகல், மல்லவபிட்டிய ஜும்மா பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆறு பேர் கொண்ட கும்பல் ஒன்றினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதன்போது வீசப்பட்ட மூன்று பெற்றோல் குண்டுகளில் ஒன்று மாத்திரமே வெடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்ததாக, மட்டக்களப்பு ஏறாவூர் முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு, அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சொந்த ஊரான பொலன்னறுவையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பொதுபல சேனா மற்றும் ராவண பலய ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமான ஐந்து மாட்டுப் பண்ணைகளை தாக்கி சேதமாக்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மூதூர் எல்லைக் கிராமங்களிலுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறிச் செல்லும் அளவிற்கு அவர்களுக்கு அச்சுறுத்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வெல்லம்பிட்டிய கொஹிலவத்தைப் பகுதியில் உள்ள பள்ளிவாசல் மீது முகமூடி அணிந்தவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பகுதிகளிலுள்ள காணிகளை சிங்களவர்களுக்குச் சொந்தமானது எனவும், அவை முன்னர் பௌத்த விகாரைகள் அமைந்திருந்த புனித பூமி என்றும் கூறிக்கொண்டு அவற்றை ஆக்கிரமிக்கும் முயற்சிகளிலும் இந்தத் தேரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கெல்லாம் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயங்குவதாகவே தெரிகின்றது. பொலிஸார் தேரர்களின் அடாவடி நடவடிக்கைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.



பாணந்துறையிலுள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவையெல்லாம் அண்மைய நாட்களாக நடைபெற்று வரும் சம்பவங்கள். சுமார் இரு வாரங்களில் மட்டும் இருபது சம்பவங்கள் இவ்வாறு நடைபெற்றுள்ளதாக முஸ்லிம் தலைவர்கள் பட்டியலிடுகின்றனர்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தேசிய நல்லிணக்கத்திற்காக அமைக்கப்பட்ட தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுக்கு தனது ஆதரவாளர்களுடன் நேரடியாக சென்ற பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர், அதன் அமை ச்சராக வுள்ள மனோ கணேசனை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டிருக்கின்றார்.
"இது சிங்கள பௌத்த நாடு. சிங்களவர்களே இந்த நாட்டின் சொந்தக்காரர்கள். ஏனையோர் வெளியிலிருந்து வந்தோர். சிங்களவரின் நல்லெண்ணத்தால் நீங்கள் வாழ்கிறீர்கள். இந்நாட்டு மொழி சிங்களம் மட்டுமே. எல்லோரும் சிங்களம் படிக்க வேண்டும். இந்த சகவாழ்வு அமைச்சை சிங்களவரிடம் கொடுக்க வேண்டும்" எனக் கடுமையான தொனியில் அமைச்சர் மனோ கணேசனுடன் அவர் பேசியுள்ளார். ஒரு அமைச்சருக்கு இவ்வாறான அச்சுறுத்தலை விடுக்கும் அளவிற்கு நிலைமை உள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி, அதில் பங்கேற்று வரும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் இன்று அரசாங்கத்தின் பாராமுகம் தொடர்பில் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியின் ஊரிலேயே முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதெனவும், இது தொடர்பில் பொலிஸாரும் அசமந்தமாகவே செயற்படுகின்றனர் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார். நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுச் செல்கின்ற இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினர் மீதான திட்டமிட்ட தொடர் தாக்குதல்கள் மற்றும் தனது அமைச்சில் பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் ஆகிய விவகாரங்கள் தொடர்பில் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மனோ கணேசன் இந்த விடயங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

"மஹிந்த ராஜபக்ஸவின் கடந்த ஆட்சியின் போது, பேருவளையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவத்திற்கு பின் சிறுபான்மை மக்கள் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய மஹிந்தவை தோல்வியடைய வைத்து மைத்திரி அரசைக் கொண்டு வந்தனர். இந்த நல்லாட்சி அரசின் மூலம் இனங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களுக்கு சம உரிமை இந்நல்லாட்சியில் இருக்க வேண்டும்" என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்துள்ளார். இத்தருணத்தில் சர்வதேச சமூகமும் நிலைமைகளை கவனமாக அவதானித்து வருகின்றது.

குருநாகல், மல்லவபிட்டிய ஜும்மா பள்ளிவாசல் மீதான பெற்றோல் குண்டு தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் அதுல்கெஸாப் வலியுறுத்தியுள்ளார்.

அண்மைக் காலங்களில் சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார். வெறுப்பு மற்றும் வன்முறைகளை தூண்டும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா. அமைப்பும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் வணிக நிறுவனங்கள், சொத்துக்கள் என்பவற்றை இலக்கு வைத்து அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி உனா மக்குலே வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.



'கடந்த வாரம் இலங்கையில் சர்வதேச வெசாக் தினம் கொண்டாடப்பட்டது. இந்த வாரம் புத்தரின் கொள்கைகள் உதாசீனம் செய்யப்படுகின்றன' எனவும் அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் விட்டால், நல்லாட்சி, நல்லிணக்கம் போன்ற வார்த்தைகள் அர்த்தம் இழந்து போவதுடன், இந்த அரசாங்கத்தின் மீதும் சிறுபான்மை மக்களின் நம்பிக்கை இழக்கப்படுவதுடன், சர்வதேச சமூகமும் நம்பிக்கை இழக்கும் நிலையே ஏற்படும்.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com



# நாமும் நமது இல்லமும் - 488

## இப்படியும் நடக்க சந்தர்ப்பம் உள்ளதா?

**ராஜா மகேந்திரன்**, P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



வீட்டு விலை குறையுதாமே! இதுவே இன்றைய ஒன்றுகூடலின் உரையாடல். பலருடன் போட்டி போட்டு ஆதனம் வாங்குவது தவறா? அதிகளவு அடமானக் கடன் பெறுவது தவறா? ஒன்றிற்கு மேற்பட்ட ஆதனங்களில் தொடர்ந்து குறிப்பிட்ட ஒரே காலத்தில் முதலீடு செய்வது தவறாகுமா?

கேள்வி எதுவாகவும் இருக்கலாம்?

இது ஒரு Addiction என்று கூறலாமா? அல்லது மனித மனத்தின் நிலைப்பாடு இதுதான் எனக் கூறலாமா? அல்லது ஒரு வகை பீதி எனவும் கூறலாமா? அல்லது மனத்தின் தாழ்வுமனப்பான்மை என எண்ணலாமா?

வீட்டின் விலை எதிர்பாராதளவிற்கு அதிகரித்துள்ளதை யாவரும் அறிவோம். இந்த ஆதன அதிகரிப்பின் பெறுமதியை பாவித்து எமது கடன் அதிகரிக்கப்படுகின்றது. மத்தியவகுப்பு மக்களின் மனப்பாங்கு இதுவே என்பது மேல்தட்டு மக்களுக்கு இலகுவாகப் புரியும். இதனை IMF (International Monetary Fund) பல தடவை எச்சரித்து வருகின்றது. அத்துடன் நியாயமான அரசியல் வாதிகள், நேர்மையான நிதிநிறுவன பொருளாதார விற்பனர்கள், அரசின் பொருளாதார ஆலோசகர்கள் இதனையே வற்புறுத்தி வருகின்றனர்.

ஏறக்குறைய கனடியன் குடும்பங்களில் 70% ஆனவர்கள் இன்றைய ஆதன உரிமையாளர்கள். முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களை ஊக்குவிக்க அரசுகள் புதிய நலத்திட்டங்களை அவர்களிற்காக கொண்டுவருகின்றது. இது ஒருவகையில் சரியானதா?
மறுதலையாக, சிறந்த நிலையான வாடகை அடுக்கு மாடிகளை கட்டுவதற்கான ஊக்கங்கள், மேலதிக வரியை குறிப்பிட்ட காலத்தில் வாங்கி விற்பவர்களிடம் அறவிடுதல் சரியானதாகலாம்.

என்னுடைய தனிப்பட்ட சிந்தனையில் வெளிநாட்டவர்கள் மீது கொண்டுவரப்பட்ட 15% மேலதிக வரியை விட பல சிறந்த முறைகள் ஆதன விற்பனையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரச் செய்திருக்கலாம். ஆனால் நடந்தது அதுவல்ல?

உள்நாட்டு கொள்வனவாளர்களின் கடன்பழு குடும்ப வருமானத்தின் 167% ஆக அதிகரித்துள்ளது. 1990ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி 87% மட்டுமே. 1990களில்



2 வருட வட்டிவீதம் 12% ஆகக் காணப்பட்டது. இப்பொழுது (2017) 5 வருட வட்டி வீதமே 2.39% ஆகக் காணப்படுகின்றது.

வட்டிவீதம் அதிகரித்தால் என்னநிலை ஏற்படும்? ஆனால் அடுத்த வருடம் (2018) வரை வட்டிவீத அதிகரிப்பை எதிர்பார்க்க முடியாது.(?)

அண்மைக்கால வியாபாரத்தில் முதலீடு செய்தவர்களில் பெரும்பாலானவர்களின் ஒரே நோக்கம் விலை அதிகரிப்பு. சொந்தமாக வாங்கி வாழ விரும்புவர்களைத் தவிர்த்து வாடகைக்காக முதலீடு செய்பவர்களின் வருமானம், ஆதனத்தின் மாதாந்த செலவிற்குப் போதுமா என்பது சிந்திக்கபடுகின்றதா? அடமானக் கடன் பெறுவதில் அரசுகள் ஏற்படுத்திய இறுக்கங்கள் தொடர்கின்றது. நியாயமான முறையில் அடமானம் பெறமுடியாதவர்கள் வேறுபாதையை தெரிவு செய்கின்றார்கள். இதனால் சில நிதி நிறுவனங்கள் வங்குரோத்து (Bankruptcy) நிலைக்கு அண்மையில் சென்று வந்துள்ளன.

இவ்வாறான நிலைமை கனடாவில் குறிப்பாக ரொறன்ரோ பகுதியில், 90களில் காணப்பட்டது. ஜப்பானிலும் இதே காலப்பகுதியில் ஏற்பட்டது. சில வருடங்களிற்கு முன்பாக அமெரிக்கா, அயர்லாந்து, ஸ்பெயின் போன்ற சில நாடுகளிலும் இதே நிலைமை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொருளாதார மடிப்பு (Recession) ஏற்பட்டது. பின்பு ஆமை வேகத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. இவற்றில்
(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.



**Nimal Subramaniam**
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அத்தனைக்கும் ஆசைப்படு



## சத்குரு வாசுதேவ்

### உண்மையை புரிந்துகொள்ள முதலடியை எங்கே வைப்பது?

நீங்கள் பக்கத்துத் தெருவுக்கு போக விரும்பினாலும் சரி, நிலவுக்கே போக விரும்பினாலும் சரி...உங்கள் பயணத்தை எங்கே துவக்க முடியும்? இப்போது நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து தானே? அங்கிருந்து முதலடி, அதற்கப்புறம் அடுத்த அடி என்று தானே பயணப்பட முடியும்.?

ஆன்மீகப் பயணத்துக்காக இருக்குமிடத்தை விட்டு எழுந்து நிற்கும்போதே, சொர்க்க வாசலில் நின்றிருப்பதாக நீங்களாக நினைத்துக் கொண்டால், அது உங்களையே ஏமாற்றிக் கொள்ளும் கற்பனையாக இருக்க முடியுமே தவிர, உங்கள் பயணம் துவங்கவே துவங்காது. உங்களுக்குத் தெரியாததைத் தெரியாது என்று தைரியமாக ஒப்புக்கொள்ளுங்கள். வேதாந்தங்கள் புரிந்துவிட்டதாக வீணான கற்பனைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

எந்த வண்ணங்களை அணிய வேண்டும். எந்த குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். எந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும். எந்த உயரத்தைத் தொட வேண்டும்... இப்படி உங்களுக்கான ஒவ்வொன்றையும் உங்கள் ஆசைதான் முடிவு செய்கிறது. எட்டிப்பிடித்து விட்டால் வெற்றியைக் கொண்டாடுவீர்கள். முடியவில்லை யென்றால், வேதாந்தம் பேசுவீர்களா?

சங்கரன் பிள்ளை வேதாந்த வகுப்புகளுக்குத் தொடர்ந்து போய்வந்தார். ‘எல்லாமே மாயை. நீ என்றும், நான் என்றும், அவன் என்றும் எந்த வித்தியாசமும் கிடையாது. எல்லாமே ஒன்றுதான். நீதான் நான்... நான்தான் நீ!? என்றெல்லாம் கேட்டுக் கேட்டு தான் முற்றும் கற்றுத் தெளிந்துவிட்டதாக நினைத்தார் சங்கரன் பிள்ளை. தெருவில் நடக்கும் போது, தன்னை ஒரு வேதாந்தியாக நினைத்து, தலையைச் சற்று தூக்கி வைத்தே நடந்தார். பசித்தது. சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றார். வேண்டியதை எல்லாம் வாங்கிச் சாப்பிட்டார். ஏப்பம் விட்டார். கல்லாவில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்தார். ‘அவன்தானே நான்... நான் தானே அவன்!’ என்று பில்லைக் கொடுக்காமல் நடந்தார். அவரைத் துரத்திப் பிடித்தார்கள். நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ‘ஐயா, நீதிபதியே! எல்லாமே நான். எதுவுமே நான் இல்லை. நீங்களும் என்னுடன் வேதாந்த வகுப்புகளுக்கு வந்திருந்தால் இதைப்புரிந்து கொண்டு இருப்பீர்கள். இந்த வழக்கே வந்திருக்காது. நான் சாப்பிட்டதற்கு எனக்கு நானே எதற்குக் காசு கொடுக்க வேண்டும்?’

சங்கரன் பிள்ளை இந்த வழக்கைகப் குழப்பப் பார்ப்பதாகச் சொல்லி, ‘இந்த ஆளுக்குப் பத்துக் கசையடி கொடுங்கள்’ என்று உத்தரவிட்டார் நீதிபதி.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

கசையடி விழ ஆரம்பித்ததும், சங்கரன்பிள்ளை வலியில் துள்ளினார். ‘உங்களுக்கு வேதாந்தமே புரியவில்லை. செய்யாத தவறுக்காக என்னை ஏன் அடிக்கிறீர்கள்?’ என்று புலம்பினார்.

‘உங்களை யார் அடித்தார்கள்? கசையடி கொடுப்பவன் வேறு, நீங்கள் வேறு அல்லவே? அவன் தன்னைத்தானே அடித்துக் கொள்கிறான்! என்றார் நீதிபதி. ‘இல்லை, நான் வேதாந்தி இல்லை. சாப்பிட்டதற்குக் காசு கொடுத்துவிடுகிறேன். கசையடிகளை நிறுத்துங்கள்’ என்று மண்டியிட்டார், சங்கரன்பிள்ளை.

இப்படித்தான் மனதைத் தெளிவாக வைத்துக்கொள்ளத் தெரியாவர்கள் தங்களின் நினைவாற்றல், சிந்தனை, கற்பனை, கவனம், உறக்கம், வக்கிரம், படித்தது, புரிந்தது, புரியாதது என்று மனதின் வெவ்வேறு அடுக்குகளை எல்லாம் ஒன்றாகப் போட்டுக் குழம்பிக் கொள்கிறார்கள்.

இந்தப் பூமியில் கடவுள் ஒன்பது முறை அவதரித்தாகச் சொல்கிறோம். ஆனால் உங்களைச் சுற்றிக் கவனியுங்கள். அவர் வருகைகளால் ஏதாவது உபயோகமான மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றனவா? யார் வந்தாலும், போனாலும் நீங்கள் வளரத் தயாராக இல்லாதவரை உங்கள் வாழ்க்கையை யாராலும் மாற்ற முடியாது.

மகான்களின் வருகைகள் மட்டும் முழுமையான விழிப்பு உணர்வைக் கொண்டு வர முடியாது. நீங்களாக மாற விரும்பினால் மட்டுமே மாற முடியும். உங்கள் வாழ்க்கையை நீங்களாக வாழக் கற்றுக்கொள்ளாவிட்டால், பத்தாவது முறை கடவுள் வந்தாலும் அர்த்தமில்லை. பத்தாயிரம் முறை மகான்கள் வந்தாலும் புண்ணியமில்லை.

கடவுளுக்காகக் காத்திருக்காதீர்கள். யாரோ சொன்ன வேதாந்தங்களை அப்படியே ஏற்காதீர்கள். மகான்களைப் பற்றிய புத்தகங்களாக இருந்தால்கூட, அவற்றை உந்து சக்தியாக மட்டுமே பயன்படுத்துங்கள். அவற்றையே உங்கள் படிப்பினைகளாக நினைத்து ஓய்ந்து விடாதீர்கள். தேவையின்றிச் சேர்ந்திருக்கும் குப்பைகளை விலக்கினால் தான், அங்கே பொக்கிஷங்களை நிரப்பமுடியும். தெரியாது என்று ஒப்புக்கொள்ளும் போது தான், அகங்காரம் விலகி, தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெறமுடியும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

‘மிகைப்படுத்தும் விளம்பரங்கள் இல்லாமல் வியாபாரம் செய்ய முடியாதா?’

‘ஒரு குறிப்பிட்ட உணவு விடுதி. பளபள மேஜை. சீருடை அணிந்த பணியாளர்கள். சீரியல் பல்புகள். ஆனால் அங்கே சமையலில் ஈடுபட்டிருப்பவரோ, சாப்பிடுவர்களைப் பற்றிய கவலை இன்றி தரமற்ற பொருட்களை உணவில் சேர்ப்பர்.

இன்னொரு விடுதி. மின் அலங்காரங்கள் இல்லை. கவர்ச்சிகரமான வார்த்தைகள் இல்லை. ஆனால் அங்கே சமைப்பவரோ, சாப்பிடுபவர்களின் உடல் நலத்தைப் பற்றிய அக்கறை கொண்டவர். தரமற்ற பொருட்களை ஒருபோதும் உணவில் சேர்க்கமாட்டார்.

இரண்டில் எந்த உணவு விடுதிக்கு நீங்கள் போவீர்கள்?

வாடிக்கையாளர் மீது உண்மையான அக்கறையுடன் செயல்படும் விடுதிக்கா? பகட்டான வார்த்தைகளைச் சொல்லித் தரமற்ற உணவுகளை விற்கும் விடுதிக்கா?

தரமில்லாத பொருளைத் தயாரித்து, விளம்பரத்தால் ஏமாற்றி, அதை வாடிக்கையாளர் தலையில் கட்டுவது மொத்த உலகத்தையும் கொள்ளையடிப்பதற்குச் சமம்.

விளம்பரம் என்பது உண்மையைச் சொல்வதாக, இன்ன இடத்தில் இன்னது கிடைக்கிறது என்பதை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தும் அறிவிப்பாக மட்டுமே இருக்க வேண்டும். மக்களை ஏய்த்து விற்பனை செய்வதற்காக இருக்கக்கூடாது. வாடிக்கையாளரையும் தன்னைப்போலவே மதித்தால், குற்ற உணர்வுகள் சேராது தானாக வியாபாரம் பெருகும். தொழில் நீண்ட காலமும் நிலைத்து நிற்கும்!’





## 4 day Inner Engineering Program

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 15 - 18, 2017*

TIMINGS: Thursday June 15 : 6:30pm – 9:45pm
Friday June 16 : 6:30pm – 9:45pm
Saturday June 17 : 8:30am – 7:00pm
Sunday June 18 : 7:30am – 7:00pm

*VENUE* - ***Richmondhill: -*** Elegance Banquet Hall
10 Newkirk Rd, Richmond Hill (Toronto), ON L4C 5S3

***MISSISSAUGA*** - Swagat Banquet Hall,
6991 Millcreek Drive, Mississauga (Toronto), ON L5N 6B9

*Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு மார்க்கத்தில் மரம் நாட்டும் வைபவம்

**- வீரகேசரி மூர்த்தி -**

மே 2009 அன்று எமது இனத்தின் விடுதலைக்கு உரமான மக்களின் நினைவாக மரம் நாட்டு வைபவம் மார்க்கம் மாநகரசபை ஆதரவில் எல்சன் வீதி - டெனிசன் வீதி சந்திப்புக்கு அருகாமையில் உள்ள பூங்காவில் மே 20ஆம் திகதி கவுன்சிலர் திரு. லோகன் கணபதி தலைமையில் நடைபெற்றது.



இங்கு உரையாற்றிய கவுன்சிலர் திரு. லோகன் கணபதி "மார்க்கம் மாநகர சபை தமிழ் மக்களின் மாநகரமாகும். இங்கே அதிகளவிலான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். மார்க்கம் மாநகரில் வாழ்ந்து வரும் தமிழ் வாக்காளப் பெருமக்கள் தமக்கு சேவை செய்வதற்காக தொடர்ந்து மூன்று முறை என்னை மார்க்கம் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்தார்கள். அதனால் நான் மார்க்கம் மாநகரிலுள்ள வீதிகளுக்கு "யாழ் வீதி", "வன்னி வீதி" என தமிழ் பெயர்களை சூட்டி வருகின்றேன். அது மாத்திரமன்றி நம் நாட்டில் கொன்றழிக்கப்பட்ட தமிழ் மக்களின் நினைவு தினத்தை ஒட்டி டெனி சன், எல்சன் வீதிகளின் சந்திக்கு அருகி லுள்ள Fairtree Pond என்ற இந்த இடத்தில் மரம் நாட்டு வைபவத்தினை ஏற்பாடு செய்தோம். இதில் கலந்து கொண்டு மரங்களை நாட்டுவதற்காக வந்திருக்கும் உங்களை அன்புடன் வரவேற்கின்றேன். உங்களுக்கு உதவி செய்ய மார்க்கம் மாநகர சபையில் பணி யாற்றும் மரம் நடுகையில் அனுபவமுள்ள ஊழியர்களும் இங்கு வந்துள்ளனர். இந்த இடத்திற்கு அருகே செப்பனிடப்பட்டுள்ள இடத்தில் வீடுகள் கட்டப்பட இருப்பதாகவும் அதற்கு போக்குவரத்து வசதிக்காக Kirhkam Road நீடிக்கப்பட்டு Steeles வீதி யுடன் இணைக்கப்பட இருப்பதாகவும்" குறிப்பிட்டார்.

# இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பேரவலம்!

இலங்கையில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் தென்மேற்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தி னால் 169 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். மேலும் ஒரு இலட்சத்தி ஐய யிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த நான்கு லட்சத்துக்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளதாகவும், ஆயிரத்தி அறுநூறு வீடுகள் சேதம் அடைந்துள்ள தாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மாத்தறை, களுத்துறை, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் உட்பட மொத்தம் 14 மாவட்டங்களில் பெருங் காற்றுடன் பெய்த மழையினால் ஆறுகளின் அணைகள் உடைந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாகவே இந்தப் பேரவலம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. கட்டுக்குருந்த விமானப்படை முகாமில் இருந்து விமானத்தின் மூலம் படகுகளைக் கொண்டுசென்ற அரச படை யினர், அதிகாரிகள், மற்றும் பொது மக்களின் பேருதவியி னால் 24 ஆயிரத்தி 603 குடும்பங்களைச் சேர்ந்த மக்களை



பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. தற்போது மழை வீழ்ச்சி குறைவடைந் துள்ள போதிலும் வெள்ளம் குறைவடைய வில்லை என வடிகாலமைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



## 'புற்றுநோய்' (Cancer) ஒரு புரியாத நோயா?'

எம்மைக் கதிகலங்க வைக்கும் நோய்களில் புற்று நோயும் ஒன்றாகும். புற்றுநோய் பற்றிய அறிவும் அவதானிப்பும் பொதுமக்களிடம் பெருகி வருகின்றது. இந்நோய்த் தன்மையை ஆரம்பத்தில் கண்டுபிடிக்கக்கூடிய பரிசோத னைகளும், அறிமுகமாகியுள்ளதினால் குண மாக்கக்கூடிய வைத்திய சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நோய் பரம்பரை நோய் அல்ல எனக்க ருதி எமக்கு ஏற்படாது எனக் கருதவேண்டாம். எவரும் மிக அவதானமாக இருக்க வேண் டும். இதில் எவ்வித பாகுபாடுமில்லை. எந்த வயதினரையும், எத்தரத்தில் உள்ளோரையும் தாக்கும் தன்மை உடையது. புற்றுநோய் ஆனது எமது உடலின் எந்த பகுதியையும், உறுப்புக்களையும் தாக்கலாம். அவை தோன் றும் பகுதியையும், பிரிவையும் கொண்டே பெயரிடப்பட்டுகின்றது. இப்படி பலவாக இரு ந்தாலும் அவற்றில் மார்ப்புப்புற்று, வாய்ப்புற்று, கர்ப்பப்பைப்புற்று, ஈரல் புற்று என்பவற்றை முக்கியமாக எடுத்துக் கொள்ளலாம்.

பெண்களை அதிகம் பீடித்துக் கொள்வது மார்புப்புற்று நோயாகும். அத்துடன் நின்றுவி டாமல் கர்ப்பப்பை புற்று, களப்புற்று (Oeso phagus), வாய்ப்புற்று என்பனவும் ஏற்பட லாம். ஆண்களுக்கு வாய்ப்புற்று, களப்புற்று போன்றவையும், குழந்தைகளுக்கு லியூகீ மியா (Leukemia) இரத்தப்புற்று நோய் ஏற் படலாம். மேலும் பொதுவில் சுவாசப்புற்று, ஈரல்புற்று போன்றவையும் ஏற்படலாம்.



உடம்பில் உள்ள சிலகலங்கள் வழமைக்கு மாறாக திடீரென பெருகுதல் போன்ற நிலை யும் புற்று நோய்க்குக் காரணமாக அமைய லாம். ஆரம்பத்தில் இவை சிறுவீக்கம் அல் லது வளர்ச்சியாகவும் ஆரம்பிக்கலாம். இவை அருகில் உள்ள பகுதிகளுக்கு நேரடியாகப் பரவுகின்றது.


பின்பு நிணநீர்த் தொகுதி, இரத்தோட்ட மூல மும் உடலின் எல்லாப்பகுதிகளுக்கும் பரவு கின்றது. இப்படிப் பரவினால் குணம் பெறுவது மிகமிக கடினமாகும் என ஆய்வில் அறிய முடிகின்றது. ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தால் அவ் உறுப்பை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி 'ரேடியம்' கதிர்மூலம் புற்றுநோய்க் கலங்களை செய- லிழக்கச் செய்யலாம் எனவும் கூறப்படு கின்றது. மேலும் புற்று நோய்க் கலங்களை அழிக்க 'Cytotoxic' எனும் காரமான மருந்து உபயோகப்படுத்தப் படுவதாகவும் கூறப்படுகின்றது.

புற்றுநோயில் ஒரு தன்மையுண்டு. அதாவது ஆரம்பநிலையில் எந்தவித கடுமையான அறி குறிகளையோ உபாதைகளையோ வலித் தன்மையையோ காணமுடியாது. ஆரம்பத் தில் சாதாரணநிலையில் காணப்படலாம். இப்படிப்பட்ட நிலையில் கவனியாது பராமுகமாக இருந்தால் புற்றுநோய் பரவி விடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். எனவே புற்று நோயின் முதல் அறிகுறி என்ன? என்பதை நாம் எல்லோரும் அறிந்திருப்பதினால் எமக்கும் மற்றோருக்கும் நன்மை பயக்கும். உடன் வைத்தியர்களைக் கண்டு பரிசோதித்து பயன்பெற்று வாழமுடியும்.

எமது உயிருக்கு தீங்கு நிகழாமல் இருக்க ஆரம்பத்திலேயே புற்றுநோயின் அறிகுறிக ளைக் கண்டு கொள்வது மிக நன்றாகும். மேலும் இப்படியான அறிகுறி தங்களுக்கு தெரிந்து விட்டால் இது புற்றுநோய் தான் எனக் கலங்கிவிடாதீர்கள். உறுப்புக்களின் நோய்களுக்கும் இவ்வாறான அறிகுறிகள் தென்படலாம். எதற்கும் விரைவாக வைத்திய ரைச் சந்தித்து பரீட்சித்து அவரின் முடிவை அறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்வது மிக நன்று.

ஒருவருக்கு உடம்பில் திடீரென ஏதாவது கட்டி தோன்றி வளர்ச்சியடையாமல் இருக்க லாம். அல்லது மெதுவாக வளர்ச்சியடைய லாம். வேதனை இல்லாமலும் இருக்கலாம். இந்நிலையில் தாமதிக்காமல் வைத்தியரைக் கொண்டு பரீட்சிப்பது முக்கியமாகும். முக்கி யமாக மார்பில் கட்டி தென்பட்டால் தாமதிப் பது தவிர்க்க வேண்டும். உடனடியாக வைத் தியர் ஆய்வு தேவையாகும். மேற்கூறிய குறி யை விட ஒருவருக்கு உடலில் மெலிவு நிலை ஏற்படலாம். அத்துடன் பசியின்மை,

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)



# மூலம் நிர்மூலமாக

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)

C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

மக்களைத் தாக்கும் பெரும்பாலான நோய்களில் மூலநோயும் ஒன்று. அதிலும் கோடை-காலம் (Summer) வந்துவிட்டால் மூலநோய் பாதிப்புள்ளவர்கள் படும்பாடு சொல்லில் அடங்காது. இந்த நோய் வயது வேறுபாடின்றி அனைவரையும் தாக்கும். இந்த நோய் ஆரம்பித்ததும் தகுந்த சிகிச்சை எடுக்காது மற்றவர்களிடமும் சொல்ல வெட்கப்பட்டு காலம் கடத்துபவர்கள் இறுதியில் பெரும் உபாதைக்கு முகம் கொடுக்க நேரிடலாம்.

### மூலநோய் என்றால் என்ன?

ஆசனவாயில் உள்ள இரத்த நாளங்கள் நீண்டு சுருங்கி வீங்கி விரிவடைந்து காணப்படும். சித்தமருத்துவத்தில் இவற்றை உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், சீழ்மூலம் என்று வகைபடுத்தியுள்ளனர்.

### மூலநோய் உண்டாகக் காரணங்கள்

மூலநோய் உண்டாவதற்கு முதல் காரணம் மலச்சிக்கல் தான். அடுத்து பரம்பரையாகவும் இந்த நோய் வரலாம். உணவுப்பழக்கம் அதாவது எளிதில் ஜீரணமாகாத உணவு வகைகள், அடிக்கடி உண்பது, மாமிச உணவுகளை அதிகமாக உண்பது, பித்தத்தையும், வாயுவையும் உண்டாக்கும் உணவுகளை அடிக்கடி உண்பது, ஒரே இடத்தில் நீண்டநேரம் உட்கார்ந்திருத்தல், போதிய தூக்கமின்மை, அதிக உடல் சூடு, மிதமிஞ்சிய வேலைப்பழு, மன அழுத்தம், பசியை அடக்குதல், பட்டினி கிடத்தல், மற்றும் அதிக உடல் எடை, பெருவயிறு போன்றவை மூலத்தை உருவாக்கும் காரணங்களாக அமைகின்றது.

### அறிகுறிகள்

1.மலம்கழிக்க மிகவும் சிரமப்படுதல்
2.மலம் கழிக்கும்போது ஆசனவாயில் பொறுக்கமுடியாத வலி, எரிச்சல் உண்டாகும்.
3.மலம்கழித்த பின் இரத்தம் வெளியேறுதல்.
4.ஆசனவாயில் அரிப்பு, கடுகடுப்பு.
5.மலம் கழிக்கும்போது மூலமுளை என்ற இரத்த நாளம் வெளிப்படுதல்.
6.மலம் சீரான முறையில் வெளிவராது சிறிது சிறிதாக வெளிவருதல்.

### மூலநோய்க்கு உணவுக்கட்டுப்பாடு

மூலநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நார்ச்சத்து (Fiber) நிறைந்த தானியங்களை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். வரகு, தினை, ஓட்ஸ், கைக்குத்தல் அரிசி போன்ற வற்றை உணவில் அதிகம் சேர்ப்பது சிறந்தது. உடலுக்குத் தேவையான தண்ணீர், காய்கறி, பழங்களுடன் கூடிய உணவு, உடற் பயிற்சி, நல்ல உறக்கம் போன்றவற்றை ஓரளவு பின்பற்றினால் மூலநோய் நம்மை அணுகாது. மூலநோயால் பாதிக்கப்பட்டவர் கள் தண்ணீர் அதிகம் அருந்த வேண்டும். உடலில் போதிய அளவு தண்ணீர் இருந்தால்தான் அது குடல் இயக்கத்தில் பிரச்சினையை ஏற்படுத்தாது மலம் எளிதாக வெளியேற உதவும்.

### மூலநோய்க்கு உகந்த உணவுகள்

**வாழைப்பழம்** - நன்றாக பழுத்த வாழைப் பழத்தை இட்லி அவிப்பது போல் வேகவைத்து எடுத்து நன்றாக மசித்து ஒரு ரம்ளர் பால் சேர்த்து ஒரு நாளில் மூன்று தடவை சாப்பிட்டு வந்தால் மூலநோய் விரைவில் குணமாகும்.

**மாதுளை** - மாதுளைப்பழத்தின் தோலை சிறிது நீர்விட்டு வேக வைத்து அந்த நீரை மட்டும் தினமும் 3 வேளையும் உணவிற்குப் பின் அருந்தி வந்தால் மூலநோய் குணமாகும்.

**மாங்கொட்டை** - முற்றிய மாங்கொட்டையில் இருக்கும் பருப்பை எடுத்து காய வைத்து பொடியாக்கி தினமும் காலையில் இரண்டு தேக்கரண்டி அளவு எடுத்து தேனில் குழைத்து சாப்பிட்டுவர மூலநோய் வேதனை குறையும்.

**மோர்** - மூலநோயை நீக்கும் ஒரு சிறந்த மருந்து மோர். நன்கு கடைந்த மோருடன் எலும்மிச்சை சாறு சிறிது உப்பு மற்றும் புதினா இலையும் சேர்த்து மதிய வேளையில் அருந்திவர மூலநோய் குணமாகும்.

**கருணைக்கிழங்கு** - கருணைக்கிழங்கை தினசரி உணவில் சேர்த்தால் மூலப் பிரச்சினை நீங்கும். புளி கலந்த தண்ணீரில் ஊறவைத்து பின்பு அதனைக் காயவைத்து பொடியாக்கி வைத்துக்கொண்டு தினமும் உணவிற்குப்பின், ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் மூலநோய் முற்றிலும் குணமாகும்.

### யோகா முறையில் மூலத்தை நீக்குதல்.

**மூலபந்தம்** - சர்வாங்க ஆசனநிலையில் இருந்து கொண்டு கால்கள் இரண்டையும் மடக்கி உள்ளங்கால்களை ஒன்றுடன் ஒன்று



சேர்த்து வைத்தபடி மூச்சினை உள்இழுத்தபடி மூலாதாரத்தையும் சமகாலத்தில் உள்ளிழுத்து சில வினாடிகள் நிறுத்தியபின் இரண்டினையும் வெளிவிட வேண்டும். இவ்வாறு 10 தடவை தினமும் செய்து வந்தால் கீழே இறங்கிய மூலமுளை உள்ளே தள்ளப் படுகின்றது. இதனால் வலியும் குறைந்து மூலநோய் முற்றிலும் குணமாகும்.

இதனை ஒரு யோகா நிபுணரின் வழிகாட்டலின்படி செய்வது அவசியம்.

---

# நாமும்...

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

இருந்து, இவ்வாறானதொரு நிலைமையில் இருந்து இம்முறை கனடா தப்பித்துக் கொள்ளுமா?

Baby Boomers (1945-1965) காலப்பகுதியில் பிறந்தவர்கள் ஆதனம் வாங்கும்போது குடும்ப வருமானத்தின் ஏறக்குறைய மூன்று மடங்கு விலையிலேயே கொள்வனவு செய்தார்கள். ஆனால் மிலெனியல் அல்லது Generation 'Y' என அழைக்கப் படுபவர்கள் (1981-2000) தமது வருமானத்தின் ஏறக்குறைய 6 மடங்கு பெறுமதியான ஆதனத்தை கொள்வனவு செய்கின்றார்கள். இதனால் இவர்களின் அடமானக் கடன் பெறும் தொகை அதிக-மாக உள்ளது. இந்தக்கடனை அடைப்பது இலகுவாக இருக்குமா?

- எம் கையில் தகுந்தமுடிவு உள்ளதா?
- நியாயமான சிந்தனை தகுந்த பதில் வழங்கலாம்.
- காலதாமதம் முக்கிய காலத்தை தொலைத்து விடலாம்.

### பிற்குறிப்பு

அண்மைக்காலங்களில் ஏற்கனவே வாங்கிய வீடுகள் Completion Date இல் விற்றல் - வாங்கல் முறையாக நிறைவேறுவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் பல Closing நிறைவேறாமல் போகின்றன?

1990களின் ஆரம்ப நிலையை நினைவு படுத்துவதனை தவிர்க்க முடியவில்லை.

### சந்தையில் உள்ள விலை கூடிய ஆதனங்கள்

| | |
|---|---|
| 50 Yorkville Ave. | $36M |
| 68 Bridle Path Ave. | $35M |
| 15350 King City & Bathurst | $24.95M |
| A Lakefront Property (2615 Ridge Road West) | $19.5M |
| Bridle Park Property | $19.3M |



## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




### 4. பேரிணை காலம் (தொடர்ச்சி)

சென்ற தடவையில் பேரிணை காலத்தின் ஆரம்பம் பற்றிக் கூறியிருந்தேன். மேலும் பேரிணை காலத்தின் சுவையான விடயங்கள் பற்றிப் பார்ப்போம் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இயற்பியலின், இயற்கையின் பல அழகியல் வேலைப்பாடுகளை இந்தப் பகுதியைப் பார்த்துக் கொண்டு போவதில் இருந்து அறிந்து கொள்ளலாம். அதன் முதற்படியாக முக்கியமான விடயம் ஒன்றினை இன்று பார்க்கப் போகின்றோம்.

### வெற்றிடமும் குவாண்ரம் வெற்றிடமும்

அடுத்துப் புடவியின் பருமனைப் பார்ப்போம். சாதாரணமாகவே புடவியின் பருமன் எப்பொழுதுமே விரிவடைந்து கொண்டு இருக்கின்ற ஒன்று என்பது எங்களுக்குத் தெரிந்த விடயம். பேரிணக் காலத்தின் ஆரம்பத்தில் மிகமிகச் சிறியதாக, இலத்திரனின் பருமன் அளவிலேயே புடவி அதாவது பேரண்டம் இருந்தது. இப்போது புடவி சின்னஞ் சிறியது என்றாலும், அது தனக்கென குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதான இடத்தை, வெளியைக் கொண்டிருந்தது. சிறிய இலத்திரனளவு புடவிதானே, கொண்டிருந்த வெளி எப்படியானதாக இருக்கும் எனக் கற்பனை பண்ணிப் பாருங்கள். இந்த வெளியினுள் இன்னமும் எந்தவொரு துணிக்கையும் தோன்றவில்லை. வெறுமையான வெளிதான். இந்தப் பொட்டு வெளியினுள்தான் ஈர்ப்புவிசையும், பேரிணைவிசையும் தமது வித்தைகளைக் காட்டக் கூடியனவாக இருந்தன. இருந்தும் என்ன பயன்! அவ்விசைகள் தங்களின் திறனைக் காட்டக் கூடியதாக ஒன்றுமே அங்கில்லை. ஆனால் இந்த ஒன்றுமே இல்லாத வெறுமையான வெளிதான் எல்லாவற்றிக்கும் ஆரம்பம் ஆகிவிடுகின்றது. இவ்வெளியினை ஆங்கிலத்தில் Void எனக் கூறுகி-றார்கள்.

இன்றிருக்கும் எல்லாவற்றிக்கும் காரணமாக 'ஒன்றுமே இல்லா' அந்த வெற்று வெளியே மூலமாக இருந்திருக்கின்றது. அப்படியான வெற்றிடத்தைத்தான் நாங்கள் பேரிணை காலத்திற் காண்கிறோம். எல்லாவற்றிக்கும் மூலம் என்பதிற் கூட, இந்நாட்களில் இரண்டு வகையான கருதுகோள்கள் உள்ளன. ஒன்று, வெற்றிடக் கருதுகோள் மற்றது குவாண்ரம் வெற்றிடக் கரு-துகோள். இந்த இரண்டு கருதுகோள்கள் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோம். வெற்றிட மூலம் என்ற கருதுகோள், ஒன்றுமே இல்லாத ஒன்றில் இருந்துதான் பேரண்டத்தின், உயிரினங்கள், மற்றப் பொருட்கள் எல்லாம் தோன்றின எனக் கூறுகின்



றது. இதனை ஏற்றுக் கொள்வதில் சிக்கல் உண்டு. எப்படி ஒன்றுமே இல்லாத ஒன்றில் இருந்து எல்லாமும் தோன்றும் என்பது இக்கருதுகோளில் இருக்கின்ற அடிப்படையான குறைபாடு என்கிறார்கள். வெற்றிடம் என்பது சடங்களோ சக்தியோ ஒன்றுமே இல்லாத ஒன்று. ஆனால், இயற்பியலின் செம்மையியலின்படி, பேரண்டத்தில் வெற்றிடம் என ஒன்று இல்லை. எல்லா இடங்களும் ஈதர் என்ற ஊடகத்தால் நிரம்பியுள்ளன. பின்னராக அயன்ஸ்ரைன் அக் கருத்தினை மாற்றினாலும் கூட, வெற்றிடத்தை வெற்றிடமாகப் பார்க்க முடிவதில்லை. அதிலும் குறிப்பாக இக்காலத்தின் அறிவியல் நிலையில் பொருட்களின் புலம் (Field) என்பதும், புலப் பாயம் (Flux) என்பதும் எல்லா இடங்களிலும் பரவியுள்ளன என்ற சித்தாந்தம் ஒன்று உண்டு. அதன்படி பார்த்தால், வெற்றிடம் என்பதே உறுதியானதாக இல்லாததாக இருப்பதால், ஒன்றுமே இல்லாத மூலத்தில் இருந்துதான் எல்லாம் வந்தன என்பது சிக்கலான கருதுகோளாகத்தான் இருக்கின்றது.

### குவாண்ரம் வெற்றிடம்

அடுத்தது குவாண்ரம் வெற்றிடக் கருதுகோள். இதற்கும் அழகான விளக்கம் உள்ளது. ஆனால் இதனையும் தெரிந்து கொள்வதிற் கொஞ்சம் சிக்கல் உண்டு. குவாண்ரம் கருதுகோளின்படி, வெற்றிடம் என்பது உண்மையான வெற்றிடம் இல்லை. ஏராளமான துணிக்கைகளைக் கொண்ட வெளிதான் வெற்றிடம். என்ன முன்னுக்குப் பின் முரணாகத் தெரிகின்றதே எனப் பார்க்கின்றீர்களா? இப்படியான முரண்மைகளினால் தான் இயற்கையின் பல இரகசியங்கள் அம்பலமாயின. இந்த முரண்மையிலும் அருமையான வெளிப்பொன்று உண்டு.

குவாண்ரம் வெற்றிடத்திலே ஏராளமான துணிக்கைகள் உள்ளனவாம். ஆனால் அவை எங்களது கண்களுக்கு அல்லது புலன்களுக்குப் புலப்படுபவை அல்ல. அதனால்தான் அதனை நாங்கள் வெற்றிடம் என்கிறோம். குவாண்ரம் வெற்றிடத்தின் துணிக்கைகளை ஏன் எங்களால் அறிய முடியாது இருக்கின்றது? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். பதில் இது தான். அத்துணிக்கைகள் எங்களது கண்களால், புலன்களால் அறியக் கூடியதான காலத்திற்கு இருப்பதில்லை. அவை இருக்கக் கூடிய காலம் மிகமிகக் குறுகியதாக இருக்கின்றது. அதனால் எங்களினது புலன்களுக்கு சிக்குவதற்கு முன்னரே அவை மறைந்து விடுகின்றன. அதனால்தான் வெற்றிடமானது ஒன்றுமே இல்லாதது போல எங்களுக்குத் தெரிகின்றது என்கிறது குவாண்ரம் கொள்கை.
சரி, ஒன்றுமே இல்லாத வெற்றிடத்தில் எவ்விதம் இத்துணிக்கைகள் வருகின்றன? பின் ஏன் மறைந்து போகின்றன? பதில் மிகவும் சுவாரசியமானது.

சக்தியும் சடங்களும் ஒன்றுதான் என்பது எங்களுக்குத் தெரியும். வெற்றிடத்தில் சடங்கள் (துணிக்கைகள்) தோன்ற வேண்டுமாயின் சக்தி வேண்டும். ஒன்றுமே இல்லாத வெற்றிடத்தில் இந்தச் சக்தியிற்குத் துணிக்கைகள் எங்கு போக முடியும்? இங்கு சிக்கல் சுலபமாகத் தீர்க்கப்படுகின்றது. வெற்றிடத்தில் இருந்து சக்தியைக் கடனாக வாங்கி, துணிக்கைகள் தோன்றுகின்றன. இங்குதான் இயற்கையின் அடுத்த அழகு அல்லது இயற்பியலின் சுவை தெரிகிறது.


அடுத்த தடவையில் அந்த அழகினைப் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான வி'யங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*



Real Estate Class
FREE Real Estate Classes
start every week
Call for info. :416.321.6969

# நான் ராஜா ரசிகன்! மதன் கார்க்கி நேர்காணல்

**சந்திப்பு: சிவதாணு**

"அப்பாவின் நண்பர் ஒருவர் போன் செய்தார். "தம்பி நான் மதுரையில் தியேட்டர் வச்சிருக்கேன். அது வச்சிருக்கற தோட புண்ணியத்தை இன்னைக்குத்தான் அடையுறேன். கூட்டம் கூட்டமா வந்து படத்தைப் பார்த்து பாராட்டிட்டுப் போறாங்க. ஒவ்வொரு வசனத்திற்கும் காட்சிக்கும் கைத்தட்டி ரசிக்கிறார்கள். இப்படியெல்லாம் நடந்ததே கிடையாது" என்று நெகிழ்ந்துப் போய் சொன்னார். இதற்கு முன் எந்தப் படத்திலும் நான் இவ்வளவு இன்வால்வ் ஆனதில்லை. வசனம் எழுதிக் கொடுத்து விட்டால் இயக்குனர்தான் டப்பிங் பார்த்துக் கொள்வார். ஆனால், பாகுபலியில் எழுதத் தொடங்கியது முதல் டப்பிங் வரை கூடவே இருந்தேன். டப்பிங்கில் எங்கு குரலை ஏற்றவேண்டும், எங்கு இறக்கவேண்டும் என்று ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து சொல்லிக் கொடுத்தேன். என் உழைப்பு வீண் போகவில்லை என்பதையே அப்பாவின் நண்பர் பேச்சு காட்டியது."

நெகிழ்ந்து பேசுகிறார் மதன் கார்க்கி. மகிழ்ச்சியாக இருக்கிறார். பொக்கே, போன் கால்கள் என 'பாகுபலி-2' வசனங்களுக் காக இப்போதும் பாராட்டுகள் குவிந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு பக்கம் வசன வாய்ப்புகள் வாசல் கதவை தட்டு கின்றன. வைரமுத்து மகன், பாடலாசிரியர், வசனகர்த்தா. கவிப்பேரரசு என்ற பெரிய நிழலை கடந்து, கோடம்பாக்கத்தில் தனிப் பேரரசு அமைத்து விட்டார்.
மதன் கார்க்கியை சந்தித்தோம்.

**பாடலாசிரியர், வசனகர்த்தா - இரண்டில் உங்களுக்கு விருப்பமானது எது?**

இரண்டுமே முற்றிலும் வேறுபட்டது. வசனங்களில் சில இடங்களில் எதுகை மோனை வரவேண்டும், சில இடங்களில் வரக்கூடாது. பாடலாசிரியரை மறந்துட்டு வசனம் எழுதனும். சில சிரமங்கள் இருந்தாலும் வசனத்தைவிட பாடல்கள் எழுதுவதுதான் சிரமம். டியூனுக்கு தகுந்த துபோல் பாடல்களை செட் செய்ய வேண்டும். ஆனால், வசனம் எழுத இது போன்ற வரையறைகள் இல்லை.

**ராஜமௌலி நட்பு கிடைத்தது எப்படி? பாகுபலி வசனங்கள் குறித்து என்ன சொன்னார்?**

'நான் ஈ' படத்தின்போது, "ஒரு தெலுங்கு படம் தமிழிலும் வருகிறது. பாட்டெழுத முடியுமா" என்று கேட்டார்கள். "டப்பிங் படம் பண்ணுவதில்லை" என்று கூறி விட்டேன். திரும்பவும் மூன்று தடவை அழைப்பு வந்தது. அப்பா ஆபிஸுக்கும் போன் செய்துள்ளார்கள். பிறகு அப்பா தான், "ராஜமௌலி தெலுங்கில் பெரிய இயக்குனர். ஒருமுறை ஐதராபாத் போய் பார்த்துட்டு வா" என்றார். அதன்பிறகு, நான் ஐதராபாத் சென்றேன். 'நான் ஈ'



கதையை 20 நிமிடம் மட்டும்தான் சொன்னார். எனக்கு பிடித்துவிடவே பாட்டு எழுதிக் கொடுத்தேன். நான் எழுதிய 'பென்சிலை சீவிடும் பெண் சிலை' என்றொரு வரி அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. பாராட்டிவிட்டு, "வசனம் எழுது வீர்களா" என்றார். "எந்திரன், நண்பன் போன்ற படங்களில் பண்ணிருக்கேன்" என்றேன். "தெரிஞ்சிருந்தால் உங்களை நான் முன்னரே கூப்பிட்டிருப்பேன். அடுத்த முறை படம் பண்ணும்போது நிச்சயமாக கூப்பிடுகிறேன்" என்றார். 'நான் ஈ' வெளியான பிறகு, திடீரென ஒருநாள் போன் செய்து, "பாகுபலி இயக்குகிறேன். வசனம் எழுத வேண்டும். மீட் பண்ணலாமா?" என்றார். நானும் சில வசனங்களை பழையத் தமிழில் வரும்படி எழுதிக் கொடுத்தேன். அது அவருக்கும் அவரது தந்தை விஜேந்திர பிரசாத்துக்கும் பிடித்துவிட்டது. அதன்பின்னர், பாகுபலியில் நிறைய வசனங்களை குறிப்பிட்டு பாராட்டினார். குறிப்பாக, சீமந்த விழாவில் "நானும் கணவரும் தந்தையை இழந்தவர்கள். குந்தலதேசத்தின் வழக்கப் படி பிறந்த குழந்தையை ஆயிரம் பிறை கள் காணவேண்டும் என்பதற்காக பாட்டனா ரிடம் கொடுப்பதுதான் மரபு. எங்கள் குழந்தையை உங்கள் கைகளில் ஏந்துவீர்களா?" என்று கட்டப்பாவிடம் தேவ-சேனா கேட்பது ராஜமௌலி சாருக்கு மிகவும் பிடித்துவிட்டது. நெகிழ்ந்துபோய் விட்டார். அதேபோல சிவகாமிக்கும் தேவ-சேனாவுக்கும் இடையே நடக்கும் வழக்கு விசாரணை காட்சியையும் ரொம்பவே ரசித்து பாராட்டினார்.

**ஆனால், பாகுபலியின் மூலமும் தெலுங்குதானே. உங்கள் பணி மொழியாக்கம் தானே?**

நிறைய பேர் அப்படித்தான் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாகு-பலி ஒரு தமிழ்ப் படம்தான். சிந்தனை, கதை என்று தமிழ், தெலுங்கு இரண்டிலும் ஒரே நேரத்தில் உருவான குழந்தைதான் பாகுபலி. தெலுங்கில் இருந்து தமிழுக்கு மாற்றவில்லை, தமிழில் இருந்துதான் தெலுங்கிற்கு மாற்றினார்கள். பாகுபலியை 60 சதவீதத்திற்கும் மேல் முதலில் தமிழில் எழுதிவிட்டுத்தான் தெலுங்கில் மொழி மாற்றம் செய்தார்கள். தமிழில் நான் எழுதிய வசனங்கள்தான் தெலுங்கில் இருப்பது. நான் தமிழில் எழுதியதை அஜய், விஜய் என்ற இரண்டு எழுத்தாளர்கள் தெலுங்கில் மொழியாக்கம் செய்தார்கள். அவர்கள் எழுதியது நல்லாருந்துச்சினா, அதை நான் தமிழில் மொழியாக்கம் செய்துக்கொண்டேன்.

மேலும், தமிழுக்கும் தெலுங்குக்கும் பாகு-பலியில் நிறைய வித்தியாசம் உள்ளது. தெலுங்கில் வசனங்கள் பேச்சு வழக்கில் இருக்கும். தமிழிலும் அப்படியே பண்ண லாம் என்றார்கள். ஆனால், அது சரியாக வராது என்று மறுத்துவிட்டேன். ஆதாரங் கள் கொடுத்து, இந்த மொழி நடைக்கு மற்றவர்களை ஒப்புக்கொள்ளச் செய்ய நிறைய போராடினேன்.

**பாகுபலி சரித்திரப் படம். அதற்கென்று தனியாக ஹோம் ஒர்க் செய்தீர்கள்?**

எனது ஹோம் ஒர்க்கை பாகுபலிக்கு முன்பே சின்ன வயதிலேயே துவங்கி விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். அப்பாவுக்கு சரித்திரப் படங்கள்தான் ரொம்பப் பிடிக்கும். மன்னாதி மன்னன், நாடோடி மன்னன், உத்தம புத்திரன், வீரபாண்டிய கட்டப்பொம்மன் போன்ற படங்களை வீட்டில் அடிக்கடி போட்டு பார்த்துக் கொண்டேயிருப்பார். அப்போ-தெல்லாம் நானும் அப்பாவுடன் சேர்ந்து பார்ப்பேன். இப்படி 'குலே பகாவலி', 'நாடோடி மன்னன்' படங்களை மட்டும் 300 தடவைக்கு மேல் பார்த்திருப்பேன். அந்தப் பயிற்சியால் பாகுபலியின் சரித்திரப் பின்னணி எனக்கு சிரமமாக இல்லை.

**பாடலாசிரியர், வசனகர்த்தா... சினி-மாவில் அடுத்து வேறு என்ன புதிய அவதாரம் எடுக்க திட்டமிட்டுள்ளீர்கள்?**

பாகுபலி சக்ஸஸுக்குப் பின்னர் வசனம் எழுதச் சொல்லி நிறைய படங்கள் வந்து கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுத்து பண்ணலாம் என்றிருக்கிறேன். ஏற்கெனவே ஒப்புக்கொண்ட பாடல்கள் அதிகம் கைவசம் உள்ளன. அந்த வேலை யெல்லாம் முடித்துவிட்டு திரைக்கதையும் வசனமும் எழுதலாம் என்றிருக்கிறேன். முருகதாஸ் அவர்களின் ஸ்பைடர், ராஜீவ் மேனனுடன் ஒரு படம், ஷங்கருடன் எந்திரன் 2, ரஹ்மான் சார் இசையில் சச்சின் பயோகிராஃபி என நிறைய போய்க் கொண்டிருக்கிறது.

**ஹீரோபோல்தானே இருக்கிறீர்கள், நடிக்கலாமே?**

பாடல் எழுத வந்த ஆரம்பத்திலிருந்தே வாய்ப்புகள் நிறைய வந்துக்கொண்டுதான் இருக்கிறது. 7 வருடமாக தவிர்த்துக் கொண்டிருக்கிறேன். விருப்பமில்லாமல் எதுவும் பண்ணக்கூடாது என்கிற நிலைப் பாட்டில் உறுதியாக இருக்கிறேன்.

**'பெண்ணை சீண்டியவனிடம் வெட்ட வேண்டியது விரலை அல்ல, தலையை' என்கிறான் பாகுபலி. நிஜத்தில் பெண்க ளுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்புணர்வு சம்பவங்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

படத்தில் காட்சி அப்படி இருந்ததால் அப்படி வசனம் எழுதினேன். உண்மையில் இதுபோன்ற பிரச்சனைகளில் ஒருவரின் தலையை எடுப்பதோ கொல்வதோ தவ-றானது என்றே நினைக்கிறேன். இது ஒரு சமூகப் பிரச்னை. ஒட்டுமொத்த சமூகம் செய்யும் தவறுக்கு பாதிக்கப்பட்ட ஒருவனை குற்றவாளியாகப் பார்ப்பதைவிட அவனை ஒரு மனநோயாளியாகப் பார்த்து திருத்தவேண்டும் என்பதுதான் எனது கருத்து. குழந்தைகளுக்கு சிறு வயதி-லேயே உடல் சார்ந்த புரிதலை ஏற்படுத்தக் கூடிய பாலியல் கல்வியை கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காதது சமூகத் தின் தவறுதான். பெண்கள் என்றாலே அவர்கள் ஒரு போகப்பொருள், காட்சிப் பொருள் என்று சொல்லும் இலக்கியங்கள், விளம்பரங்கள் அனைத்தையும் ஊக்கப்ப டுத்திக் கொண்டிருக்கிறோம்.

**பாகுபலியில் உங்களை ஈர்த்த கதாப்பாத்திரம்?**

பல்வாள்தேவன். எல்லா கேரக்டரை விடவும் பல்வாள்தேவன் ஒரு கவிஞன். பேசுவதே கவித்துவமாக இருக்கும். அமைதியான கேரக்டர். அவன் பேசுறது எல்லாம் சங்கிலி; கிரீடம் போன்றவற்றோடுதான்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


## நூல் வெளியீட்டு விழா

பரம் ஜி. ஞானேஸ்வரன் எழுதிய "விடியலைத் தேடி" (திரைப்படப் பிரதி நூல்) வெளியீட்டு விழா

காலம்: ஜுன் 11, 2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 05:00 மணி
இடம்: JC's Banquet Hall (Mccowan / Ellesmere)
1686 Ellesmere Road, Toronto, On M1H 2V5

# பழமைவாத......

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசிற்கான தேர்தலில் சஸ்கச்சுவான் மாகாணத்தில் Regina Qu Appelle தொகுதியில் பழமைவாதக்கட்சி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றில் இருந்து தொடர்ந்து இத்தொகுதி யின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். அன்றூ மத்திய அரசில் எந்த அமைச்சர் பதவியும் வகிக்காவிட்டாலும் இவர் சபாநாயகராக 2011 இல் தெரிவு செய்யப்பட்டார். அன்றூ கனேடிய நாடாளுமன்ற சரித்திரத் தில் சபாநாயகராக பதவியேற்ற மிகவும் வயதில் குறைந்தவரும், முதலாவது சஸ்கச் சுவான் மாகாணப் பிரதிநிதியும் ஆவார்.

அன்றூ, தனது கட்சித்தலைவர் வெற்றியின் பின்னர் ஆற்றிய உரையில் தனது முதல் வேலையாக பழமைவாதக்கட்சி உறுப்பினர்களை ஒன்று சேர்த்து 2019 ஆம் ஆண்டில் வரும் நாடாளுமன்றத்தேர்தலில் வெற்றி பெறுவது தான் என்று கூறினார். இவருடைய கொள்கைகளில் சில:

- தனது கட்சி ஆட்சிப் பதவி ஏற்று இரண்டு வருடங்களில் சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பது.
- லிபரல் கட்சியின் காபன் வரித்திட்டத்தை நீக்குவது.
- மகப்பேறு மற்றும் பிள்ளை பராமரிப்பிற்காக வேலை வாய்ப்பு காப்புறுதியில் இருந்து வழங்கும் பணத்திற்கு வரி அறவிடுதலை நிறுத்துதல்.
- மாணவர்களை சுதந்திரமாகப் பேச அனுமதிக்காத பல்கலைக்கழகங்களுக்கு அரசமானியத்தை நிறுத்துவது.
- வீடுகளை குளிர்காலத்தில் சூடாக்கப் பாவிக்கும் எரிபொருளுக்கு HST வரிவிலக்கு அளித்தல்.



- வீட்டுப் பாவனைக்கு பாவிக்கப்படும் மின்சாரத்திற்கு HST வரிவிலக்கு அளித்தல்.

ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகள் இரண்டிலும் பேச வல்லவரான அன்றூ ஷியர் எப்பொழுதும் சிரித்த முகத்துடனே கலந்துரையாடுவார்.

இவரது அரசியல் கொள்கைகள் பெரும்பாலும் பழமைவாதக்கட்சியின் முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் கொள்கைகளுடன் ஒத்துப் போகின்றன. இதனால் குளோப் அன்ட் மெயில் ஊடகம் இவரை சிரித்த முகத்துடன் உள்ள ஸ்ரீபன் காப்பர் எனக் குறிப்பிட்டுள்ளது. John Ibbitson என்ற ஊடகவியலாளர் அன்றூ ஷியரை 'Stephen Harper 2.0' எனக் குறிப்பிடுகிறார்.

# புற்றுநோய்...

14 ஆம் பக்கத்தொடர்ச்சி

சாதாரண சுரம், மனப்பதற்றம், மனவிரக்தி போன்றவை தென்பட்டால் அல்லது கசநோய், புற்றுநோய், எயிட்ஸ், நீரிழிவு போன்ற கடுமையான நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம். எதற்கும் நாம் எதனையும் தீர்மானிக்க முடியாது. தாமதம் இன்றி வைத்தியர்களிடம் சென்றால் நமது சந்தேக நிலை நீங்கி தகுந்த வைத்தியத்திற்கு ஏற்ற சிகிச்சை யைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீண்டநாட்களாக தணியாத புண்கள் எமது உறுப்புக்களில் ஏற்பட்டாலும் சந்தேகநிலை எம்மை நாடிவந்துவிடும். இக்கட்டிகள், புற்றுநோய் நீரிழிவு, கசநோய், எக்சிமா, நாளப்புடைப்பு (Varicose veins) போன்ற வேறு நோய்களினாலும் இருக்கலாம். அத்துடன் வாய்ப்பகுதியிலும் வலியின்றி புண்நிலை, கட்டி (உட்பகுதி) காணப்படலாம். இவை எமக்கு சந்தேகத் தன்மையை உருவாக்கிவிடும். இதனை தவிர்க்க தாமதம் தேவையில்லை. சிகிச்சை நிலையம் சென்று தகுந்தவற்றை ஆய்வு செய்து குணப்படுத்தலாம்.

இன்னும் சிலரைப் பார்த்தால் உணவை உண்டபின் உணவு நெஞ்சுப்பகுதியோடு நிற்கும் நிலை தென்படுவதாகக் கூறுவர். ஆரம்பத்தில் சோறு, பிட்டு போன்ற உணவுப் பொருட்கள் தடைப்பட்டாலும் பின்பு நீர் ஆகாரம் கூடச்செல்லத் தடைப்படலாம். இதனை புற்றுநோயினால் அல்ல, Carcinoma of oesophagus புற்று அல்ல எனப் பலவாறு சிந்தித்து பரீட்சிப்பதற்கு தாமதித்திருப்




போரும் உளர். எனவே தாமதியாமல் வைத்தியரிடம் சென்று பரீட்சிப்பது நன்று.

# நான் ராஜா...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

படத்தில் எதிராளியாக இருந்தாலும் அவனின் வித்தியாசமான தன்மை என்னை ஈர்த்துவிட்டது.

**உங்கள் அப்பா வைரமுத்து என்ன சொன்னார்?**

வசனத்தை எல்லாம் படித்துவிட்டு, "ரொம்ப கச்சிதமா இருக்கு. இதுக்குமேல ஒரு



சொல்லை எடுக்கவும் வேண்டாம். சேர்க்கவும் வேண்டாம். ஊளைச் சதை இல்லாமல் ஃபிட்டாயிருக்கு" என்று பாராட்டினார்.

**இளையராஜாவுக்கும் உங்களுக்கும் என்னதான் பிரச்சனை?**

ஒரு பிரச்னையும் இல்லை. அப்பாவுக்கும் அவருக்கும்தான் பிரச்சனை. அதை மனதில் வைத்துகொண்டு என்கூட வேலை பார்க்க மாட்டேன் என்று கூறி வருகிறார். அவருடன் வேலை பார்க்க வேண்டும் என்றும் நினைக்கிறேன். ஆனால், அது முடியாது போலிருக்கிறது. ப்ரகாஷ்ராஜ் சார், பல படங்களில் என் பாடல்களை எடுத்துக்கொண்டு சென்று, நான்தான் பண்ணனும்னு சொல்லி கொடுத்திருக்கிறார். ஆனால், ராஜா சார் முடியாது என்று கூறிவிட்டார். 'ருத்ரமாதேவி' படத்திலும்கூட வசனமும் பாடலும் எழுத வாய்ப்பு வந்தது. பிறகு அவர்களே, "நீங்கள் எழுதுவதை ராஜா சார் விரும்பவில்லை. நாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்கள். இவை எல்லாவற்றுக்குப் பிறகும் நான் ராஜா சாரை மதிக்கிறேன். நான் எப்போதும் அவருடைய ரசிகன்தான்.

# சுற்றுச்சூழலும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கிடைக்கும் இடம் பூராக வளர்த்தல் மற்றும் உயர்மாடி தட்டையான கூரையில் செடிகளை வளர்த்தல், வீட்டினுள் வீட்டுத் தாவரங்களை வளர்த்து உள்காற்றை சுத்தப்படுத்தல் போன்றவை அடங்கும். பெருந்தெருவோரம் அல்லது புகையிரத பாதையருகில் குடிமனைகள் இருப்பின் உயரமான சுவர் எழுப்பி அல்லது அணை கட்டி அல்லது உயரமான மரங்களை வளர்த்து ஒலி மாசு பாட்டைக்குறைத்தல் (Sound pollution) போன்றவை அடங்கும்.

வருங்கால சந்ததியினருக்கு நீர் (Water For Future Generations): படைப்பின் சுழற்சி என்றால் என்ன? புவியிலுள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி, வானை அடைந்து, மேகங்களாய் திரண்டு, காற்றில் குளிர்ந்து பெருமழையாய் பூமிக்கே திரும்பக் கிடைத்தலே படைப்பின் சுழற்சி. அவ்வாறு பொழிகின்ற மழை நீரை பூமி உள்வாங்கி தேக்கினால் தான் நீர்வளம் பூமியில் நிலைத்து நிற்கும்.

மழை நீரோட்டங்கள், உருகும் பனி நீரோட்டங்கள் நிலம், தெரு, கடினமான தரைப் பரப்புகளின் மேலாக நகரும்போது அழுக்கு, எண்ணெய், கிரீஸ், தெரு உப்பு, உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும்



பாக்டீரியா போன்ற மாசுக்களை எடுத்து வெள்ளநீர் வடிகால்கள் ஊடாகவும் நீரோடைகள் ஊடாகவும் ஆறுகளுள் மற்றும் ஏரிகளுள் நுழைகின்றன. ஆறுகள், ஏரிகள் மாசடைகின்றன. இதுவரை காலமும் மழை நீரை பூமி உள்வாங்கி நிலத்தடி நீரை ஒருசமநிலையில் வைத்திருந்தது. நாள் தோறும் அபிவிருத்தி என்ற பெயரால் தரை கட்டிடங்களாலும் வீடுகளாலும் தெருக்களாலும் மூடப்பட்டு வருகிறது. நீரின் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்வதால் நிலத்தடி நீரினை பெருமளவில் கடல்நீர் உட்புகுந்து நல்ல நீரை உபயோகிக்க இயலாதவண்ணம் செய்யும் அபாயமும் தொடர்கிறது என்று நீர்வள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். எனவே வருங்காலத்தில் எமது சந்ததியினர் குடிக்க நீரின்றி தவித்து மாளும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

மீளும் வழி யாது? நாம் இனிவரும்

(தொடர்ச்சி 37 ஆம் பக்கம்...)

# ஆயுள் காப்புறுதி மோசடி!
# மரணமானவர் உயிரோடு கைது செய்யப்பட்டார்!

## கனடிய தகவல் தொடர் 268




சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

மகாபாரதத்திலிருந்து வாழ்க்கைக்குத் தேவையான ஒரு தத்துவமான 'தர்மத்தினை மீறும் எந்தச் செயலும் தொடர்ந்து நிலைக்காது. அதர்மத்தின் அடிவருடிகள் தப்பிக்கவும் முடியாது' என்பது சகலரையும் என்றும் அறிவுறுத்தும்.

அதேமாதிரியான ஒருகதை கனடாவில் ஆயுள்காப்புறுதி பணமோகத்தில் சில வருடங்களின் முன்பு நடந்தது. கனடாவில் மின்னியலாளராக (Electrician) பணி புரிந்த திரு. அலிறீசா ஷோஜாஜி (Mr. Alireza - Shojaei) என்பவர் தனது மனைவி திருமதி. கோகாப்- ஷோஜாஜி (Mrs. Koukab -Shoj aei) என்பவருடன் 2008ஆம் ஆண்டு தங்க ளின் தாய் நாடான ஈரானுக்கு விடுமுறை தினத்தில் சென்றபோது, அங்கு இருதய நோயால் மரணமாகி, அந்த நாட்டிலேயே இறுதிச் சடங்கும் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று அந்த நாட்டின் மரணசான்றிதழ் மூலம் கனடாவுக்கு வந்து சேர்ந்த அவரின் மனைவியால் உறுதி செய்யப்பட்டிருந்தது.

2006-2008 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் அந்த நபர் கனடாவின் பின்வரும் கம்பனிகளில் மொத்தமாக $3.5 மில்லியன் டொலர் தொகைக்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்திருந்தார். அந்தக் கம்பனிகளின் பெயர் விபரங்கள் பின்வருமாறு.

- London life Insuracne company
- Great west assurance company
- State farm International life Insurance company
- Desjardins financial security life assuracne company



கனடாவுக்குத் திரும்பி வந்த அவரது மனைவி மேற்கூறிய ஆயுள் காப்புறுதி கம்பனிகல் எல்லாவற்றிலும் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பணத்தினைப் பெற்றுக் கொண்டார். இன்னொரு நாட்டில் மரணம் நடந்தபடியால் சந்தேகம் கொண்ட காப்புறுதிக் கம்பனிகள் தங்கள் புலனாய்வுகளை சுமார் ஒரு வருடத்திற்கு மேல் மேற்கொண்ட போதிலும், அங்கு எதுவிதமான சந்தேகங்களும் ஏற்படாத- மாதிரியாக நிரூபணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ஒரு வருடத்திற்கு மேலாக காப்புறுதி கம்பனிகள் சந்தேகத்தின் பேரில் இழுத்தடித்த போது அந்தத் தவறுக்காக காப்புறுதி கம்பனிக்கு எதிராக அவரது மனைவி பத்து மில்லியனுக்கு நட்டஈடு கோரி சிவில் வழக்குத் தொடர்ந்து இருந்தார் என்பதும் பொலிசாரின் சாட்சியங்களில் வெளிப்படுத்தப்பட்டது.

2008ஆம் ஆண்டு கனடாவிலிருந்து போய் ஈரானில் மரணமாகியவர் என்று உறுதிப்படுத்தப்பட்ட அந்த நபர் 2010 செப்ரெம்பர் மாதம் இத்தாலி ஊடாக லொஸ் ஏஞ்சல்ஸ் (Los Angeles Airport) சர்வதேச விமான நிலையத்தில் இறங்கி அமெரிக்காவில் தங்கியிருந்தார். அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த இரு மாதங்களின் பின்பு, அவரது மனைவி தனது பெயரில் $420,000 பெறுமதியில் கலிபோர்ணியா நகரில் வீடு ஒன்றினை வாங்கி இருந்தார்.

ஒரு குற்றத்தினை செய்யும் சந்தேக நபர்களை அவர்கள் போக்கில் போகவிட்டுப் பின்தொடரும் அமெரிக்க, கனடிய புலனாய்வுப் பிரிவினர் கலிபோர்ணியாவில் வைத்து இருவரையும் பெப்ரவரி 2013 இல் கைது செய்து கனடாவின் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது தப்பிக்கொள்ள முடியாத நிலைமையில் தங்கள் குற்றத்தினை ஏற்றுக்கொண்டனர். அவர்களின் சொத்துகள், பணங்கள் யாவும் முடக்கப்பட்டதுடன் $1.2 மில்லியன் பணம் காப்புறுதி கம்பனிகளுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற உத்தரவுடன் தம்பதிகள் இருவருக்கும் ஐந்து வருடங்கள் சிறை தண்டனையும் வழங்கப்பட்டது.

கனடாவில் ஆயுள் காப்புறுதி செய்த ஒருவரின் மரணம் என்பது உலகில் எந்த நாட்டில் நடந்தாலும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணதொகையினை காப்புறுதி கம்பனிகள், அவரவர் குடும்பத்திற்கு வழங்கியே தீர வேண்டும் என்பது அதன் நியதிகளில் குறிப்பிடப்பட்ட விடயமாகும்.

உயிர் இழப்பின் பின்பு ஆயுள் காப்புறுதித் தொகை பணத்தினைக் கோரும்போது பின்வரும் ஆவணங்கள் பொதுவாக காப்புறுதிக் கம்பனிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவையாவன:

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்...)



Math tutorial 343

Answers to tutorial 342

1)Tension in the 5m string is 93.5 n and in the 7m string is 80.3n

2)Vectors are collinear if $\bar{a}=k\bar{b}$

Therefore (2 ,3 ,7) =k(-4 ,y ,-14),2= -4k ,3= ky ,7= -14k since k=-1/2 ,y=-6

Since k=-1/2 ,y= -6 ,$\bar{a}$and $\bar{b}$ will be collinear

3)$\bar{a}$=(1 ,2 ,-2 ) $\bar{b}$=(-1 ,3 ,0 ) .Area of parallelogram is $|\bar{a}x\bar{b}|$, $\bar{a}x\bar{b}$ =(6 ,2 ,5) ,therefre area = $\sqrt{36+4+25}$ = $\sqrt{65}$

4)x ,y =(24 ,96) +t(85 ,-65) therefore parametric equation of high way line is x=24 +85t ,y= 96 -65t

5)Aline through the origin and and parallel to the origin:A(4 ,3 ,1) ,B(-2 ,-4, 3) has direction $\overline{BA}$=(6 ,7 , -2)

and hence symmetric equ.Is x/6=y/7 =z/-2

Tutorial 343 Questions

1)if f is a function such that f(1) =2 and f(n+1) =$\frac{3f(n+1)}{3}$ for n=1 ,2 ,3 ..what is the value of f(100)

2) If f(x ) =$49^{3x}$ and g(x) =log $_7$x ,what is the value of g{f(100)}

3)Determine the area of the triangle whose vertices are the local extreme points of the curve y= $x^4+4x^3-8x^2$

4) Find the intersection ,if any of a line $\bar{r}$ =(0 ,0 ,2) +t(4,3,4) and the line$\bar{r}$=(-4 ,1 ,0 )u(-4 ,1 ,-2 )

5)A student was asked to count the number of two digit positive integers that start or end with 7.She decides that there are 10 such numbers that start with 7 (ie 70 to 79) and 9that end with 7 (ie 17 ,27, ....97)She concludes that there are 19 such two-digit numbers. Explain why this answer is not correct.

By Mr S.F.Xavier (Teacher)

Tel 647 340 9490/416732 2228

# செல்லிடத் தொலைபேசிப் பாவனையும், ஏற்படும் விளைவுகளும்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

செல்லிடத் தொலைபேசிகளின் பாவனை இன்றைய நாளின் ஏன் இந்த நிமிடத்தின் பரபரப்பை தீர்மானிக்கும் அதிரடி ஊடகமாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது. உலகின் எந்த மூலையில் இருந்தும் தகவல்களை மிகவும் எளிதாக பரிமாறிக் கொள்ள கையடக்க சாதனமாக விளங்குவது செல்லிடத் தொலைபேசிகள் தான். மனிதகுல வரலாற்றில் மிகப் பெரிய சாதனையாக கருதப்படுவது செல்லிட தொலைபேசிகளின் கண்டுபிடிப்பாகும். ஆனால் இத்தகைய சாதனைகளை வியந்து கொண்டிருக்கும் வேளையில் அதீதமான செல்லிடதொலைபேசிப் பாவனையால் பல உடல் உள பாதிப்புக்கள் பற்றிய அச்சம் தரும் ஆய்வுகளும் வந்து கொண்டிருக்கின்றன. சாதாரண பாவனையால் பல்வேறு நல்ல விளைவுகளும் ஏற்படத்தான் செய்கின்றன. அதில் இருவேறுபட்ட கருத்துக்கள் இல்லை.

Mobile phone, Cellular phone, Hand phone, Smart phone என பல பெயர்களால் பல்வேறு தொலைபேசிகள் வந்தாலும் அடிப்படையில் எல்லாமே செல்லிட தொலைபேசிகள் தான். சில தொழில் நுட்பங்களையும், அளவுகளையும் மாற்றி சந்தைக்கு வருகின்ற தொலைபேசிகளுக்கு எல்லையில்லை. சின்னப்பிள்ளைகள் சொக்கிலேட் கடைகளை ஆசையோடு பார்ப்பது போல் இளம் வயதினர்கள் இத்தொலைபேசி மையங்களில் மொய்த்து நிற்பதனை காண முடிகிறது. அடிக்கடி அதனை மாற்றி மாற்றி வாங்குவதில் மிகவும் பெருமிதம் அவர்களுக்கு. இன்று இத்தொலைபேசி இல்லாதவர்களைக் காணமுடியாது. கடவுள் எங்கும் நிறைந்தவர் எல்லாம் வல்லவர் என்பது போலத்தான் இத்தகைய போன்களை காதுகளில் வைத்துக்கொண்டு அங்கும் இங்கும் அவசரமாக ஓடிச் செல்பவர்களை காண முடிகிறது. பிச்சை எடுப்பவர் முதல் பெரிய கனவான்கள் வரையில் இதன் தேவை உண்டு. கடவுளுக்கு பூசை செய்யும் அர்ச்சகர் கூட பூசை செய்யும் நேரம் அழைப்பு வந்தால் பதில் சொல்லுவதிலேயே கண்ணாயிருப்பார். இளையோர்களின் மோகம் அளவிடமுடியாது. சிலர் இரண்டு மூன்றென வைத்திருப்பார்கள். அதில் கூட அவர்களது பெருமை அளவிடமுடியாது. இரண்டு இளையோர் சந்தித்தால் கூட புதுப்புது தொலைபேசிகளைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

1876 மார்ச் மாதம் கனடிய விஞ்ஞானி கிரஹாம் பெல் கம்பியூடான தொலைபேசியை கண்டுபிடித்தார். சிக்காக்கோவில் இருந்த தன் உதவியாளருக்கு முதல் அழைப்பை விடுத்தார். 'Watson, come here, I want you' என்ற பேச்சினூடாகவே ஆரம்பித்தார். அப்போது இதனை 'Vibraphone' என்றே பெயரிட்டிருந்தார். இவரை 'நவீன தொடர்பு சாதனங்களின் தந்தை' (Father of modern communication) என அழைக்கின்ற னர். இதன்பின்பே தொலைபேசிகள் கம்பியில்லாத வடிவங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.

இரண்டாவது மகாயுத்த காலத்தில் இதன் தேவை மிக அதிகரித்தமையால் AT & T நிறுவனம் 5,000 பேருக்கு இச்செல்லிட தொலைபேசிகளை பாவிக்கக் கூடிய வசதிகளை செய்தது. Motorola நிறுவனம் இத்துறையில் பல ஆய்வுகளை செய்து புதுவிதமான தொலைபேசிகளை சந்தைப்படுத்தியது. 1979இல் ரோக்கியோவில் 'Analog cellular system' என்ற புதியகண்டு பிடிப் பை செய்தமையே, இத்தகைய தொலைபேசி உலகில் பெரு மாறுதல்கள் ஏற்பட்டன. 'Cellular phone' என்ற பெயரில் இவை சந்தைக்கு வந்தன. அமெரிக்காவில் Advanced mobile phone system - AMPS முறை அறிமுகமாயிற்று. இதனால் 1987 க ளில் பல நிறுவனங்கள் தொலைபேசிகளை வித்தியாசமாக செய்ய ஆரம்பித்தன.

இரண்டாவது தலைமுறைக்குரிய தொலைபேசிகள் ஐரோப்பாவில் உருவாயிற்று. ஐரோப்பிய நாடுகளில் GSM, அமெரிக்காவில் CDMA என்ற பெயரில் இது உருவாகியது. 1993 இல் IBM நிறுவனம் வினைத்திறன் தொலைபேசிகளை (Smart Phone) அறிமுகம் செய்தது. இதில் தொலைபேசி, அழைப்புப் பதிவு, அச்சுநகல், நேரம், கணித மொழி, குறிப்பெழுதுதல், Email எனப் பல வசதிகள் உண்டு. ஜப்பான் மூன்றாவது தலைமுறைக்காக 3G மாதிரிகளை உருவாக்கியது. 'G என்ற எழுத்து தலைமுறை (Generation) என்பதனை குறிக்கும்' உலகில் தற்போது 1.2 பில்லியன் மக்களிடம் தொலைபேசிகள் உள்ளன. இதன் பாவனை இல்லாத நாடுகளே இல்லை என்றாகிவிட்டது. சீனாவில் 519.7 மில்லியன் மக்களிடம் செல்போன்கள் உள. 2018 இல் இது 700 மில்லியன் ஆகலாம் என அறிக்கைகள் கூறுகின்றன. அப்பிள், சாம்சங், றோஜேர்ஸ், பெல் நிறுவனம், நோக்கியா, ஃபைடோ (Fido), CP Canada, மோட்டரோலா, சோனி நிறுவனங்கள் உலக சந்தையில் மிகப் பிரபலம் பெற்றவை. உலகின் எந்த மூலையிலும் உள்ள ஒருவருக்கு சில எண்களை அழுத்தினால் போதும் என்ற அளவிலும் ஒரு விரலால் இதனை செய்ய முடியும் என்பதும் வியப்பேயாகும். விஞ்ஞானி ஆர்தர் கிளார்க்




கூறிய வரிகள் முக்கியமானவை. 'Personal Transceiver So Small able to call a person any where on Earth merely by dialing a number'.

இன்று எல்லோரது வாழ்வும் ஆரோக்கியமும் 'செல் வசம்' ஆகியுள்ளது. எல்லோரும் இச் செல்லிடத் தொலைகளுக்குள் புதைந்து விட்டோமோ என்று எண்ணத்தோன்றும். தமிழ்நாட்டில் 'Smart Phone' ஒன்றை புதிதாக வாங்கிய ஒருவர் அதனை கோயிலுக்கு எடுத்துச்சென்று அதற்கு அர்ச்சனை செய்த சம்பவம் ஒளிபரப்புச் சேவையில் காணமுடிந்தது. இப்படியுமா! என்று எண்ணத்தோன்றியது. வீதியில் நடக்கும்போது, வண்டியை செலுத்தும்போது, வீதியில் குறுக்காக ஓடும் போது, நடு இரவு நேரத்தின் போது வாழ்வு இத்தொலைபேசியிலேயே கழிகிறது. பலர் இதற்கு அடிமையாகி (Addiction) விட்டார்களோ என்றும் எண்ணத்தோன்றும். ஒரு வீட்டில் ஓர் அறையிலிருந்து மற்ற அறையில் உள்ளவருக்குக் கூட போனில் அழைக்கின்றனர். சமையல் செய்யும்போது கழுத்துக்குள் மாட்டி கழுத்தைத் திருப்பி ஏதோ எல்லாம் கதைத்து உணவை பழுதாக்குபவர்களும் பலர் இருக்கத்தான் செய்கின்றனர்.

பல தேவைகளையும், சேவைகளையும், முடித்துவைப்பதில் செல்லிட தொலைபேசிபோல் எதுவும் இல்லை. பெண்களின் பாதுகாப்பு, திடீர் சந்திப்புகள், அவசர சூழ்நிலைகள், வைத்தியநிலையத் தொடர்பு கொள்ளல் போன்றன இதனால் தான் செய்ய முடிகிறது.

தற்போது உள்ள 'செயற்கைக் கோள்' (satellite) அமைப்புகள் வந்தபின்பு இதன் பாவனையும் விரைவும் மேம்பட்டுள்ளது. விமானத்திலிருந்தும், விண்வெளியிலிருந்தும் கூட புவிக்குத் தொடர்பு கொள்ள முடிகிறது. சர்வதேச பணச்சந்தைகள், போட்டி வியாபாரங்கள் எதற்கும் நேரடியாக செல்ல தேவையில்லை. ஒரு போன்மூலம் தொடர்பினை மேற்கொள்ள முடியும்.

அடுத்ததாக உள்ள முக்கியத்துவம் இதனால் ஏற்படக்கூடிய செயற்பாடுகளாகும். உண்மையில் இது ஒரு ஆடம்பர பொருள் அல்ல. மிகவும் அத்தியாவசியப்பொருள் என்றாகி விட்டது. வெளியே செல்லும் எவரும் முதலில் தேடுவது இந்தத் தொலைபேசியைத்தான். காரணம் இது வெறும் பேச்சு சாதனம் மட்டுமல்ல. செல்லும் இடத்தில் தனியாக இருந்து இதில் விளையாட முடிகிறது. விண்ணப்பப்பத்திரம், இணையத் தொடர்புகளை ஏற்படுத்த முடிகிறது. சில இரகசியங்களை சேர்த்து வைக்கவும் முடிகிறது. MP3 என்னும் பதிவு மூலமாக ஏராளமான பாடல்களை கேட்கமுடிகிறது. Gps மூலம் வீதிகள் செல்லும் வழிமுறைகளை அறிய முடிகிறது. படிப்படியாக பல்வேறு வசதிகள் இவற்றுள் வருவதால் இதுவும் ஒரு கடவுள் மாதிரியே சிலருக்கு உள்ளது.

செல்லிட தொலைபேசி மூலம் ஒருவரது தொடர்பாடல் திறன் (Communication Skill) கூடுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. பெற்றோர் பிள்ளைகள் தொடர்புகள் அதிகரிக்கின்றன. SMS மூலம் செய்திகளை அனுப்பி பல கொம்பனிகள் ஓரிடத்தில் இருந்தபடியே பல மில்லியன் டொலர்களை சேமிக்க முடிகிறது. தற்போதுள்ள தொலைபேசிகளில் செல்ஃவி (Selfie) எனப்படும் சுயமான படப்பிடிப்பு (Self photo) செய்ய முடிகிறது.

உலகெங்கும் செல்ஃவி மோகம் மிகவும் அதிகரித்துள்ளது. 2014ஆம் ஆண்டு கண்டுபிடிப்புகளில் இதுவும் முக்கியமானது. 'பிலிப்பைன்ஸ் நாட்டினை செல்ஃவி' நகரம் என அழைக்கின்றனர். இப்படிப் பல நாடுகளில் இதன் பாவனை கூடிச்செல்கிறது. இந்தியாவில் செல்ஃவி படப்பிடிப்புக்காக பல மாணவர்கள் வெளியே செல்கின்றனர் என்ற கருத்தும் உள்ளது. பலர் செல்ஃவி படம் எடுக்கச் சென்று தவறி விழுந்தது மரணித்தும் உள்ளனர். செல்ஃவிக்கு அடுத்து 'Wefir' என்ற புது போன் வசதியும் வந்துள்ளது. பராக் ஒபாமா, நரேந்திர மோடி போன்றோர் இதனைப் பாவித்து குழுவான படங்களை வெளியிட்டுள்ளனர்.

செல்லிட தொலைபேசிகளின் அதீதமான பாவனை பலருக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகிறது என்ற பல ஆய்வுகளும் வந்து கொண்டிருக்கின்றன. முதலாவது பிரச்சினை அடிக்கடி போன்களை மாற்றி மாற்றி வரும் இளையோர்கள் பலர் பணத்தை அதிகமாக ச் செலவு செய்கின்றனர் என்பதாகும். நூற்றுக்கணக்கான கவர்ச்சிகளுடன் சந்தைக்கு

தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)




The Metal Roofing
If you're looking to upgrade your current residential roof, make the best choice.
AMBI GROUP INC.
Bond Roofing
Classic Roofing
Grande Roofing
Select Roofing
You will never have to buy another roof again ...
call for free estimate
647-204-8948
www.Ecosmartroofing.ca
IRONCLAD
55
YEAR WARRANTY
NON-PRORATED



SUTTULA
சுற்றுலா
இந்தியா ~ ஆன்மீக சுற்றுலா
கடந்த பல வெற்றிகரமான பயணங்களை தொடர்ந்து எதிர்வரும் ஜீலை (July) இறுதி வாரத்தில் அடுத்த பயணத்தை திட்டமிட்டுள்ளது.
விமான டிக்கட், தங்குமிடம், மூன்று நேர உணவு, சிற்றுண்டி, உள்நாட்டு போக்குவரத்து வழிகாட்டி, நுழைவு சீட்டுக்கள், கனடாவில் உள்ள உங்கள் உறவுகளுடன் தொடர்புகொள்ள தொலைபேசி வசதி அத்தனையும் உள்ளடங்கலாக ஒரு பாதுகாப்பான நம்பிக்கையான பயணம்.
காசி, சீரடி, எலோரா, மைசூர், திருப்பதி, ஈஷா மையம், குருவாயூர் உட்பட தமிழ்நாட்டின் மதுரை, திருச்சி, இராமேஸ்வரம், குற்றாலம், தஞ்சாவூர் என முக்கிய இடங்கள் அனைத்தும் கன்யாகுமாரி முதல் சென்னை வரை பார்த்து பரவசமடையலாம்.
மேலதிக விடயங்களிற்கு அழையுங்கள்
SUTTULA LTD (சுற்றுலா)
416-572-7800
info@suttula.ca
www.suttula.ca
tico.ca
Reg No : 50023480

Coming soon to the new Dupont

TRIDEL
BUILT FOR LIFE

# BIANCA

**BATHURST / DUPONT**

Introducing Bianca.
Contemporary. Sophisticated. Brilliant.




Dynamic architecture highlighted by a luminous white façade and stunning terraces combine with spacious suites at Tridel's luxurious new condominium in the Annex.

**For Special/VIP price & Unit allocation**

**Please Call: 416-321-6969**

**HomeLife/GTA Realty Inc.** *Brockerage

5215 Finch Ave East #203 Toronto ON M1S 0C2

*Independently Owned and Operated



Spicy Coffee
Niru
SINCE 1987
தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருட்கள் கொண்டு
தயாரிக்கப்பட்ட நிரு கோப்பி
ஒப்பற்ற சுவை மற்றும் நறுமணம் கொண்டது.
Search for the
Deliciously smooth flavour
Spicy Coffee
Café Épicé
- Boost you energy with-
Niru Coffee
Premium Quality
உங்கள் அன்பானவர்களை புரிந்து கொள்ள
ஒரு கப் நிரு கோப்பி போதுமானது!
The ultimate Sri Lankan coffee must be perfectly poured for balance and taste

# செஞ்சீனா பச்சையாகிறதா?

## பயணக் கட்டுரை - 9

**- துறையூரான் -**

சொங்கிங் நகரிலுள்ள விலங்குகள் காட்சிய கத்திலிருந்து பஸ் வண்டிகள் மூலம், யங்சி ஆற்றின் கரையிலிருந்த 5 நட்சத்திரக் கப்ப லுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். கரை யிலிருந்து கப்பல் நின்ற இடம் மிகவும் தாழ் வாக இருந்தது. அதற்குப் படிகள் கட்டப்பட் டிருந்தன. அந்தப்படிகளில் இறங்குவது வய தானவர்களுக்குச் சற்றுச் சிரமமாக இருந் தது. எமது பிரயாணப் பெட்டிகளை ஒரு கம் பின் இருபக்கத்திலும் கட்டிவிட்டுத் தோளில் சுமந்து சென்று பலர் கப்பலில் ஏற்றினார் கள். கப்பலின் உட்பகுதி வாசலில் யாவரும் தமது விபரங்களைப் பதிவு செய்தனர். இவர்கள் கலந்து கொண்டனர். கூட்டம் 6 மணிக்கு ஆரம்பமாகி 7 மணியளவில் முடி வடைந்தது. 8:00 மணிக்கு இரவு உணவுக் குச் சென்றோம். உணவுச்சாலை 3ஆம் தள த்திலிருந்தது. உணவுகள் யாவும் மூடப்பட்டி ருந்த பெரிய கொள்கலன்களில் வைக்கப்ப ட்டு மேலே அவற்றின் பெயர்கள் எழுதப்பட் டிருந்தன. எனவே ஒரு கோப்பையைத் தூக் கிக் கொண்டு வேண்டிய உணவை எடுத் துக் கொண்டு உங்களுக்கு ஒதுக்கப்பட்டி மேசைக்குச் சென்று அமர்ந்து சாப்பிடலாம். அங்கு தேவையான கரண்டி, கைதுடைக் கும் துண்டுகள், நீர், முதலியன வைக்கப்பட் டிருந்தன. யாவும் மிகவும் அழகான மேசை விரிப்புக்கள் மேல் ஒழுங்கு செய்யப்பட்டிருந் தன. ஒவ்வொரு மேசைக்கும் இரு பெண்கள்




தேவையானவற்றைக் கொண்டு வருவதற் காக அமர்த்தப்பட்டிருந்தனர். ஒரு பெரிய நகரும் போசனசாலையில் அமர்ந்து பேசிக் கொண்டும் வெளியிடங்களைப் பார்த்துக் கொண்டும் உணவுண்டோம். எமது 8ஆம் எண் மேசையில் வழக்கமான யாவரும் அம ர்ந்து சாப்பிட்டோம். அதன்பின் அறைக்குச் சென்று சிறிது இளைப்பாறினோம். இவர்க ளுடைய உணவு ருசியாகவும், பல்வேறு வகைகளாகவும் இருந்தன. இந்திய உணவு வகைகளும் இருந்தது ஒரு சிறப்பம்சம். அத்துடன் அவ்விடத்தில் காணப்பட்ட தாவர ங்கள், பழங்கள், கிழங்குகள் யாவும் நன்கு சமைக்கப்பட்டிருந்தது சிறப்பா இருந்தது.

இக்கப்பலில் 7 தளங்கள் இருந்தன. ஏறக் குறைய 350பேர் இக்கப்பலில் பயணஞ் செய்யலாம். இக்கப்பல் சேவை 2013 இல் ஆரம்பமாகியது. ஒரு 5 நட்சத்திர விடுதியி லுள்ள அத்தனை வசதிகளும் இக்கப்பலில் உள்ளன. இதன் நீளம் 136 மீற்றர். அகலம் 19.6 மீற்றர். இதில் 148 அறைகள் உள்ளன. ஒவ்வொரு அறைக்கும் ஒரு வெளிமாடமும், பெரிய யன்னலும் உண்டு. நீங்கள் கொடுக் கும் பணத்துக்கேற்ப வசதியான அறைக- ளைத் தெரிவு செய்யலாம். ஆனால் எமக்கு ஒதுக்கப்பட்ட அறையில் இரு தனிக்கட்டில்க ளும், ஒரு மேசை, இரு நாற்காலிகள் தனிக் குளியலறை, உடுப்புகள் வைக்கும் தட்டுக- ளோடு கூடிய சிறிய ஒதுக்கறை, விலைமதி ப்பான பொருட்கள் வைக்கும் பாதுகாப்பான பெட்டி யாவுமிருந்தன.

நாம் கப்பலில் ஏறிக் குளித்து விட்டு உடுப்பு களை மாற்றிக் கொண்டு, கப்பல் பற்றிய விபரங்களையும், சுற்றுலாக்களையும், பாது காப்புக் குறிப்புகளையும் தரும் ஒரு கூட்டத் துக்குச் சென்றோம். வழக்கமான பிரயாணக் கப்பல்கள் யாவற்றிலுமுள்ள ஒலிபெருக்கி மூலம் எல்லோரும் அழைக்கப்பட்டிருந்தார் கள். எமது அறைகள் 5ஆம் தளத்திலிருந் தன. அதே தளத்தில் தான் இக்கூட்டமும் நடைபெற்றது. கப்பலில் வேலை செய்யும் யாவரும் மிகவும் அழகாக உடையணிந்து கம்பீரமாகக் காட்சியளித்தனர். கூட்டத்தை வழி நடத்திச் சென்ற ஒரு பெண் அழகாக ஆங்கிலத்தில் யாவற்றையும் விளங்கப்படுத் தினார். இன்னொரு பெண் சீனமொழியில் விளங்கப்படுத்தினார். பெரும்பாலான பெண் கள் ஆங்கிலத்தில் உரையாடினர். எம்மோடு பிரயாணஞ் செய்த, யாவரும் ஆங்கிலந் தெரிந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்த குந்தது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து

வேண்டுமென அறிவிக்கப்பட்டது. நானும் நண்பரும் கப்பலின் மேல் தளத்திலிருந்த நீச்சல் தடாகம், நடைபாதை ஆகியவற்றில் சிறிது நேரம் கழித்தோம். நாங்கள் கப்பலில் ஏறிச்சில மணித்தியாலங்களின் பின் இரவு முழுவதும் அது ஓட ஆரம்பித்தது. நண்பகலின் போது சியாவோ என்ற இடத்தை வந்தடைந்தது. இங்கு சியாபோ ஷாய் செங்கோயில் உள்ளது. கப்பலிலிருந்து இறங்கி ஒரு மைல் தூரத்துக்கு நடந்து செல்ல வேண்டும். இக்கோயிலுக்குச் செல்ல ஒரு தொங்குபாலத்தின்மேல் நடந்து செல்ல வேண்டும். ஆட்கள் நடக்கும் போது அது ஆடிக்கொண்டே இருக்கும். பாலத்துக்குக் கீழே ஒரு ஆறு ஓடி வந்து யங்சி ஆற்றோடு கலந்து கொள்கிறது.



சியாபோஷாய் என்பது ஒரு 600 அடி உயரமுள்ள மலை. இது யங்சி ஆற்றுக்கு அருகில் உள்ளது. இதன் உச்சியில் ஒரு கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு ஏறிச் செல்வதற்கு ஒரு சிவந்த கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. இது மலையைக் குடைந்து கட்டப்பட்டுள்ளது. இது 9 அடுக்குகளைக் கொண்டுள்ளது. உட்புறத்தில் மரப்பலகைகளாலான படிகள் உள்ளன. மிகவும் அகலங்குறைந்த படிகளில் ஒருவர் மட்டுமே ஏறக்கூடியதாய் இருக்கும். இவை மிகவுஞ் செங்குத்தாக உள்ளன. எனவே மிகவும் சிரமப்பட்டே ஏறினோம். கூடாரத்தின் வாசல் மஞ்சள் நிறத்தில் அகலமாகக் கட்டப்பட்டுள்ளது. மலையின் உச்சியில் மஞ்சிறீயின் நினைவாக மூன்றடுக்கு மண்டபம் உள்ளது. இது சியான் பெங் சக்கரவர்த்தியினால் 1850 இல் கட்டப்பட்டது. இதற்கு மேலே ஒரு புத்த கோயில் உள்ளது. இம்மண்டபம் கட்டுவதற்கு முன்னால் கோவிலுக்குச் செல்வதற்கு சங்கிலிகளால் இயங்கும் தட்டு ஒன்று பாவிக்கப்பட்டது.

தற்போது கோவிலுக்குச் செல்லும் வழியின் இரு பக்கத்திலும் பல கடைகள் உள்ளன. பெரும்பாலும் பின்னல் வேலைப்பாடுகள் உள்ள படுக்கை விரிப்புகள், கோவிலின் படம் போன்று தையல் வேலைப்பாடுகளால் செய்யப்பட்ட சுவரின் மாட்டக்கூடிய சேலைப் பாய்களும் பிற சீனக் கைவண்ணப் பொருட்களும் உள்ள விற்பனைக் கடைகள் காணப்பட்டன. சுற்றுலாப் பயணிகள் நிறைய இவற்றை வாங்கிச் செல்வதைக் கண்டேன். விலையும் மலிவாக இருந்தது. உச்சியிலிருந்து இறங்குவதற்கு மலையின் எதிர்பக்கத்தில் சீமெந்தாலான அகலமான படிகள் அமைக்கப்பட்டிருந்தன. எனவே இறங்குவதில் சிரமம் ஏற்படவில்லை. ஏறக்குறைய 5 மணியளவில் கப்பலுக்குத் திரும்பினோம்.



ஆறு மணிக்குக் கப்பல் தலைவனின் ஒன்றுகூடல் இடம் பெற்றது. இங்கு சிற்றுண்டிகளும் சாம்பெயினும் எல்லோருக்கும் வழங்கப்பட்டன. கப்பலில் வேலை செய்யும் உயர் மாலுமிகளையும் பிறமுக்கிய உத்தியோகத்தர்களையும் தலைவன் யாவருக்கும் அறிமுகஞ் செய்து வைத்தார். பின்னர் 8 மணிக்கு இராப்போசனம் முடித்துக் கொண்டு வந்தோம். 9 மணியளவில் அதே இடத்தில் கப்பலில் ஆண்களும் பெண்களுமாகப் பாட்டுபாடியும் நடனமாடியும் யாவரையும் மகிழ்வித்தனர். சீன நடனங்களும், பலே நடனங்களும் இடம்பெற்றன. ஒரு ஆங்கில நாட்டின் இரவு விடுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகள் போன்று இவையாவும் அமைக்கப்பட்டிருந்தன. அழகான பெண்களும் ஆண்களும் வண்ண உடைகளில் பல்வேறு நடனங்களை ஆடினர். சுற்றுலாப் பயணிகள் சிலரும் அவர்களோடு சேர்ந்து ஆடி மகிழ்ந்தனர். இந்த மண்டபத்துக்கு அருகில் மதுக்கடை இருந்தது. இங்கு பல்வேறு மதுபானங்கள் விற்கப்பட்டன. இவற்றை வாங்குவதற்கு சீன ஜென் அல்லது அமெரிக்க டொலர் தேவை. ஒரு அமெரிக்க டொலர் 5 சீனஜென் என்ற மதிப்பில் இருந்தது. நாங்கள் அமெரிக்க டொலரையே பாவித்தோம்.கடைகளிலும் அமெரிக்க டொலரையே விரும்பிக் கேட்டனர். அன்றைய பொழுது இன்பமாகக் கழிந்தது. கப்பல் மாலையில் ஓட ஆரம்பித்தது. காலையில் ஒரு முக்கியமான இடத்துக்கு வந்து நிற்கும். கோவிலில் உள்ள இடங்களையும் வெவ்வேறு பகுதிகளையும் விளங்கப்படுத்துவதற்கு எங்களோடு ஒரு பெண் வந்தாள். அவள், தான் ஒரு பல்கலைக்கழக மாணவி என்றும் விடுமுறைக் காலங்களில் இவ்வாறு பணம் சம்பாதிப்பதாகவும் கூறினாள். எங்களுடைய பஸ்ஸில் ஆரம்பத்தில் பிரயாணஞ் செய்த யாவரும் ஒரே குழுவாகச் சுற்றுலா முழுவதும் கூடவே சென்றோம். இக்குழுவில் அமெரிக்கர்களும் கனேடியர்களும் இரு பிரித்தானியக் குடும்பத்தினரும் இருந்தனர். பெரும்பாலானவர்கள் அறுபது வயதைத் தாண்டியவர்கள் என எண்ணுகிறேன். இரு வாலிபர்களும் கன்னியர்களும் எங்கள் குழுவில் இருந்தனர்.

அடுத்த கட்டுரையில் 3ஆம் நாள் கப்பல் பிரயாணம் பற்றிப் பார்ப்போம். (தொடரும்)

# ஆயுள்...

19 ஆம் பக்கத்தொடர்ச்சி

•பணம் கோரும் உரித்துடையவரின் விண்ணப்பம் (Claimant statement)
•மரண அத்தாட்சிப் பத்திரம் (Original death certificate)
•பெருந்தொகையாக இருந்தால் மரணத்தினை உறுதிப்படுத்தும் மருத்துவரின் அத்தாட்சிப் பத்திரம் (Attending physician statement)

ஆனால் கனடாவிலிருந்து ஏனைய நாடு ஒன்றிற்கு பயணம் செய்து அந்த நாட்டில் மரணம் நடந்து, அங்கு இறுதிக் கிரியைகளும் நடந்து முடிந்து விட்டால் மேலதிகமாகப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

• அந்நிய நாட்டில் நிற்கும்போது நடந்த மரணம் தொடர்பான வினா விடை விண்ணப்பம் (Foreign Death questionnaire form)
• விமான ரிக்கற்றின் பிரதிகள், விமானப் பிரயாணத்தின் அத்தாட்சிப் பத்திரம், பொதிகைகளின் பதிவுகள் (Copy of the Flight tickets, boarding pass and Luggage tags)
• மரணம் நடந்த நாட்டில் ரத்துச் செய்யப்பட்ட மரணமானவரின் கடவுச்சீட்டின் பிரதி (Copy of cancelled passport by Canadian high commission)
• மரணம் நடந்த நாட்டில் மேற்கொண்ட மரண விசாரணை அறிக்கை (Final post mortem report)
• மரணத்திற்காக செலவு செய்த பற்றுச்சீட்டுகள் (Funeral expenses receipts)

கடந்த 2015ஆம் ஆண்டு ஆயுள் காப்புறுதி முகவர் தொழில்துறையில் அந்நிய நாடு ஒன்றில் நடந்த உயிர் இழப்பில் பணத்தினை கோரும்போது கனடாவின் காப்புறுதிக் கம்பனி எப்படி தங்கள் புலனாய்வுகளை முன் எடுத்தார்கள் என்பது அனுபவரீதியாக பலரோடும் பகிர வேண்டிய விடயமாகும்.

கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்த இருவர் இரு வெவ்வேறு மாதத்தில் தாயக மண்ணிற்கு சென்றபோது அங்கு யாழ்ப்பாணத்தில் அவர்கள் பிறந்து வளர்ந்த பூர்வீகக் கிராமத்தில் மரணத்தினை எதிர்கொண்டு அக்கிராமத்திலேயே இறுதிச் சடங்குகளும் முடிவடைந்துவிட்டன. அதில் ஒருவர் முதியவர். அவருக்கு மரணத்தினை எதிர்கொள்ளும் வயது. ஒகஸ்ட் 2015 இல் மரணமாகியிருந்தார். சிறிய தொகையாக இருந்தபடியால் உயிர் இழப்பீட்டுத் தொகையினை பெறுவதில் சிரமம் எவையும் இருக்கவில்லை.

மற்றவர் 47 வயதானவர். மார்ச் 2015 இல் திடீரென இருதய நோயால் மரணமாகியிருந்தார். கனடாவில் அவரது மருத்துவ அறிக்கைகளில் மிக ஆரோக்கியமானவர் என இருந்தபடியால் காப்புறுதிக் கம்பனி உயிர் இழப்புத் தொகை நட்டஈட்டுக் கோரலை முன் எடுக்கும்போது சந்தேகத்துடன் அவர்கள் புலனாய்வுகளை தீவிரப்படுத்தியது.

கனடாவில் உள்ள காப்புறுதிக் கம்பனி தாயக மண்ணில் நடந்த இந்த மரணத்தினை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச புலனாய்வுக் குழுவினருக்கு கட்டணம் செலுத்தி அந்தப் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்திருந்தது. அந்தப் புலனாய்வுக் குழுவின் புலனாய்வாளர் (Investigation Officer International Investigation officer Network) இருவர் தாயக மண்ணின் கிராமத்துக்கு தங்கள் சுமராக்களுடன் சென்று பல கோணங்களிலும் தகவல்களைப் பெற்று அம்மரணம் உண்மையானது என்பதனை உறுதிப்படுத்திய பின்பு தங்கள் அறிக்கையினை மின் அஞ்சல் மூலம் கனடாவில் உள்ள காப்புறுதிக் கம்பனிக்கு அனுப்பி வைத்தனர். சகலதையும் பரிசீலனை செய்த பின்பு காப்புறுதிக் கம்பனி முகவர் ஊடாக காசோலையினை வழங்கியது. அவர்களின் புலனாய்வுகளுக்கு பூரண ஒத்துழைப்பும் வழங்கியபடியால் காலதாமதமில்லாது அவர்களினால் சரியான முடிவினை எடுக்கக் கூடியதாகவிருந்தது.



# மோல்ரா: மத்திய தரைக்கடல் இதயத்தில் ஒரு மாணிக்கம்!



சுந்தரம் இந்திரராஜா

## Malta is a gem in the heart of the Mediterranean




மத்தியதரைக்கடலின் நடுவில் உள்ள 7 தீவுகளின் கூட்டம் மோல்ரா. தெற்கு ஐரோப்பாவின் ஒரு மக்கள் தொகை அடர்த்தியான சிறிய தீவுகள் ஆகும். அவற்றில் மோல்டா Malta என்ற பெரிய தீவிலும், கோசோ Gozo என்ற இரண்டாவது பெரிய தீவிலும் கோமினோ Comino மூன்றாவது பெரிய தீவிலும்தான் மக்கள் வாழ்கிறார்கள். மோல்டா என்ற பெரிய தீவு கலாச்சார, வணிக மற்றும் நிர்வாக மையமாகவும், கோசோ என்ற தீவு மீன்பிடி, சுற்றுலா, கைவினை மற்றும் விவசாயம் என்பனவற்றில் முன்நிற்கிறது. கோமினோ என்ற தீவில் 4 நிரந்தர குடிகளுடன், வெளிநாட்டு பார்வையாளர்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளுவதற்கும் தங்கு வதற்கும் ஒரு ஹோட்டலும் உள்ளது.

மோல்டா தீவுகள் சிங்கப்பூரின் பரப்பளவின் பாதி பரப்பளவு கொண்டது அல்லது ரொறன்ரோவின் பரப்பளவின் பாதி பரப்ப ளவு கொண்டது. 316 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்நாட்டில் 402,000 மக்கள் வாழ்கின்றனர். லிபியாவுக்கு வடக்கே 288 கிமீ தூரத்திலும் அல்லது இத்தாலியின் சிசிலி Sicily தீவுக்கு தெற்கே 93 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ள இந்த நாட்டின் உத்தியோகபூர்வ மொழி மோல்ட்டீஸ் Maltese மற்றும் ஆங்கில மொழிகளாகும். உரோமன் கத்தோலிக்க மதமே இங்கு மக்களால் பெரும்பாலும் பின்பற்றப்படும் மதமாகவும் விளங்குகிறது.

1800இல் மோல்டா, பிரித்தானியாவால் பிடிக்கப்பட்டு காலனித்துவ ஆட்சிக்கு கொண்டுவரப்பட்டது. மோல்டா, ஐக்கிய (United Kingdom) இராச்சியத்திலிருந்து 1964 செப்டம்பரில் சுதந்திரம் பெற்று 1974 டிசம்பரில் குடியரசாக அங்கீகரிக்கப்பட்ட நாடு. 2004 மே மாதம் ஐரோப்பிய ஒன்றிய த்தில் (European Union) இணைந்துள் ளது. யூரோ நாணயமே இந்நாட்டில் 2008 இலிருந்து புழக்கத்தில் உள்ளது.

மோல்டாவின் தலைநகரம் வலெட்டா Valletta. ஒரு கோட்டை நகரம் ஆகும். இது மோல்டா தீவின் மத்திய கிழக்குப் பகுதி யில் அமைந்துள்ளதுடன் 16ஆம் நூற்றா ண்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களைக் கொண்டுள்ளது. மோல்டாவில் உள்ள தொடர்ச்சியான வரலாற்றுக்கு முந்தைய நினைவுச் சின்னங்களில் பெருங்கற்தூண் கோவில்களைக் குறிப்பிட லாம். இவற்றில் ஏழு சின்னங்கள் யுனெஸ் கோவின் உலக பாரம்பரியக் களங்களாக அறிவிக்கப்பட் டவை. தெருக்கள் வரலாறு காண்பிக்கும். ஆகார் குயிம் a ar Qim என்ற இந்த பெருங்கற்தூண்களும் குளோபிஜரினா



சுண்ணாம்பு Globigerina limestone கற் கூரைகள் கொண்ட கோயில் வளாகங்கள் கலாசார மாற்றத்தின் கண்டுபிடிப்புகள் என தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிட்டு ள்ளனர். அங்குள்ள தாசியன் கோவில் வளாகம் கி. மு. 2500 வரை உபயோக த்தில் இருந்ததாயினும் அதன் பின்னர் கோயில் கட்டும் கலாச்சாரம் மறைந்து விட்டது. பரோக் கட்டிடக்கலைகளிலான Baroque architecture வீடுகள் தொடர்மாடி கள் மட்டுமா, கம்பீரமான அலங்கார சுவ- ரோவியங்களிலால் அலங்கரிக்கப்பட்டுள்ள முகப்பையும் அதன் உட்பகுதி வேறு பட்ட சுவரோவியங்களிலால் அலங்கரிக் கப்பட்டுள்ள பழமையான செயின்ட் ஜான்ஸ் தேவாலயத்திலும் அங்குள்ள மற்றய தேவாலயங்களிளிலும் அவதானிக்கலாம். பழமைக் கவர்ச்சியுள்ள உணவகங்கள் மற்றும் மது பார்கள் wine bars இன்றும் கவர்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்.

மெடினா Mdina நகரம் வாலெட்டா தற்கால தலைநகராகமுன் ஈர்க்கக்கூடிய புராதன கால medieval தலைநகரமாக இருந்தது. இத்தீவின் அதி உயரமான பெரும் நிலப் பகுதி கற்சுவரால் பாதுகாக்கப்பட்டு இந்த கரத்தினுள் தான் புராதன காலத்திய வணிக மற்றும் நிர்வாக மையம் இருந்தது. வெளிநாட்டு பார்வையாளர்களைக் கவரும் பகுதியாக இன்று உள்ளது.

கோசோ Gozo தீவில் கண்டிஜா என்பது மோல்டா நாட்டின் பழைமை வாய்ந்த இராட்சதக் கோபுரம். இதனோடு இணைந்த தாக புதிய கற்காலத்தைச் சேர்ந்த இரண்டு கோவில்கள் (The two temples of Ggantija on the island of Gozo) உள்ளன. இவை 5000 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தவை. மிகப் பழைய தனித்துவம் மிக்கதும் சமயம் சார்ந்ததுமாகத் இது திகழ்கிறது. எகிப்தின் பிரமிட்டுக்கள் மற்றும் இங்கிலாந்தின் ஸ்ரோன் ஹெஞ்ச்சைவிடப் (Stonehenge) பழைமையானவை. மோல்டா மொழியில் கண்டிஜா என்பது "பூதங் களுக்கு உரியது" என்பதே பொருள். அந் நாட்டில் நிலவும் கதைகளின்படி இக் கோயில் கள் பண்டைய காலத்தில் இத் தீவில் வாழ்ந்த பூதங்களால் கட்டப் பட்டவை என்றும் இக்கோவில் அந்தப்



பூதங்களால் காவல் கோபுரங்களாக பயன் படுத்தப்பட்டுள்ளன. பெருமளவு விலங்கு களின் எலும்புகள் இங்கிருந்து கண்டெடுக் கப்பட்டிருப்பதால் இக்கோயில்களில் விலங்குகள் பலிகொடுக் கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அதனை உறுதிப் படுத்தும் வகையில் ஆடு, செம்மறி ஆடு, பன்றி போன்ற விலங்குகளின் சிற்பங்களும் இங்கு காணப்படுகின்றன. வெளிநாட்டு பார்வையாளர்களைக் கவரும் பகுதியாக உள்ளது. இவற்றால் வாலெட்டா 2018 இல் ஐரோப்பிய கலாச்சாரத் தலைநகராக அமைக்கப்படுகிறது. (Valletta is set to be the European Capital of Culture in 2018).

இரண்டாம் உலகப் போரின் போது, மோல்டா மீது ஜேர்மன் படையினர் 14,000 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசினார்கள். சுமார் 30,000 கட்டிடங்கள் அழிந்தன, 1,500 க்கும் மேற்பட்ட குடிமக்கள் இரண்டாம் உலகப் போரின் போது மோல்டாவில் கொல்லப்பட்டனர். ஆனால் மோல்டா படையினர் தொடர்ந்து சண்டையிட்டார்கள். 1942 ஏப்ரல் மாதம் 9ம் திகதி சுமார் 300 கத்தோலிக்கர்கள் வரையில் மொஸ்ரா அன்னை மேரி தேவாலயத்தில் பக்தியுடன் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கை யில் 50 கிலோ கிராம் எடை கொண்ட ஒரு குண்டு தேவாலயத்தின் கொங்கிறீட் டோம் Dome வடிவக் கூரையில் போடப்பட்டது. அக்குண்டு கூரையை துளைத்துக் கொண்டு இந்த பெரிய தேவாலயத்துக் குள் வீழ்ந்தது. அதிஷ்டவசமாக அது வெடிக்க வில்லை. யாரும் கொல்லப்பட வில்லை, இது ஒரு அதிசயம் என கருதப் பட்டது. கூரை திருத்தப்பட்டாலும் கறை இன்றும் இருக்கின்றது.

துறைமுகம் அண்டிய கரைகளிலும் மீன்பிடி கிராமங்களிலும் சாந்தமான நீல கடல் ஓட்டம், அழகான சூழ்நிலையை நெருக்க மாக பின்னப்பட்ட சமூகம், பாரம்பரியத் தைக் கொண்ட வண்ணமயமான படகுகள் நிரப்பப்பட்டுள்ள காட்சிகள் பலரையும் கவருகின்றன. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட மோல்டா தீவிலேயே கடைசியாக 24வது பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நொவெம்பர் 2015 நடைபெற்றது ஞாபகம் இருக்கலாம். 53 அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டர். சூரிய ஒளி வருடத்தில் முந்நூறு நாட்கள் கொண்ட காலநிலை, மக்களின் கவர்ச்சிகரமான விருந்தோம்பல் போன்ற அம்சங்கள் இருப்பது மோல்டாவுக்கு விருந் தினரின் வருகையைக் கூட்டிக் கொண்டு செல்கிறது.

MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all Grades from Grade 4 to 1st year of university

SPECIAL CLASSES
- Advanced funtions
- Calculus & Vectors
- Data Management

Classes avilable in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228

# செல்லிடத்...

### 20 ஆம் பக்கத்தொடர்ச்சி

வரும் தொலைபேசிகளை வாங்குவதில் பெரும் நெருக்கடிகளே உள. பெற்றோர்களுடன் முரண்டு பிடித்துக்கொண்டும் பலர் உளர். பலருக்கு இது ஒரு மறைமுக செலவாகும். தொலைபேசிக்கு அடிமையாகிப் போபவர்கள் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கும். உடைகள் மாற்றுவது போல் அடிக்கடி தொலைபேசிகளை மாற்றுபவர்களை நிறையவே காணமுடியும்.

அண்மையில் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக ஆய்வாளர்கள் இவ்வகையான செல்போன்களின் பாவனையால் அதீதமான உடல் உள பாதிப்புக்கள் பல ஏற்படுவதாகக் கூறியுள்ளனர். மூளையில் உள்ள நலமான செல்கள் பல நலிவுறுவதால் காலப்போக்கில் 'Glioma' எனப்படும் புற்றுநோய் ஏற்படலாம் எனக் கூறியுள்ளனர். அதேபோன்று 2003இல் 'International Journal of Oncology' என்ற மருத்துவ இதழிலிலும் இதே கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் செல்லிட பேசிகள் மூலம் பல நுண்ணுயிர்கள் சுமக்கப்படுகின்றன எனவும், இதுவும் பல நோய்களை உருவாக்கும் எனவும் அறிக்கைகள் உள. 'ஸ்டேபோலோ' என்ற நுண்ணுயிர்கள் இதில் உளதெனவும் 'சூடோமோனஸ்' என்ற நுண்ணுயிர்களும் இதில் உயிர் வாழ்வதாகவும் கருதப்படுகிறது. அத்துடன் 'சால்மோனல்லா' போன்ற நுண்ணுயிர்கள் உடலில் பல நோய்களை உண்டாக்க வல்லவையாகும்.

செல்லிடத் தொலைபேசிகளின் அதீத பாவனையால் காது கோளாதவர் தொகை கூடுதலாக ஏற்படுவதாகவும் ஆய்வுகள் உள. கட்டுப்பாடின்றி தொலைபேசிகளைப் பாவிப்பதால் 'Acoustic Neuroma' நோய் ஏற்படுகிறது. அத்துடன் 'Lancet' என்ற மருத்துவ இதழில் 'மெர்கோலா' என்ற மருத்துவ ஆய்வாளர் செல்போன் கதிரியக்கத்தால் மூளை பாதிப்புறுவதாகக் கூறுகிறார். தொடர் பாவனையால் தோல் அழற்சி ஏற்படலாம். இதனால் 'Mobile phone dermatitis' என்ற புதிய மருத்துவச் சொல்லும் உருவாகியுள்ளது. அத்துடன் சில போன்களின் பிற்பகுதியில் பூசப்படும். 'நிக்கல்' தோல் நோய்களை ஏற்படுத்தலாம் எனப்படுகிறது. சிலர் தலைமாட்டில் போன்களை வைப்பதால் அதிலிருந்து வெளியேறும் கதிர் மூலம் உடல் பாதிப்பு ஏற்படலாம்.



தற்போது செல்போன் முகம் (Cell phone face) என்ற மருத்துவ சொல்லும் பாவனையில் உள்ளது. இதன்படி எந்தக் கைப்பழக்கம் உள்ளவரும் காது, கன்னம் போன்ற வற்றைப் பயன்படுத்த முனைவர். இதனால் சிவப்பு வண்ண அழற்சி உண்டாகிறது. சிலர் கண்டகண்ட இடங்களில் தொலைபேசிகளை போட்டு வைத்திருப்பர். இதனால் பில்லியன் கணக்கான வைரஸ், பக்ரீரியா அதனுடன் காவிச் செல்லப்படுகின்றன.

செல்போன்களை எந்த இடத்தில் வைத்து கொண்டு செல்கிறோம் என்பதிலும் சில பிரச்சினைகள் ஏற்படலாம். சிலர் தமது நீளக்களிசான் பொக்கெட்டுகளில் அதிக நேரம் வைத்திருப்பர். இதனால் ஏற்படும் கதிரியக்கம் விந்தணுக்களின் (Perms) எண்ணிக்கையை வெகுவாகப் பாதிக்கிறது. அத்துடன் உயிரணுக்களின் உருவமும் மாறலாம். ஆண்மைத்தன்மையும் குறையலாம். பிள்ளைகளின் மண்டையோடுகள் மென்னையானவை. சிலவேளைகளில் பிள்ளைகள் இத்தொலைபேசியை வைத்து விளையாடுவர். இதனாலும் அவர்களது மண்டையோடு மட்டுமல்ல பல நோய்களுக்கு உள்ளாவர். பல வீடுகளில் இத்தகைய தொலைபேசிகள் கணவன் மனைவி சண்டைகளுக்கு இடையே சிக்கித் தவிக்கின்றன. எவராவது முதலில் கோபம் வந்தவர் தனது தொலைபேசியை கீழே எறிந்து உடைக்கவும் செய்வார்.

செல்லிடத் தொலைபேசி பாவனையால் மறதி நோய் ஏற்படும் என அவுஸ்திரேலியாவில் உள்ள மொனாஸ் பல்கலைக்கழகம் செய்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிகமான தொலைபேசி பாவிப்பவர்களின் நுண்ணறிவு குறைந்துள்ளதாகக் காணப்பட்டது. இவ்வாறான ஞாபகமறதியால் 'அல்சைமர்' நோய் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் தொடர்ந்து உணர்ச்சியோடு பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு இதய நோய் ஏற்படவும் கூடும். முகம் காணாத பலர் தொலைபேசி மூலம் பல பொய்களையும், பித்தலாட்டங்களையும் செய்கிறார்கள். காதலர்களுக்கு மட்டும் இது சர்வரோக நிவாரணியாக உளது.

நூலகங்களிலும், சினிமா தியேட்டர்களிலும் வைத்தியசாலைகளிலும் அடிக்கடி தொலைபேசியால் அமைதியைக் குலைப்பவர்களும் இருக்கத் தான் செய்கின்றனர். பொதுவாக தூக்கத்திற்கு ஒரு மணிநேரம் எவ்வித மின்னணு உபகரணங்களையும் உபயோகிக்கக் கூடாது என்பது மருத்துவர்களது வேண்டுகோள். இருந்தாலும் போனுடன் தான் தூங்குகிறார்கள், போனில் தான் விழிக்கிறார்கள். இதனால் என்ன நடக்கப்போகிறது என்பது தெரியவில்லை.

சரியான செல்லிடத் தொலைபேசி வைத்திருப்பவர்கள் சில தீர்மானங்களை எடுக்கலாம். முக்கியமான விடயங்களை குறுகிய வேளையில் பேச முயற்சிக்கலாம். நல்ல சப்த அலைகளுடன் கூடிய தொலைபேசியை தெரிவு செய்யலாம். இடது பக்கக் கன்னப்பகுதியில் உள்ள காதில் வைத்துப் பாவிக்கலாம். தொலைபேசிக்கென விற்கப்படுகின்ற கவர்களைப் பாவிக்கலாம். வாரத்திற்கு ஒரு தடவை ஸ்பிரிட் மூலம் துப்பரவு செய்யலாம். வாகனங்களில் கண்ணாடிகளை மூடிவிட்டு செல்போன் பாவிப்பதனை தவிர்க்கலாம். வாகனங்கள் செலுத்தும்போது தொலைபேசிப் பாவனை குற்றமாக கருதப்பட்டாலும் பலர் தொடர்ந்தும் பாவிக்கவே செய்கின்றனர். இதனால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களே மிக அதிகம்.

தகவல் தொடர்பில் மிகப்பெரிய சாதனையாக கருதப்படும் செல்லிடத் தொலைபேசியின் வசதி மட்டும் இல்லையென்றால் உலகமே உறங்கி விடும். செயலற்ற நிலைக்கே நாம் வந்து விடுவோம். இன்று எல்லாமே செல் வசம் என்ற நிலையிலேயே வாழப் பழகிவிட்டோம். இதனை முற்றாகவோ அல்லது அரை குறையாகவோ நீக்க விடமுடியாது. அப்படி எண்ணுவதும் பொருத்தமாகாது. தேவை, அவசியம், சிக்கனம், சுகாதாரம், பாதுகாப்பு என்பனவற்றினை உணர்ந்து இதனை பாவிப்பதே இன்றைய தேவையாகும். நமக்குத் தகவல்களையும், ஆச்சரியங்களையும் அள்ளித்தரும் செல்லிடத்தொலைபேசியை எமது நல்ல நண்பனாக மாற்றிக் கொள்ள வேண்டும். இதனை எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் அப்பிள் நிறுவனத்தின் Iphone 7s புதிதாக சந்தைக்கு வந்துள்ளது. அத்துடன் றோஜேர்ஸ் நிறுவனமும் இதே பெயரில் தொலைபேசிகளை சந்தைப் படுத்துகிறது. 2007 முதல் 2G என்ற பெயருடன் வந்த இந்த I phone வரிசை 3G, 3GS, 4, 4S, 5, 5C&5S, 6, 6C&6S, 7... என்று தொடர்கிறது.

# கனடா எழுத்தாளருக்கு தமிழக அரசின் உயர்விருது

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை 2014-2015 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் வெளிவந்த சிறந்த நூல்களின் ஆசிரியர்களையும் அந்நூல்களை வெளியிட்ட பிரசுரங்களையும் 19.04.2017 அன்று சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத்தமிழாராச்சி நிறுவனத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த தினத்தையொட்டி கௌரவித்தனர். 22 சிறந்த நூல் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் ரூபா 3000 இற்கான காசோலையும் வழங்கினர். நூல் வெளியீட்டாளர்களுக்கு ரூபா 10,000 இற்கான காசோலையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கினர். முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இருந்தபோது இவ் வைபவம் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. பின்பு அவரது மரணத்தினால் காலதாமதமானது. கனடா வாழ் எழுத்தாளர் எஸ். குருபாதம் எழுதிய சென்னை மணிமேகலைப் பிரசுரத்தின் ஊடாக வெளியிட்ட 'போதிதர்மர் பற்றிய அற்புதமான விடயங்கள்' என்ற ஆய்வு நூல் வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுக்குள் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு நூலாசிரியருக்கு பாராட்டும் சான்றிதழும் ரூபா 30,000 இற்கான காசோலையும் வழங்கப்பட்டன. தமிழ் வளர்ச்சித்துறைக்கான அன்பளிப்பாக தனக்களிக்கப்பட்ட காசோலையை நூல் ஆசிரியர் மீளளித்திருந்தார். இந்நிகழ்வில் இருந்து விருது பெற்ற வெளிநாட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.




## ஒன்ராரியோ தமிழ் ஆசிரியர் சங்கம்

ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பரிசளிப்பு விழாவும்
10வது ஆண்டு நிறைவு குறித்த சிறப்புமலர் வெளியீடும்

காலம்: யூன் 3ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 1:30மணி
இடம்: Junior Public School, 78 Mason Rd, Scarborough, ON M1M 3R2
தொடர்புகளுக்கு : 647.857 .7995 / 416.438.7104
Website : www.ontariotamil.com
E-Mail Addressotta15.16@gmail.com

ww.vlambaram.com
www.tamilvanakkam.com

# சுற்றுச்சூழலும்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

காலத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் முயற்சியில் இறங்காவிடில் நம் எதிர்காலம் கேள்விக்குறியாய் மாறும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. இதுவரை பெய்த மழைநீரை சரியாக சேமிக்காமல் வீணாக்கிய காரணத்தால் ஏற்படப்போகும் அவல நிலையை அறிந்த வளர்ந்த நாடான கனடா மழைநீர் சேமிப்பு முறைகளை பின்பற்றி நிலத்தடி நீரின் வளத்தை பெருக்குவதன் மூலம் நாம் சரி செய்ய முடியும் என்று உணர்ந்து சில நடைமுறை-களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவற்றைப்பற்றி நீங்களும் அறிந்திருப்பது நல்லது.

அபிவிருத்தி செய்யப்படும் இடங்களில் காணிகள் தாரளமாய் கிடைக்குமிடத்து மழை நீர் அறுவடை குளம் / வெள்ள நீர் மேலாண்மை குளம் (Rain water harvesting Pond/Storm water management Pond) ஒன்றை நிர்மாணித்து அதில் தேக்கி வைத்தும், நகரங்களில் காணிகள் கிடையாதவிடத்து மழைநீரைக்கூட நிலத்தின் கீழ் அல்லது வாகனத்தரிப்பிடங்களுக்குக்கீழ் தொட்டி போன்ற செயற்கையாக குளம் ஒன்றை நிர்மாணித்து தேக்கி நிலத்தடி நீரை மறுபடி நிரப்பி வருங்காலச் சந்தியி-னருக்கும் குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கை வைத்து செய்கிறார்கள். இதற்காக கட்டப்பட்ட குளங்களை புதிதாக கட்டப்படும் வீட்டுத்தொகுதிகளில் நீங்கள் பார்க்கலாம். வெள்ளநீர் வடிகால் ஊடாக குளங்களை வந்து சேரும். அதேவேளை அந்த அபிவிருத்தி செய்யப்படும் நிலங்களில் வசித்து வந்த பறவைகள் பிராணிகள் தங்கியிருப்பதற்கும் குளத்தருகில் நாட்டப்படும் மரம் செடிகள் உதவுகிறது.

கிராமப்பகுதிகளில் வெள்ளநீர் வடிகால்கள் இல்லாதவிடத்து தனித்தனி வீடிகளில் கூரைநீரை சேகரித்து கீழ்கொண்டுவரும் குழாயை வீட்டின் பின் இதற்கெனத் தோண்டப்பட்ட ஆழமான கல்லுகள் நிரப்பிய கிடங்குகளுக்குள் (Bioswales / Soakaway pits) வைத்து மூடி மழைநீரைத் தேக்கி மீண்டும் நிலத்துக்கள் செலுத்த செய்கிறார்கள். கூரைநீரை பரல்களில் சேமித்து வீட்டுத்தோட்டத்திற்கு பாவித்தலும், வீடுகள் உயர்மாடிக் கட்டடம் அமையும் இடங்களில் கூரைநீரைத் தொட்டிகள் அமைத்து தேக்கி பயிர்களுக்கும் பயன்படுத்துவதும் இந்த நோக்கத்திற்காகவே செய்கிறார்கள்.

மேற்கூறப்பட்டவை போன்ற பற்பல திட்டங்களை தயாரித்து அதனை நடை முறைப்படுத்தும் நிருவாகிகளுக்கும் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கும் வரிச் சலுகைகள், சான்றிதழ்கள் அளித்து ஊக்குவிக்கிறார்கள். இவற்றை பின்பற்றி பணத்தை மிச்சப் படுத்துவதடன் சுக வாழ்வும் கிடைக்கிறது.

மரபணு மாற்றங்களை (Genetically Modified) பயிர்களில் செய்வது என்னவோ மட்டுப்படுத்தப்பட்டிருக்கிற போதிலும் இது செய்திருக்கும் அதிசயங்கள், இவற்றை ஆதரிப்பவர்களிடையே நம்பிக்கையான மனநிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மரபணு மாற்றம் பெற்ற பயிர்கள் ஒரு புதிய பசுமை புரட்சிக்கு வழி திறந்திருக்கிறது என்று அவர்கள் சொல்கின்றனர். ஒவ்வொரு நாளும் 230,000 பேர் என்ற கணக்கில் அதிகரித்துவரும் இவ்வுலக சனத்தொகைக்கு தேவையான "அதிக-ளவான உணவை கொடுப்பதற்கு இது ஒரு சிறந்த கருவி" என இந்த மரபணு பொறியியலைப் பற்றி உயிரி யல் தொழில்நுட்பத் துறையில் புகுத்தியுள்ளார்கள். இதனால் அதிக சனத்தொகையுள்ள நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் குறைந்த விலையில் அதிக விளைச்சலை பெறலாம். இந்த பயிர்கள், உணவு தயாரிப்பிற்கு ஆகும்




செலவுகளை குறைப்பதற்கு பெருமளவில் உதவியிருக்கின்றன. உணவுத் தட்டுப் பாட்டை ஒழிக்க இன்னும் மற்ற அநேக நல்ல வழிகள் இருக்க, இன்னும் நிரூபிக்கப்படாத தொழில்நுட்பத்தை நம்பி ஏமாறக்கூடாது என்றும் பலர் சொல்கின்றனர். கனோலா ஒயில் (Canola Oil), சோயாபீன்ஸ், சோளம், தக்காளி, பப்பாசி, சூகினி-பூசணி (Squash), பீட்ரூட், உருளைக்கிழங்கு போன்றவை மரபணு மாற்றப்பட்ட முறையில் கனடாவில் வளர்க்கப்பட்டு வருகின்றன. அண்மையில் மரபணு மாற்றப்பட்ட சால்மன் மீன்கள் நுகர்வுக்கு கனட-ாவில் ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளது. ஆஸ்திரியா, ஹங்கேரி, கிரீஸ், பல்கேரியா மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகள் மரபணு மாற்றங்களைத் தடைசெய்துள்ளன.

இக்காலத்து உயிரியல் தொழில்நுட்பமும், சில பொருட்களை மாற்றியமைக்க உயிரினங்களையே பயன்படுத்துகிறது. ஆனால் அப்போதிருந்த தொழில்நுட்பத்தைப் போல் இல்லாமல், இன்றைய நவீன உயிரியத் தொழில்நுட்பம் நாம் விரும்பும் விதத்தில் சரியாக மாற்றுவதற்கு, உயிரினங்களின் மரபணுக்களிலேயே நேரடியாக மாற்றங்களைச் செய்ய வழியை திறந்திருக்கிறது. ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லாத உயிரினங்களிலுள்ள ஜீன்களை இடமாற்றம் செய்து, வழக்கமான முறையில் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லாதபடி இது செய்து விடுகிறது. இதனால், ஒருவர் மற்ற உயிரினங்களிலிருந்து சில குறிப்பிட்ட குணாதிசயங்களை எடுத்து, செடியின் ஜீனோமில் வைத்துவிட முடியும். உதாரணமாக, சில மீன்களிலுள்ள குளிரை தாக்குப் பிடிக்கும் சக்தி, வைரஸில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி, மண் பாக்டீரியாவிலுள்ள பூச்சி எதிர்ப்பு சக்தி போன்றவற்றை இவ்வாறு உபயோகிக்கலாம்.

இவ்வாறு மரபணு மாற்றியமைக்கப்பட்ட பயிரிலிருந்து வரும் உணவு உங்கள் உடலுக்கு நல்லதா அல்லது கேடு விளைவிக்குமா? மரபணு மாற்றம் பெற்ற பயிர்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் விஞ்ஞான தொழில்நுட்பங்கள் நம் சுற்றுச் சூழலுக்கு ஆபத்தானவையா? இந்த மரபணு மாற்றம் பெற்ற உணவைப் பற்றிய விவாதம் இப்போது சூடுபிடித்திருக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். கண்டுபிடிப்புக்கள் அதி-கரித்துள்ளன. பல துறைகளில் முன்னேற்றம் கனடா கண்டு வருகிறது, அதிலும் அணு விஞ்ஞானம், அணு ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவ ஆராய்ச்சி, பொறியியல் ஆராய்ச்சி, சுற்றுச்சூழல், கணினி பொறியியல் ஆராய்ச்சி, தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. பல துறைகளில் கண்டுபிடிப்புக்கள் வந்துள்ளன. பல விஞ்ஞானிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள். இன்சுலின், தொலைபேசி, ஒளி விளக்கு, செயற்கை இதயமுடுக்கி, மின் சக்கர நாற்காலி, கோபால்ட்-60 கதிர்வீச்சு கான்சர் சிகிச்சை முறை, CANDU Reactor, ஜாவா நிரலாக்க மொழி, Canadarm, இலத்திரன் நுண்நோக்கி, பனிச்சறுக்கு-டூஸ்னோ மொபைல், பிளாக்பெர்ரி, AM வானொலி, மின் அடுப்பு, வோக்கி-ரோக்கி, அல்கலைன் பட்டரி, முதலுதவி-மானுக்கின்ஸ், ஐமக்ஸ் IMAX, 56k மோடம், பேஜர், plexiglass, கணினி வழி பிரெயில், வெல்க்ரோ இதய திசு, மக்கிண்டோஷ் சிவப்பு ஆப்பிள், கனோலா எண்ணெய் போன்றவை ஒரு சில கனடிய கண்டு பிடிப்புக்கள் ஆகும்.

கனடிய தயாரிப்பான மிகவும் பாதுகாப்பாக மின் சக்தியை உருவாக்க பயன்படுத்தப் படும் அணு உலை (கனடா தூத்தேரியம் யுரேனியம் அணு உலையினை - CANDU Reactor) பல நாடுகளில் பயன்படுத்தி வருகிறார்கள்.

மருந்துகள், இரசாயனப் பொருட்கள், கனடிய தயாரிப்பான ரயின் என்ஜின்கள், விமானங்கள், மோட்டார் வாகனங்கள், சிறு கப்பல்கள் _படகுகள், அவற்றின் உதிரிப் பாகங்கள், இயந்திரவகைகள், உயர் தொழில் நுட்பத்துறைப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், எண்ணெய், இயற்கை வாயு, வனப்பொருட்கள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள், கால்நடைகள், இறைச்சி, பாலிருந்து உற்பத்தி செய்யும் பொருட்கள் ஆகியன கனடாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். வளங்கள் குறையவில்லை: இயற்கை வளங்கள் கனடாவில் மிக்க உண்டு. மூலவளம் நிறைந்தநாடு. செம்பு, நிக்கல், துத்தநாகம், காட்மியம், நிலக்கரி, பெற்றோலியம், இயற்கை வாயு, யூரேனியம், தங்கம். இரும்பு, ஈயம், மரம், நீர் ஆகியன பிரதான மூலப் பொருட்களாகும்.

மனித வள மேம்மாட்டில், நாட்டின் வளர்ச்சியில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது மிகவும் முக்கியமானதாகும்.

கனடா நாடு தனது மகிழ்ச்சியான 150 வது வயது நிறைவை தமிழர்களாகிய நாமும் கூடிக் கொண்டாடுவோம் வாழ்த்துவோம்.

## தமிழ் பூங்கா "பாடும் குயில்" பாடல் போட்டி முடிவுகள்

| பிறந்த ஆண்டு | வெற்றியாளர் | இடம் |
|---|---|---|
| 2009 | அனுராக் சேதுராமன் | 1 ஆம் இடம் |
| 2010 | மானசா சேதுராமன் | 1 ஆம் இடம் |
| 2010 | ஆரதி சதீசன் | 2 ஆம் இடம் |
| 2010 | வர்ணிகா ஜெயவர்மன் | 3 ஆம் இடம் |
| 2011 | அஞ்சனா பாபு | 1 ஆம் இடம் |
| 2011 | பவிஷா ஹரன் | 2 ஆம் இடம் |
| 2011 | சுருதி ரஞ்சன் | 3 ஆம் இடம் |
| 2012 | ஜனனி சிறிசக்தி | 1 ஆம் இடம் |
| 2012 | சோலை இராச்குமார் | 2 ஆம் இடம் |
| 2013 | தாருஸ் கரன் | 1 ஆம் இடம் |
| 2013 | கியாறா ஐசாக் வருணன் | 2 ஆம் இடம் |

- சபா. அருள்சுப்பிரமணியம்.

# 10ஆவது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் சூதாட்டமா?

## விளையாட்டுத் தகவல்கள் 383



எஸ். கணேஷ்

10வது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் சில தினங்களுக்கு முன்னர் நிறைவடைந்தது. ஐ.பி.எல் இறுதிப் போட்டியின் முடிவுகளை வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 9 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். 2017 க்கான ஐ.பி.எல் இறுதிப் போட்டி நடைப்பெற்றது. இதில் புனே அணியை 1 ஓட்டம் வித்தியாசத்தில் வீழ்த்தி மும்பை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்நிலையில், இந்தப் போட்டியின் முடிவை வைத்து சூதாட்டம் ஆடியதாக 9 பேரை பொலிசார் டெல்லியில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து செல்போன்கள், லாப்ரொப் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள், இறுதிப் போட்டியின் முடிவை கணித்தனரா அல்லது போட்டி முடிவை மாற்றும் வகையில் சூதாட்டத்தில் ஈடுபட்டனரா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. 130 என்ற குறைந்த இலக்கை எட்ட முடியாமல் புனே தோற்றது குறித்து சர்ச்சைகள் வெடித்துள்ள நிலையில், சூதாட்டக்காரர்களின் கைது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கடைசி ஓவர் வரை சென்று 1 ஓட்டத்தில் தோல்வி நிர்ணயிக்கப்பட்டதில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் கூறப்பட்டு வருகிறது.

சூதாட்ட புகார் காரணமாகச் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு கடந்த மற்றும் நடப்பாண்டு ஐ.பி.எல் தொடரில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. நடந்து முடிந்த ஐபிஎல் இறுதிப் போட்டிகளின் முடிவுகளையும், ஓட்டங்களின் எண்ணிக்கையையும் சரியான அளவில் போட்டி தொடங்குவதற்கு முன்னரே டுவிட்டரில் பதிவாக வெளியாகியுள்ளது ரசிகர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இதன் இறுதிப் போட்டியில் புனே அணியும், மும்பை அணியும் மோதின. இந்தப் போட்டியில் நடைபெற்ற சில முக்கிய விடயங்கள் @theDcricket என்னும் டுவிட்டர் கணக்கில் முன்னதாகவே வெளியிடப்பட்டன.

அதில் கூறப்பட்ட அனைத்து விடயங்களும் ஐபிஎல் இறுதிப்போட்டியில் ஏறக்குறைய அப்படியே நடந்தது. இறுதிப் போட்டியில் எப்படியிருந்தாலும் புனே அணி தான் முதலில் பந்து வீசும். அதாவது, அந்த அணி டொஸ் வென்றாலும் கூட முதலில் பட்டிங்க்கு பதில் பவுலிங்கை தான் தெரிவு செய்யும் என டுவிட்டரில் கூறப்பட்டிருந்தது. அது போலவே புனே அணி முதலில் பந்து வீசியது.

Cricket Insider @theDcricket
No matter which team wins toss RPS has to bowl first.
Means if rps wins the toss it will choose bowling..
Mumbai will take batting if wins



6:08 PM - 20 May 2017
115 115 Retweets 258 258 likes
Twitter Ads info & Privacy

மேலும், மும்பை அணி முதலில் பட்டிங் செய்து 120லிருந்து 130 ஓட்டங்கள் வரை-தான் எடுக்கும் எனக் கூறப்பட்டிருந்தது.

அதுபோலவே மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 129 ஓட்டங்கள் எடுத்தது.
Follow Cricket Insider @theDcricket
Mumbai will bat first and make 120 to 130 run and will win
6:27 PM - 20 May 2017
135 135 Retweets 242 242 likes
Twitter Ads info & Privacy

மேலும், போட்டியில் ஒரு நோ போல் கூட வீசப்படாதென்பதுடன் மும்பை வீரர் பொல்லார்ட் 1 சிக்சர் அடிப்பார் என கூறப்பட்டிருந்தது.
Follow - Cricket Insider @theDcricket
There would be total 0 no balls
6:12 PM - 20 May 2017
93 93 Retweets 179 179 likes
Twitter Ads info & Privacy

புனே அணியின் தலைவர் ஸ்மித்தின் ஓட்ட வேகம் 100-க்கு குறைவாகவே இருப்பது டன், போட்டியின் அதிக ஓட்டங்களையும் அவர் பதிவு செய்வார்.
Follow - Cricket Insider @theDcricket
Steave amith will play with strike rate less than 100
6:39 PM - 20 May 2017
108 108 Retweets 197 197 likes
Twitter Ads info & Privacy

மும்பை அணியின் பர்த்திவ் பட்டேல் மற்றும் புனே அணியின் ராஹுல் டிருபாதி ஆகியோர் 10 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழப்பர்.
Follow -Cricket Insider @theDcricket
Parthiv patel will hit under 10
6:38 PM - 20 May 2017
100 100 Retweets 191 191 likes
Twitter Ads info & Privacy

அதேபோல மும்பை அணி கடைசி ஓவரில் வெற்றி பெறும் எனவும் அந்த டுவிட்டர் கணக்கில் கூறப்பட்டிருந்தது.அதுபோலவே மும்பை கடைசி ஓவரில் வெற்றி பெற்றதுடன், அந்த டுவிட்டர் கணக்கில் சொன்ன பல விடயங்கள் ஏறக்குறைய நடந்தன.
Follow- Cricket Insider @theDcricket
Mumbai will win in last over
6:47 PM - 20 May 2017
164 164 Retweets 331 331 likes
Twitter Ads info & Privacy

அப்படியானால், இந்தப் போட்டியில் மேட்ச் பிக்சிங் நடந்ததா என ரசிகர்கள் அதிர்ச்சியடைந்திருந்த நிலையில், அப்படி ஏதும் நடக்கவில்லை எனவும் இது எனது தனிப்பட்ட கணிப்பு மட்டுமே எனவும் அந்த டுவிட்டர் கணக்கில் கூறப்பட்டுள்ளது.
Follow- Cricket Insider @theDcricket
Guys i was offline today..
Just saw ur replies of match was fixed.
Which is not true.
There are just my predictions.
12:36 PM - 22 May 2017
27 27 Retweets 338 338 likes

பரபரப்பான கடைசி ஓவர்!
பத்தாவது ஐபிஎல் தொடரின் இறுதிப்போட்டியில் ரைசிங் புனே சூப்பர் ஜெயண்ட் அணியை, மும்பை இந்தியன்ஸ் அணி 1 ஓட்டம் வித்தியாசத்தில் வீழ்த்தி மூன்றாவது முறையாக ஐபிஎல் கிண்ணத்தை வென்று அசத்தியது.

இந்நிலையில் மும்பை அணிக்காக விளையாடிய பட்லர், இங்கிலாந்து அணிக்கு விளையாடுவதற்காக தாயகம் திரும்பியுள்ளார். இப்போட்டியில் புனே அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. களத்தில் மனோஜ் திவாரி மற்றும் ஸ்மித் இருந்தனர்.

மும்பை அணி சார்பில் 20-வது ஓவரை மிட்சல் ஜான்சன் வீசினார். அபாரமாக விளையாடிய திவாரி முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். ஆனால், 2-வது பந்தில் திவாரி கட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். 3-வது பந்தில் 51 ஓட்டங்கள் எடுத்து இருந்த ஸ்மித் பொல்லரிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். 3 பந்துகளில் 7 ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையில் வாஷிங்கடன் சுந்தர் களமிறங்கினார். அவர் எதிர்கொண்ட 4-வது பந்து பட்டில் படவில்லை. எனினும் ஓட்டம் எடுக்க எதிர்முனையில் நின்று கொண்டிருந்த கிறிஸ்டியன் ஆட வந்தார். 5-வது பந்தை அடித்து ஆடிய கிறிஸ்டியனால் 2-ஓட்டங்கள் மட்டுமே எடுக்கமுடிந்தது. இதனால் கடைசி பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் மீண்டும் களத்தில் க்றிஸ்டியனும், எதிர் முனையில் சுந்தரும் இருந்தனர். கடைசி பந்தை ஜான்சன் வீச, அந்தப் பந்தை கிறிஸ்டியன் அடித்து ஆட ஆனால் அப்பந்தில் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது, மூன்றாவது ஓட்டம் எடுக்கும்போது கருணாள் பாண்டியா வீசிய த்ரோவில் ரன் அவுட் ஆனார். மும்பை அணி 1-ஓட்டம் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது.

### 2017 ஐ.பி.எல் தொடர்: சாதனைகள்

2017 ஐ.பி.எல் தொடரில் பேட்டிங், பவுலிங் போன்றவற்றில் பல அணிகளை சேர்ந்த வீரர்கள் தங்களின் ஆகச்சிறந்த பங்களிப்பை வழங்கினார்கள். பந்து வீச்சை பொறுத்தவரையில், ஹைதராபாத் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் 14 போட்டிகளில் விளையாடி 26 விக்கெட்களை வீழ்த்தினார். இதன்மூலம் தொடர்ந்து இரண்டாவது முறையாக புவனேஷ்குமார்



பந்து வீச்சில் முதலிடம் பிடித்துள்ளார். பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 19 ஓட்டங்கள் விட்டு கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தியது இவரின் சிறந்த பந்து வீச்சாகும். 2017 ஐ.பி.எல் தொடரில் பட்டிங்கில் ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வார்னர் முதலிடம் பிடித்துள்ளார். இவர் 14 போட்டிகளில் விளையாடி ஒரு சதம், 4 அரைசதம் உட்பட 641 ஓட்டங்களை குவித்துள்ளார். வார்னர் அதிகபட்சமாக கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 59 பந்துகளில் 126 ஓட்டங்களை விளாசி அசத்தியுள்ளார்.


# யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்


தொடர்புகளுக்கு: 416.299.8361


உலகத்தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனம்
நடாத்தும்
5 ஆவது பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
July 29/30 -2017
WTBT
CANADA
2017
Contact:
+1 416-900-6501
info@canada.wtbf.net
www.wtbf.net
Jeyakanth: 416-219-9824
Vaheesan: 416-890-3680
Chandrika: 647-282-1459
Men Singles
(U13, U15, U17, U19, O40, O50 and Open)
Men Doubles
(U13, U15, U17, O40, O50, O60 and Open)
Women Singles
(U13, U15, U19, O30 and Open)
Women Doubles
(U13, U17, O30 and Open)
Mixed Doubles
(O40 and Open)
Venue:
Epic Sports Badminton
39 Bertrand Ave,
Scarborough, ON , Canada.
கனடாவிலுள்ள அனைத்து கழகங்களும் பங்குபற்றுவதோடு சுவிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், டென்மார்க் , நோர்வே, அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா என பல நாடுகளிலிருந்தும் தமிழ் வீரர்கள் பங்குபற்றும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி.
இதுவரை போட்டிக்காக பெயர்களை பதிவு செய்யாதவர்கள் தயவு செய்து மேலேயுள்ள அலுவலகர்களை தொடர்பு கொள்ளவும்.
பாரிய அளவிலான சுற்றுப்போட்டியாதலால், உலகத் தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபகுழுவில் இணைந்து பங்காற்ற விரும்பும் கழக உறுப்பினர்களும், தொண்டர்களாக உதவி செய்ய விரும்புபவர்களும் தயவு செய்து மேல்காணும் அலுவலகர்களைத் தொடர்பு கொள்ளவும்.
Connecting Tamils around the World

## ராசம்மா ராச்சியம் 353



உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆரின் படம் பார்த்தோம்.
இன்று உலகம் சுற்றும் (வாலிபன் 72 வயது) றொனால்ட் ட்றம்ப் எத்தனை செய்திகள்.



றொனால்ட் ட்றம்ப் தினமொரு தப்பு அல்லது தவறு என்ற ரீதியில் 100 நாட்களில் கிட்டத்தட்ட 172 தப்பும் தவறும் தில்லுமுல்லும் பதிவாகியுள்ளது.




கிருஸ்ண லீலை படித்திருப்போம். கண்ணன் பெண்களுக்கு ஓயாத தொல்லை. தீராத விளையாட்டுப்பிள்ளை. பழத்தைக் கொடுத்துவிட்டு தின்னும்போது தட்டிப்பறித்தல். பின்னலை பின்னின்று இழுத்தல். வெண்ணை திருடித்தின்னல்.



இயற்கையின் சீற்றம்.......
இலங்கையில் மாறிமாறி மண்சரிவு மழை வெள்ளம்...
இலங்கையில் களுத்துறை பகுதியில் வெள்ளப்பெருக்கால் பலர் உயிரிழந்துள்ளனர். காணாமல் போனவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்படவில்லை. இந்திய அரசின் விசேட கப்பல் மீட்புப்பணிக்காக சென்றுள்ளது. சர்வதேச ரீதியில் உதவி கோரப்பட்டுள்ளது. படகுகள் ஹெலிகெப்டர்மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.




முள்ளிவாய்க்காலில் இறுதிப்போரின்போது மே மாதம் நடந்தவற்றை மறக்கமுடியுமா? உலகர் குழாம் ஏதோ அப்பிடி இப்பிடி மதேர்ஸ் டே முடிந்தாலும் இந்த வாரம் வலி சுமந்த வாரம் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு சென்று வந்ததை மறக்கமுடியவில்லை.




முதலாம் உலகமகா யுத்தம். 1914....1918. 4 வருடங்கள். இதனை இழந்தவர் வழிவந்தோர் இன்றும் நினைவுகூர்கின்றனர்.

இரண்டாம் உலகமகா யுத்தம் 1939.....1945. 30 நாடுகளைச் சேர்ந்த 100 மில்லியன் உயிர்களைப் பலிகொண்ட யுத்தம். இன்றும் உயிர் நீத்தவர்களுக்காக நினைவுகூரப்படுகிறது.

ஆனால் எமது கண்முன்னே 2009 மே..., 1958 மே மாதம் தமிழ் சிங்கள இனக்கலவரம். எல்லாவற்றையும் எப்படி மறந்தார்கள்?



1981 மே யாழ். பொது நூலகம் அரச காடையர்களால் திட்டமிட்டு தீக்கிரையாக்கப்பட்டது.



2009 மே உலகநாடுகள் முகத்தை மூடிக்கொண்டு சகல உதவிகளையும் தமிழினத்திற்கு எதிராக (சூழ்ச்சியாக) போர்செய்து இலங்கை சிங்கள அரசு வெற்றி-கொண்ட நாள்.

இடம்பெயர்ந்து அங்குமிங்குமாக வாழ்ந்தவர்கள் என்றோ ஒருநாள் மீண்டும் நாம் பிறந்த மண்... நமது வீடு... நடந்த நிலம்... ஓடிய வீதிகள்... தோட்ட வரம்புகள் தூக்கி வளர்த்த... உறவுகள் சோறூட்டிய அன்னை தந்தை... உறவுகளை காண்போம் என்றுதானே இருந்தார்கள்.



கூட்டத்தோடு கூட்டமாக தன்னோடு இருந்தவர்கள் செல்பட்டு உடல்கள் சின்னாபின்னமாகி விட்டார்கள் அடுத்தது நானா?...

மரணம் என்றால் என்ன? மரண பயம் என்றால் என்ன? அனுபவித்தவனுக்குத் தான் தெரியும்.


குண்டொலியை விட குரலொலி வானைப் பிளந்தது.
செக்கண்ட் புளோர் செல்லம்மா முள்ளிவாய்க்காலில் இருந்த மாமனின் குடும்பத்துடன் இடையிடை ரெலிபோனில் தொடர்பு கொள்வது வழக்கம். ஆனால் 2009 மே முதலாம் கிழமையிலிருந்து... இன்றுவரை...தொடர்பில்லை.



செல்லம்மா இடையிடை அவர்களின் படங்களை பார்த்துப்பார்த்து அழுவது ராசம்மாவிற்கும் உலகருக்குத்தான் தெரியும் இப்படி எத்தனை பேர் புலத்தில் இழந்தவர்களை புலம்பெயர் நாடுகளில் தினம் தினம் அழுது கொண்டிருக்கிறார்கள்?

வலி சுமந்த வாரம்... இன்றோடு எத்தனை வாரங்கள்?
தொடர் செல்வீச்சு... ஆட்டிலறி... இடைவிடாத துப்பாக்கிச்சூடு வைத்தியசாலை தேவாலயங்கள் கோவில்கள் மசூதிகள் அகதிமுகாம்கள் எந்தவேறுபாடும் இல்லை. சுருக்கமாகச்சொல்லப் போனால் கண்மூடித்தனமான தாக்குதல்.

பதுங்கு குழிகளில்... இருந்தவர்கள் புல்டோசர்களால் மண்ணால் உயிரோடு மூடப்பட்டனர். பாதுகாப்பு வலயத்திற்கென அழைத்துச் சென்றவர்கள் தனித்தனியாக அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு ஆண்பெண் என்ற பேதமின்றி நிர்வாணமாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். இதனை பல சர்வதேச ஊடகவியலாளர்கள் பத்திரிகை வானொலி தொலைக்காட்சிகள் மூலம் வெளியிட்டுள்ளனர். ஐக்கியநாடுகள் சபையிலும் முள்ளிவாய்க்கால் இறுதிப்போர் போர்கால சட்டமீறல் சகலதும் உண்டு. இதனை விசாரிக்கும்படி இலங்கையிடமே பொறுப்பு கொடுப்பார்களாம்?



புலம்பெயர்ந்து வந்தாலும் பலர் தூக்கமில்லாத துக்க வாழ்வுதான். தாமோதரம் கடைசியாக வந்தபோது சொல் செயல் பேச்சுவார்த்தை எல்லாம் மாறியிருந்தது.



தான் சில அனாதைப் பிள்ளைகளுக்கு படிப்பு செலவு பொறுப்பேற்றதுடன் சைக்கிளும் வாங்கிக் கொடுத்ததாக....கேட்டநேரம் முதல் உலகரால் நம்ப முடியவில்லை. முன்னரெல்லாம் போர்க்காலத்தில் அனுதாபக் கூட்டங்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்தால் மோர்க்கேஜ் கட்டவேணும் ஓவர்ரைம் வேலை வேலை எனத் திரிந்த தாமோதரம்...எப்படி மாறிவிட்டான்?



மாறியது நெஞ்சம்! வக்கேசன் எனப்போய் அங்கு திரிந்த காலத்தில் தாமோதரம் கண்டது மக்களின் கஸ்டம் கவலை... அன்றாடம் ஒருநேர உணவுகூட இல்லாமல் எத்தனை குடும்பங்கள்? உறவுகள் இருக்கின்றனரா இறந்துவிட்டனரா என நினைத்து ஏங்கும் உறவுகள் எத்தனை?



தாமோதரம் ஆத்திரத்துடன் கூறியது தான் கனடாவில் இருந்து வந்திருக்கிறேன் என ஒரு குடும்பத்தாரிடம் சொன்னபோது ஓம் நீங்கள் அகதிகள் அனாதைகள் என எங்களுக்கு உதவுவதாக விழாக்கள் வைச்சு காசை சேர்த்து அதிலை நீங்கள் செல-வழிச்சுப் போட்டு மிச்சம்தானே கொஞ்ச நஞ்சம் அனுப்புறியள். நீங்கள் கையிலை செல் (போனுடன்) திரியுங்கோ இஞ்சை எத்தினை பேர் உடம்பிலை பாஞ்ச செல்(துகள்களுடன்) வாழ்ந்து கொண்டிருக்கினம்...என அழுதழுது சொன்னது கேட்டு தானே அழுதுவிட்டேன் எனத் தாமோதரம் சொன்னதை பலருக்கு உலகர் சொன்னது அங்குள்ள நிலைமை தெரியாது சீரியலும் சினிமாவும் பார்க்கும் பலருக்கு சில விடயங்கள் அப்போதான் புரிந்தது.



இயற்கையின் சீற்றம்....யாராலும் தடுக்க முடியாது. கனடாவில் கடந்த சில வாரங்கள் பல பகுதிகளில் ஏற்பட்ட மழை வெள்ளம் பல குடும்பங்களை இடம்பெயர வைத்தது. நிவாரண வேலைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. பல பகுதிகளில் இராணுவத்தினர் மக்களோடு மக்களாகப் பெரும்பணி புரிந்து வருகின்றனர்.

யூன் 1..15 ஞாபகம் வருகிறதா?



2. சர்வதேச குழந்தைகள் தினம்.

3. பண்டிதர் தா. முருகேசுபிள்ளை நினைவுநாள்.




5. உரும்பிராய் பொன் சிவகுமாரன் 1974 இல் பொலீஸ் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி தன் இன்னுயிரை மாய்த்த தினம்.

5. உலக சுற்றுச்சூழல் நாள்

5. மு. சிவசிதம்பரம் நினைவுதினம் (2002) தமிழர் கூட்டணித்தலைவர்

6. 1930 இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது.



7. உலகக் கடல் நாள்

11. ஈழத்துப்புலவர் சோ இளமுருகனார் (நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் (1975) (ஈழத்து சிதம்பர புராணத்தை எழுதியவர்)



12. உலகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புதினம்.

14. ஈழத்துப் பெரியார் தென் புலோலியூர் கந்தமுருகேசனார் நினைவுதினம் 1965 (1902-1965) (வறுமையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாமலும் 25 வயதில் கால்கள் வலுவிழந்ததாலும் வீட்டையே திண்ணைப் பள்ளிக்கூடமாக்கி பலருக்கு கல்வி போதித்தவர்)



15. ஆன்மீகவாதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம் (1925-2008)


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
$5 Free Lycachat credit when you download
Lycachat
ஒருவருட
இணைப்புச் சந்தா
$99
மட்டுமே
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
$99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
INDIA CANADA USA
INCLUDED
TENTKOTTA
EROSNOW
கடம்பன்
மாநகரம்
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
iPhone & iPad
Tablet & Mobile
App Store
Google Play
உங்கள் MOBILE DEVICE இல்
TENTKOTTA மற்றும் EROSNOW Apps ஐ
download செய்து திரைப்படங்களை
பார்த்து மகிழுங்கள்
Google play
App Store
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart TV
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 931 1745
www.lycatv.tv

Ajax
CREMATORIUM & VISITATION CENTRE INC.
Crematorium Operated by Park Lawn Corp.

# Now Open in Ajax


## New Crematorium / Visitation Centre



**Serving our Community at:**
384 Finley Avenue Ajax, ON L1S 2E3
Tel: 289-372-3300 / *info@acvc.info*

**பார்வைக்கு வைக்கும் இடமும் தகனம் செய்யும் இடமும் ஒரே இடத்தில் அமைந்துள்ளது**

- 500 பேர்வரை அமரக்கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய மண்டபம்.
- ஒரே இடத்தில் குறைந்த செலவுடன் நிறைந்த மன திருப்தியுடன் உங்களது அன்புக்குரியவரின் இறுதிக்கிரிகைகளை உங்களது சமய முறைப்படி நிறைவேற்றலாம்.
- தகனக்கிரிகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் நிறைவேற்றலாம்.
- 250 ற்கு மேற்பட்ட வாகனத்தரிப்பிட வசதி.
- வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.





FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice You Can Trust!
Purchase
Refinance
Renewal
PRE-QUALIFIED
PRE-APPROVED
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3682
np_57@hotmail.com
MORTGAGE ALLIANCE
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca




















Free Real Estate Class - Call: 416.321.6969










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

